www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
පක්කම් 20
දිනමුරසු වාරමලර්
ஆக.17–23,1997
11/00

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 218

## ஊடறுப்பின் மறுபக்கம்

## உருவாகும் மற்றொரு பொறி

## கள நிலவர தகவல்கள்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

## கொலைப்பட்டியல்



## நான் சொல்வதெல்லாம் உண்மை



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## செத்தாரைப்போல் தமிழும்...

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

தமிழ் மொழி அமுலாக்கலுக்கு
ஜனாதிபதி
இரண்டுமாத கால வரையறை
அறிவித்திருந்தார்.

காலவரையறை
முடிவை நெருங்கிவிட்டது.
மாற்றங்களை மட்டும்
நாம் அறிந்தோமில்லை!

மொழி அமுலாக்கல்
விடயத்தில்
முன்னாள் ஜனாதிபதிகள் முதல்
இந்நாள் ஜனாதிபதிவரை
எத்தனையோ அறிவிப்புக்களை
செய்துள்ளனர்.

தமிழ் மொழி அமுலாக்கல்
விடயத்தில்
அவ்வப்போது வெளியாகும்
அரசுத் தலைமைகளின்
அறிவிப்புக்கள் ஒவ்வொன்றும்-
தமிழ் பேசும் மக்கள் மீதான
அவர்களின் கரிசனையாக
பிரசார பலன் பெற்றுள்ளன!

தமிழ் மொழி மட்டும்
அரச கருமங்களில்
செத்தாரைப்போல் கிடக்கிறது!

தமிழ் மொழி அமுலாக்கலை
கண்காணிக்க
ஆணைக்குழுவும் அமைக்கப்பட்டது.

ஆணைக்குழுத் தலைவருக்கு
தமிழ் மொழி பரிச்சயமில்லை,
அக் குழுவுக்கும்
அதிகாரம் எதுவுமிருக்கவில்லை!

மொழிப் புறக்கணிப்பு
தொடர்பாக அவர்களிடம்
புகார் சொல்லச் சென்றால்,
தங்கள் பணிப்புக்கள்
அதிகாரிகளால் புறக்கணிக்கப்படுவதாக
அவர்கள் நம்மிடமே
புலம்பித் தீர்த்துவிடுவார்கள்!

அரச நிறுவனங்கள்,
அமைச்சுக்களின் காரியாலயங்கள்
போன்றவற்றில்
தமிழ் மொழி அமுலாக்கலுக்கு
தட்டெழுத்தாளர் பற்றாக்குறை
என்பதெல்லாம்
'நொண்டிக் குதிரைக்கு
சறுக்கியது சாக்கு'
என்ற கதைதான்!

அரச தொலைக்காட்சியில்
தமிழ் பேசும் அறிவிப்பாளர்கள்
இருக்கத்தான் செய்கிறார்கள்!
இருந்தும் என்ன பயன்?
உரிய நேர ஒதுக்கீடு
அங்கும் இல்லையே!

சமீபத்தில் நடைபெற்ற
டெஸ்ட் கிரிக்கெட் போட்டி
நாட்டின் முக்கிய நிகழ்வாக
புகழ்ந்து வரவேற்கப்பட்டது!

பார்வையாளர்களுக்குக்கூட
இலவச அனுமதி.
அரச தொலைக்காட்சி வர்ணனையில்
தமிழுக்கு மட்டும்
அலட்சிய அனுமதி!

நாட்டின் தலைவர்கள் பலரும்
தொலைக்காட்சியில்
கிரிக்கெட் பார்த்திருப்பர்.
தமிழுக்கு வழங்கப்பட்ட
நேர ஒதுக்கீடு
ஏன் உறுத்தவில்லை?

கடவுளே வரம் கொடுத்தாலும்
குறுக்கே நின்று தடுக்கின்ற
பூசாரிகள்போல
அதிகார வர்க்கம் இருக்கிறது!

இனவாத சிந்தனை கொண்ட
சில அதிகாரிகள்
சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டதையும்
தங்கள் திட்டத்தால்
தடுத்துக் கொண்டிருக்கிறார்கள்!

'ஏட்டுச் சுரைக்காய்கள்
கறிக்குதவாது!'
அறிவிப்புக்களை விட
ஆக்கபூர்வமான நடவடிக்கைகளே
உரிய தேவையாகும்!

அரசு உண்மையாகவே
தமிழ் மொழி அமுலாக்கலை
விரும்பி நிற்குமானால்,
அதனை நடைமுறைப்படுத்த
அதிகாரமுள்ள ஆணைக்குழுவை
உடன் நியமிக்க வேண்டும்!

குறுக்கே நிற்கும்
பூசாரிகள் மீது
தக்க நடவடிக்கை எடுக்கும்
அதிகாரம் கொடுக்கப்படவேண்டும்!

விருப்பங்களை வெளிப்படுத்தல்
மட்டும் தீர்வாகாது.
தேவையானது யாதெனில்,
இழைக்கப்படும் அநீதிகளைத்
துடைத்தெறியும்
துணிச்சலான நடவடிக்கைகள்தான்!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## என்னை நோக்கி கூப்பிடு.....!

"இந்த ஏழை கூப்பிட்டான்; கர்த்தர் கேட்டு அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்!" (சங்கீதம் 34.6)

"அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறு உத்தரவு சொல்வேன்!" (ஏசாயா 65.24)

"என் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன். கர்த்தர் என் சத்தத்தைக் கேட்டார். என் கூக்குரல் அவர் சந்நிதியில் எட்டியது." (சங்கீதம் 18.6)

"என்னை நோக்கி கூப்பிடு! அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து நீ அறியாததும், உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்!" (எரேமியா 33.3)

யோனா மீனின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டான். கர்த்தர் அவன் கூக்குரலைக் கேட்டு, மீன் அவனை வாந்திப் பண்ணும்படி செய்தார். அதனை நாம் மறந்தவர்களாக இருக்கின்றோம். எங்கள் தேவன் எப்போதும் எம்முடனேயே இருக்கின்றார். நெருக்கத்திலே அவரை நோக்கி கூப்பிடும் போது எம் சத்தத்தைக் கேட்பார் என்பதை மறந்து விடக்கூடாது. "என்னை நோக்கி கூப்பிடு" என்று கூறிய கர்த்தரை நோக்கி கூப்பிடுவோம்!

ஜே. புளோரன்ஸ், கெங்கல்ல.



## அல்குர் ஆனின் அழகிய போதனை!

கற்பு விலை போகும் காலம் இது. கற்பென்பது ஆண், பெண் இருபாலாரும் பேணிப் பாதுகாக்க வேண்டிய பொக்கிஷம். ஆனால் இன்று இவை கடைச் சரக்காக மாறிவிட்டது.

கற்பு ஒரு முறை இழக்கப்பட்டால் மீண்டும் வராது. பெண்களுக்கு கற்பு விலை மதிக்க முடியாத ஒன்று.

உலகில் தோன்றிய சகல மதங்களும் கற்பின் மகிமையையும் அதனை இழப்பதால் ஏற்படும் இழி நிலையையும் எடுத்துரைத்துள்ளன.

வான் மறையும் இதனை வன்மையாக கண்டிக்கிறது.

"தன்னம்பிக்கை கொண்டவர்களே நீங்கள் விபசாரத்திற்கு நெருங்க வேண்டாம். ஏனென்றால் நிச்சயமாக இது மானக் கேடாகவும் தீய வழியாகவும் இருக்கின்றது!"

-அல்குர் ஆன் (17:32)

ஆகவே விபசாரத்தின் மூலம் கற்பை இழந்து காலமெல்லாம் கலங்காமல் ஆண்களும், பெண்களும் அல்குர் ஆனின் அழகிய போதனையை அனுதினமும் கடைப்பிடிக்கவேண்டும்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல. 215

### பரிசுக்குரிய கவிதை



இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

### பள்ளி நோக்கி...

பெற்றோல் இல்லாத ஊர்தன்னில்
பெற்றோர் இழந்த சிறார்கள் நாம்;
கற்றால் கல்வி சிறப்பு என்று
உற்றார் சொல்லி கேட்டுள்ளோம்;
சட்டை இல்லா மேனியோடும்
சவாரி போகிறோம் பள்ளி நோக்கி...!

ஆர்.பி. பிரபாஷினி- பிக்கரிங்ஸ் ரோட், கொட்டாஞ்சேனை.

### சிறுவர் இயந்திரமோ?

சில்லறையில் விற்பனைக்கு
மொத்தமாய்க் கொள்வனவோ?
கல்லிலும் நாருரிக்க-சிறுவர்
கை கண்ட இயந்திரமோ?
பாவம், அறியாத சிட்டுக்கள்
சிரிப்போடு குதூகலிப்போ?

தர்ஷிகா கனகசிங்கம்- கல்லடி வேலூர், மட்டக்களப்பு.

### அந்த நாள் என்று வரும்?

போரணிகள் மோதலிலே
புலம் பெயர்ந்து
பேரணி போல் புறப்பட்ட
பிஞ்சுகளைப் பார்த்தேனும்
ஓரணியில் எம்மவர்கள்
ஒன்றுபடும் நாள் வருமா?

சி.மு. சுந்தரேசன்- அரசினர் வைத்தியசாலை, மஸ்கெலியா.

### பயணம்

போருக்குள் புதையுண்ட
மகிழ்வைத் தேடி...
பாருக்குள் ஒரு
பயணம்....!

தவா- நெடுந்தீவு.

### நிற்காதே ஓடு!

பெருங்குடி மகனே!
கொஞ்சம் பின்னோக்கிப் பார்!
தூரத்தே உன் மனைவி
துரத்தி வருகின்றாள்!

ஏ. முஹம்மது முஸ் அப் ரஸீன்- நிந்தவூர்-03.

### உறுதிமொழி

என்னை இல்லா விட்டாலென்ன
மண்ணை மட்டும் விடமாட்டோம்
என்னில் பலம் உள்ளமட்டும்
எம்மவரைக் கரை சேர்ப்பேன்!

'துஷாந்தி'-மாத்தளை.

## கவிதைப் போட்டி இல.218



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 23.08.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.218
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### காலம் வந்திடுமா?

முத்துபண்டா- பொடிமெனிகே,
முருகப்பன்- மாரியம்மா,
மரைக்கார்த்தம்பி- பாத்தும்மா,
மாட்டின்- றோஸ்மேரி
வாரிசுகள்-ஒன்றாய்
வலம் வரும் காலம் வந்திடாதோ?

செல்வி சு. யோகேஸ்வரி- திருகோணமலை.

### வெட்டி வேலை

உலக சாதனை
முயற்சி அல்ல;
உயிர் வாழ
முயற்சி!

சுபா வரன்-கண்டி.

### எங்கே...?

'யாப்பா பட்டுன'வும்,
'சப்புமல்புர'வாயும்,
முகவரியை தொலைத்த தேச,
மூடப்பட்ட வீதிகளில்,
இளசுகளின் பயணம்,
எங்கேயோ தெரியவில்லை!!

'இதயநிலா'- ஆரையம்பதி-03.

### மறுபடியும்!

மறுபடி
ஒரு குசேலனோ? -அப்படியானால்
வாரானோ-
ஒரு கிருஷ்ணனும்,
சமர் முடிப்பதற்கு....?

மனசு-நீர்கொழும்பு.

### புலம் பெயர்வு

பிறப்பிடமோ ஓரிடம்;
இருப்பிடமோ வேறிடம்;
நாற்புறமும் போர்ப் பயம் -இங்கே
புலம் பெயர்வோ இது புதுவிதம்!

பஷீரா முஹைடீன்- பாலையூற்று.

# வாசக(ர்)சாலை

வீரமிகு முரசே!

எம்.ஜி.ஆரின் கவர்ச்சியான தோற்றம்தான் அவரின் அரசியல் வாழ்வின் வெற்றிக்கு வழிகோலியது என்ற மாயையை உடைத்து 1984ம் ஆண்டு அன்னாரின் வயோதிபத் தோற்றத்துக்கே அதுவும் அமெரிக்க ஆஸ்பத்திரியில் நோயாளியாக இருந்த தோற்றத்துக்கே பெருவாரியாக வாக்களித்த உண்மையை ஆதாரபூர்வமாக அறிவித்தமைக்காக வாசக நெஞ்சங்களின் நன்றி. தவிர 'சினிமினி' பகுதியும் சூப்பரோ, சூப்பர் சூ சூப்பர்! தொடரட்டும் உன்பணி!

இரா. வினோத்குமார், அன்புநகர், அட்டன்.

■ ■

மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:

* நா. வெண்மதி, நீர்கொழும்பு.
* அ. அச்சுதன், மூதூர்.
* எம். ரவுஸ்டீன், கெக்கிராவ.
* மு. கவிதா, மாங்குளம்.
* சி. ஸ்ரீரவி, சிலாபம்
* வி. றம்மியா, ஆரையம்பதி-02.
* நஜிம்பாரி, பேருவளை.
* திருமதி க. கமலாம்பிகை, வவுனியா.
* எஸ். சுரேஸ்குமார், பசறை.
* சஹீட், வாழைச்சேனை.
* ஆர். கிருஷ்ணன், கொழும்பு-15.
* சு. செந்தமிழ்ச்செல்வி, உணுகலை எஸ்டேட்.
* கோ. யோகராணி, இரத்தினபுரி.
* புஷ்பா ஜெயகாந்தன், மட்/நாவற்குடா.
* ஏ. றினோஸியா,திஹாரிய.
* எம்.சி. றவூப், அக்கரைப்பற்று-06.
* கே. ஆனந்தராஜா, ஜெர்மனி.
* வி. பூபால், ஜப்பான்.
* சந்தனம் சுரேஸ்குமார், இரத்தினபுரி.
* கே. கணேசமூர்த்தி, அலவத்துகொட.
* து. லலிதா, பொகவந்தலாவ.
* ருக்ஸியா, பேருவளை.
* ச. கலாராணி, வெல்லாவெளி.
* சி. பேரின்பராஜா, இலண்டன்.
* கே. அலோசியஸ், கனடா.
* கே. நிலவன், கண்டி.
* வி. நித்தியானந்தன், நாரம்மலை.
* எஸ். வசந்தகுமார், இரத்தினபுரி.
* ஏ. காவேரி, பதுளை.
* ஜெ. சிவகுமார், அவுஸ்திரேலியா.

## பயங்கரவாதமா?

வெளிநாட்டில் இருந்து ஒருவர் இங்கு வந்து ஒரு கருத்தைச் சொன்னால் கண்களை மூடிக்கொண்டு பாராட்டுவதும், புகழ்வதுமே வழக்கமாக இருந்தது. அதற்கு மாறாக அக் கருத்தின் பொருள், அக் கருத்துச் சொல்லப்பட்ட காரணம் என்பவற்றை அறிந்து மக்கள் பக்கம் நின்று அலசல் நடத்தியிருந்தார் இராஜதந்திரி. 'பயங்கரவாதம்' வெல்ல முடியாது என்றிருந்தார் அவுஸ்திரேலிய அமைச்சர். அவர் எதனை 'பயங்கரவாதம்' என்கிறார்? அதில் பாராட்ட என்னவிருக்கிறது? எம்மினத்தின் போராட்டத்தையே கொச்சைப்படுத்திவிட்டு சென்றிருக்கிறார் அலெக்ஸாண்டர் டௌனர். இவ்வாறான பேச்சுக்களை கண்டித்தால்தான் தொடர்ந்து இவ்வாறு பேசுவதையாவது குறைத்துக் கொள்ளும் கட்டாயமாவது ஏற்படும் என்பது என் அபிப்பிராயம்.

ஜி. தேசிகன், மன்னார்.

என் இனிய முரசே!

உன் பல்லாயிரக்கணக்கான வாசகிகளில் நானும் ஒருத்தி. உன் அனைத்து அம்சங்களும் அற்புதம். என் அபிமான சிறுகதை எழுத்தாளரான களுவாஞ்சிக்குடி யோகன் (அவுஸ்திரேலியா) அவர்களுக்கு என் பாராட்டுக்களை உன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். உன் பணி தொடர நல்லாசிகள் பற்பல.

ப. பகீரதி, வவுனியா.

■ ■

என் அன்பின் தினமுரசே!

நீ சுமந்து வரும் ஆக்கங்கள் அனைத்தும் சூப்பர். அதிலும் பூலான் தேவியின் கதையோ வர வர எம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது. மற்றும் 'உடைந்த இரவு' என்னும் தொடர்கதை மிகவும் விறுவிறுப்பாக உள்ளது. மென்மேலும் உனது பணி தொடர என் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள். வாழ்க உன் பணி!

செல்வன் ஏ. சுரேஸ், கண்ணகிபுரம், மகிளூர் களுவாஞ்சிக்குடி.

■ ■



தித்திக்கும் தேன்முதை அள்ளித்தரும் முரசுக்கு எனது வந்தனங்கள்!

நீர் தரும் அனைத்து அம்சங்களும் பிரமாதம். அதிலும் வழிமேல் விழிவைத்துக் காத்திருக்க வைக்கும் கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமாரின் 'உடைந்த இரவு' ஒரே அசத்தல்.

செல்வி சசிகலா துரைநாயகம், சாம்பல்தீவு.

## சபாஷ் தந்திரி!

அன்புள்ள முரசே! இன்றைய காலகட்டத்தில் உனது அரசியல் விமர்சனங்கள் வகிக்கும் பங்கினை மறுக்கமுடியாது. அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சரின் விஜயம் தொடர்பாக 'இராஜதந்திரி' தந்த அலசல் மிக அருமை. வெகு சிறப்பாக பின்னணித் தகவல்களை புட்டுப்புட்டு வைத்த முரசுக்கு பாராட்டுக்கள்.

சோ. மரியநாயகம், கொட்டாஞ்சேனை.

## அவர் நேர்மையாளர்

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் அமரர் கந்தசாமியுடன் பழகியவன் நான். தூய்மையான நேர்மையான ஒருவர் அவர். அவரது மரணம் தொடர்பான உண்மைகள் உறங்கிக் கிடந்தன. அரசியல் தொடரில் அதனை வெளியே கொண்டுவந்த அற்புதனுக்கு நன்றி. மலசலக் குழிக்குள் அந்த மனிதரின் உடலை போட்டு மூடியது கொடுமையிலும் கொடுமை.

சி. தியாகராசா, கொழும்பு-09.

## உண்மை புரிந்தது

காணாமல் போன கந்தசாமி அவர்கள் விடயத்தை வெளிச்சம் போட்டுக் காட்டிய முரசுக்கு பாராட்டு. நானும்கூட புலிகள்தான் சூத்திரதாரிகள் என்றே நினைத்திருந்தேன். இப்போதுதான் உண்மை புரிந்தது. ஈரோசின் சந்தேகமும், அவர்கள் செய்த முடிவும் சரியானதா இல்லையா என்பதை தரவுகள் இல்லாமல் தீர்மானிக்க முடியாது என்று அற்புதன் தெரிவித்திருந்தது சரியானதே.

எம். நஜிபுல்லா (இடம்பெயர்ந்தவன்), புத்தளம்.

## சாத்தானின் வேதம்

'அன்று கண்ட பேட்டி.' இன்று அரசியல் நாகரிகம் பேசும் கூட்டணியினருக்கு சாட்டையடி. பொத்துவில் கனகர் சுடப்பட்டுக் கிடந்தபோது நலமா? என்றுகூட விசாரிக்காத நாகரிகம் எமக்குத் தெரியாதா? தங்கள் அரசியல் எதிரிகள் கொல்லப்பட்டபோது வாய்மூடியிருந்தவர்கள், இப்போது தமக்கு ஆபத்து என்றதும் நாகரிகம் பற்றி உபதேசிப்பது சாத்தான் வேதம் ஓதுவது போன்றதே.

பா. டானியல், வவுனியா.



படிப்பகம்

www.padippakam.com

# "விநியோகக் கப்பல்கள் மீது தாக்குதல் தொடரும்
# கடல் வழி விநியோகத்தை தடுப்போம்"

## விடுதலைப் புலிகள் உத்தியோகபூர்வ அறிவிப்பு!

யாழ் குடாநாட்டுக்கான கடல்வழி விநியோகம் தடுக்கப்படுவது போராட்டத்தின் அவசியம் என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

கடல் வழி விநியோகம், கப்பல் போக்குவரத்துக்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

ஆக்கிரமிப்புக்குள் உள்ள யாழ் குடாநாட்டுக்கான அரச விநியோகங்களை வழங்கி, படையினரின் இராணுவ நிர்வாகத்துக்கு உதவி புரிந்த இரண்டு கப்பல்களை அடுத்தடுத்து சிறிலங்கா அரசு இழந்துள்ளது.

1.07.97 மன்னார் கடலில் ஒரு கப்பலை கடற் புலிகள் எரித்தனர். அடுத்து 07.07.1997 அன்று வெற்றிலைக் கேணி கடற்பரப்பில் ஒரு சரக்குக் கப்பலை கடற்புலிகள் கைப்பற்றினர்.

இந்தக் கப்பல் அழிப்புக்கள் வடபுலப் படைக்கு பாரிய விநியோகப் பிரச்சனைகளை கொடுப்பதுடன் நின்றுவிடாது, அரசாங்கத்தின் பொருளாதார சுமைகளை மேலும் அதிகரித்துவிடும் என்பது நிச்சயம்.

சிறிலங்கா அரசிடம் யாழ் குடாநாட்டுக்கான அரச விநியோகங்களை மேற்கொள்ள கப்பல் வளம் சொந்தமாக இல்லை.

எனவே வெளிநாட்டு கப்பல் நிறுவனங்களுடன் உடன்பாடுகள் செய்து விநியோகப் பணிகளை சீராக்க சிறிலங்கா அரசு முயல்கிறது.

சாதாரண உடையணிந்து கடமைபுரியும் இராணுவச் சிப்பாய்போல, சிவிலியன் சரக்குக் கப்பல்களை பயன்படுத்தி அரசாங்கம் தனது இராணுவ நலனைப் பூர்த்தி செய்ய நினைக்கிறது.

எனவே, இராணுவத்தினருக்கு விநியோகத்தில் ஈடுபட்டுவந்த கப்பல்களும் விடுதலைப் போராட்டத்தின் இராணுவ இலக்குகளே ஆகும். இக் கப்பல்களை தமிழீழ கடற்பரப்பில் வைத்து அழித்து படையினருக்கு நெருக்கடி உண்டாக்குவதும், ஆக்கிரமிப்புக்கு முடிவு கட்டுவதும் புலிகளின் போர் உபாயமாகும். அத்துடன் இது போராட்டத்தின் இன்றியமையாத தேவையுமாகும்.

அதேநேரம் கப்பல்கள்மீதான இத் தாக்குதல் சம்பவங்களை குடாநாட்டு மக்களுக்கு எதிரான ஒரு நடவடிக்கையாக சித்தரிக்க அரசு முயல்கிறது.

ஆக்கிரமிப்புக்குள் இல்லாத தமிழர் பகுதிகளுக்கான அத்தியாவசியப் பொருட்களின் விநியோகங்களை திட்டமிட்டு தவிர்த்து விட்டு, தனது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு பொருட்களை விநியோகம் செய்ய முயலும் அரசின் தந்திரோபாயம் விளங்கிக் கொள்ளத்தக்கதாகும்.

படையினரின் கட்டுப்பாட்டு பகுதிகளில் வாழும் மக்கள் அனைத்தையும் பெற்று இயல்பு வாழ்க்கை வாழ்கின்றனர் என்று உலகுக்கு காட்டி ஆக்கிரமிப்பை நியாயப் படுத்தவும், மக்களுக்கான விநியோகம் என்ற போர்வையில் இராணுவ விநியோகத்தை தொடர்வதுமே அரசின் நோக்கமாகும். இந்த விநியோக தந்திரத்துக்கு விடுதலைப் போராட்டம் பலியாக முடியாது.

இவ்வாறு புலிகள் இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

# "யாழ் தரைப்பாதை திறப்பு சுருக்குக் கயிறு
# அதனை வரவேற்போர் தமிழினத் துரோகிகள்"

## விடுதலைப் புலிகளின் பத்திரிகை சாடுகிறது

புலிகள் இயக்க உத்தியோகபூர்வ பத்திரிகையான விடுதலைப் புலிகள் பத்திரிகை வன்னியில் வெளியாகியுள்ளது.

அப் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் யாழ் குடாநாட்டுக்கான தரைப் பாதை திறப்பின் நோக்கங்கள் தொடர்பாக தமது கருத்தை புலிகள் விளக்கியுள்ளனர்.

### தேவை என்ன?

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் பத்திரிகை தீட்டியுள்ள ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குடாநாட்டிற்கான வான் வழிப்பயணம் முடங்கிப் போயுள்ள இன்றைய சூழ்நிலையில், கடல்வழிப்பதை, சிரமமும் அபாயமும் நிறைந்ததாகி விட்ட இன்றைய நிலையில் ஒரு தரைவழிப்பாதை அரசுக்கு இன்றியமையாத் தேவையாகிவிட்டது.

அதாவது, குடாநாட்டில் அகலக்கால் பரப்பி நிற்கும் இராணுவத்திற்கு ஒரு தொப்புள் கொடி அவசரமாகத் தேவைப் படுகின்றது.

வவுனியா-கிளிநொச்சி நெடுஞ்சாலையை இராணுவத் தொப்புள் கொடியாகப் பயன் படுத்தி குடாநாட்டில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை உயிர்த்துடிப்புடன் வைத்திருக்க அரசு விரும்புகின்றது.

அதேவேளை, குடாநாட்டிற்கு நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தித் தீவு முழுவதும் ஆளுகைக்குள் வந்துவிட்டது என்று காட்டி பேரினவாதத்தின் அரசியல் அபிலாசைகளையும் நிறைவேற்ற அரசு துடிக்கின்றது.

குடாநாட்டில் ஒரு தொகுதிப்படை-மன்னாரில் ஒரு தொகுதிப்படை-கிழக்கில் ஒரு தொகுதிப்படை சிங்கள தேசத்தில் ஒரு தொகுதிப்படை என்று அரச படைகள் பரந்து கிடக்கின்றது. விரைவான ஒருங்கிணைப்பும், வேகமான நகர்வும் ஒரு படையின் வெற்றிக்கு மிக அவசியம், தமிழீழக் கடலும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளும் இந்த ஒருங்கிணைப்பிற்கும் நகர்விற்கும் சவாலாக நிற்கின்றன.

வவுனியா-கிளிநொச்சி நெடுஞ்சாலையைக் கைப்பற்றி தரைவழியாக இணைத்து விட்டால் மேற்குறித்த தடைகள் தகரும் என்று அரசு எதிர்பார்க்கின்றது. தேவைக் கேற்ப, இந்தப்பாதை வழியே வடக்கிற்கும்- வடக்கிற்கு வெளியேயும் துருப்புக்களை விரைவாக ஒருங்கிணைத்து நகர்த்த படைத் தலைமைக்கு வாய்ப்பேற்பட்டுவிடும். இது தமிழினத்திற்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய ஒரு இராணுவ அம்சமாகும். தமிழரின் தாயக நிலப்பரப்பைக் கூறுபோட்டுச் சிதைக்கும் பேரினவாத நோக்கமும் இதில் அடங்கியுள்ளது.

### வரவேற்பதா?

இவ்விதம் தனது இராணுவ-அரசியல் நலன்களை வென்றெடுக்கும் நோக்குடன் அரசு பாதை திறக்க முயலும்போது, கூட்டணியின் ஆனந்த சங்கரி போன்ற சில தமிழினத் துரோகிகள் அதை 'தமிழ் மக்களுக்கான வரப்பிரசாதம்' என்று திரித்துக் காட்ட முற்படுகின்றனர். வட புலத்தின், விவசாய கடல்சார் உற்பத்திகள் தென்பகுதிக்கும், தென்பகுதியில் இருந்து இறக்குமதிப் பொருட்கள் வடபகுதிக்கும் அனுப்பி தமிழ் மக்களுக்கு நன்மை செய்யவே பாதை திறக்கப்படுகின்றது என்ற பாணியில் அவர்கள் பிரசாரம் செய்து பேரினவாதத்திற்கு வால் பிடிக்கின்றனர். இந்தத் துரோகிகளின் பிரசாரத்திற்கு வலுச்சேர்ப்பது போல "குடாநாட்டின் அபிவிருத்திக்காக சீமெந்து போன்ற பொருட்களைக் கொண்டு செல்லவே தரைப்பாதை" என்று அரசும் ஒத்து ஊதுகின்றது.

அன்று சந்திரிக்கா அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையின் போது தமிழ் மக்களின் போக்குவரத்து வசதிக்காக, பூநகரி முகாமை அகற்றி, ஒரு தரைப்பாதை திறக்கும்படி கேட்டபோது அரசு அதற்கு மறுத்துவிட்டது.

ஆனால் இன்று, பலநூற்றுக்கணக்கானோரைப் பலி கொண்டு- பல பத்தாயிரம் மக்களை இடம்பெயரவைத்து, குடாநாட்டிற்கு ஒரு பாதை அமைக்க, அதே அரசு செயலில் இறங்கியுள்ளது.

அன்று பாதைத் திறப்பைத் தனது இராணுவ நலனுக்கு முரணானவிடயமாகப் பார்த்தது. இன்று, பாதைத்திறப்பு அதன் இராணுவ நலனுக்கு அத்தியாவசியமான தேவையாகிவிட்டது.

ஆகவே பாதைத் திறப்பு குடாநாட்டு மக்களின் போக்குவரத்திற்கான ஊடகமாகப் பார்ப்பது மகா தவறு. பாதை அமைப்பு முயற்சி தமிழரின் தேசிய நலனுக்கு ஊறு விளைவிக்கக்கூடியது. தமிழினத்தின் தேசிய இன அபிலாசைகளுக்கு இலக்கு வைத்து வீசியெறியப்படும் சுருக்குக் கயிறாகப் பாதை அமைப்பைப் பயன்படுத்த அரசு முயலும் என்பதைத் தமிழினம் மறக்கக்கூடாது.

# புலிகளுடன் மட்டுமே பேசவேண்டும்! – ஐ.நா. பணிப்பாளரிடம் ஜோசப் எம்.பி.

## புலிகள் இயக்க பிரமுகர்களுடன் சந்திப்பு!

தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் கருத்து வேறுபாடுகள் கிடையாது என்று கூட்டணித் தலைவர் கூறியிருந்தார். ஆனால் கூட்டணி பா.உ. திரு.ஜோசப் பரராஜசிங்கம் தனது வெளிநாட்டுப் பயணத்தில் தெரிவித்துள்ள கருத்துக்கள் கூட்டணியின் தலைவரது கருத்துக்களுக்கு மாறாகவே அமைந்துள்ளன.

"புலிகளைத் தவிர வேறு எவருடனும் பேசுவது பயன்தராது. இனப் பிரச்சனை தீர்ந்து சமாதானம் தோன்றவேண்டுமானால் புலிகளும் இலங்கை அரசும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேசவேண்டும்" என்று ஜோசப் பரராஜசிங்கம் கனடாவில் தெரிவித்துள்ளார்.

கூட்டணியினர் உட்பட ஏனைய தமிழ்க் கட்சிகள் அரசியல் தீர்வு யோசனை தொடர்பாக அரசுடன் நடத்தும் பேச்சுக்கள் பயனற்றவை என்பதை ஜோசப் பரராஜசிங்கம் ஏற்றுக்கொண்டுள்ளார். அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுக்களில் ஜோசப் பரராஜசிங்கம் கூட்டணி சார்பாக பங்கெடுப்பதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கனடா சென்ற திரு. ஜோசப்பரராஜசிங்கம் அங்குள்ள உலகத் தமிழர் இயக்க பிரமுகர்களையும் சந்தித்ததாகத் தெரிகிறது. கனடா உலகத் தமிழர் இயக்கம் புலிகள் இயக்கத்தினருக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருவது தெரிந்ததே.

கனடா பத்திரிகைகள், மற்றும் வானொலிச் சேவைக்கு அளித்த பேட்டியிலும் புலிகள் இயக்கத்தினர்தான் இலங்கைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்பதை ஜோசப் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகாரப் பணிப்பாளரையும் ஜோசப் பரராஜசிங்கம் சந்தித்திருக்கிறார். அவரிடம் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பாகவும், இலங்கை அரசும், புலிகளும் பேச்சு நடத்துவது மட்டுமே ஆரோக்கியமாக அமையும் என்றும் விளக்கி கூறியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிக்காவால் அரசியல் தீர்வை முன்னெடுக்க முடியுமா என்பதில் சந்தேகம் இருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியும் தீர்வு யோசனைகளை ஆதரிக்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கப்பல் குண்டுகள் புலிகள் கையில்!
# மறைந்த கப்பல் ஃபிரான்சில்

32 ஆயிரத்துக்கு மேற்பட்ட குண்டுகளுடன் காணாமல்போன கப்பல் ஃபிரான்ஸ் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக 'சண்டே லீடர்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை படையினருக்காக கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் குண்டுகளுடன் காணாமல்போன அக் கப்பல் தொடர்பான மர்மம் இத்துடன் முடிவுக்கு வந்திருக்கிறது. ஆனால் கப்பலில் உள்ள மோட்டார் குண்டுகள் புலிகளிடம் சென்றனவா இல்லையா என்பது மட்டும் தொடர்ந்து மர்மமாகவே இருக்கிறது.

சண்டே லீடர் வெளியிட்டுள்ள செய்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

ஸிம்பாப்வே பாதுகாப்பு அமைச்சு சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சினால் விடுத்த கட்டளையின் பிரகாரம், ஆயுதங்களை அனுப்புவதற்கு, தங்களுடைய ஆயுதங்களை வழக்கமாக விநியோகிக்கும் இஸ்ரேலிய நிறுவனத்தின் கப்பலில் ஏற்றியிருக்கிறது.

சரக்குகள் மொஸாம்பிக்கின் பெயிரா துறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டு 'ஸ்ரில்லஸ் லிம்மிசுல் விக்டோரியா' கப்பலில் ஏற்றப்பட்டன. ஜூன் 30ம் திகதி அளவில் கப்பல் மடகஸ்காரிலிருந்து புறப்பட்டிருக்கிறது. ஜூலை 7ம் திகதி கப்பல் கொழும்பை அடைந்திருக்க வேண்டும்.

அந்தக் கப்பல் கப்ரன் தனது நிறுவனமான இஸ்ரேல் நிறுவனத்துக்கு ஜூலை 10ம் திகதிக்கு முன்னரே இலங்கையின் வட பகுதியில் கப்பல் கடத்தப்பட்டு 10ம் திகதியன்று சரக்குகளை எல்.ரி.ரி.ஈ. இறக்கி விட்டதாக தகவல் அனுப்பியிருக்கிறார்.

ஆனால் இஸ்ரேல் நிறுவனம், நடந்த சம்பவத்தை, ஸிம்பாப்வே பாதுகாப்பு அமைச்சின் ஆயுதத் தொழிற்சாலை நிர்வாகத்துக்கு சம்பவம் நடைபெற்று ஏழு நாட்களின் பின்னரே அறிவித்துள்ளது.

கப்பல் கப்ரனுடன் மேலும் 22 மாலுமிகளையும் புலிகள் 24 மணிநேரத்தின் பின்னர்-11ம் திகதியே விடுதலை செய்தனராம். இஸ்ரேலிய கப்பல் நிறுவனம் ஸிம்பாப்வே பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பிய தஸ்தாவேஜுகளில், தாம் இனிமேல் சிறிலங்காவுக்கு சரக்குகளை ஏற்றிச் செல்லும் பணியினை மேற்கொள்ளப்போவதில்லை என்றும் அறிவித்துள்ளதாம்.

ஃபிரான்சில் உள்ள ஓரிடத்தில் மேற்படி கப்பல் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டதாகவும், கப்பல் கப்ரன் எங்கிருக்கிறார் என்று தெரியாதெனவும் கூறப்படுகிறது.

இஸ்ரேல் கப்பல்காரர்கள் மோட்டார் குண்டுகளை வேறு யாருக்கோ கள்ளத்தனமாக விற்றுவிட்டு பழியை புலிகள் மீது சுமத்துகிறார்களோ என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

இதேவேளையில் ஸிம்பாப்வே தொழிற்சாலையிலிருந்து மற்றுமொரு ஆயுதக்கப்பல் கடந்தவாரம் 30 கொள்கலன்களில் ஆயுதங்களை கொழும்புத் துறைமுகத்தில் இறக்கியிருக்கிறதாம்.

# கல்லூரி வளவில் ஷெல்கள்
## பரீட்சை எழுதியோர் பதுங்கினர்!

க.பொ.த. (உ.த) பரீட்சை ஆரம்பமான தினத்தன்று முள்ளியவளை மாணவர்களுக்கு வித்தியாசமான அனுபவம் ஏற்பட்டது.

4.08.97 அன்று க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் ஆரம்பமாகின. முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் மாணவர்கள் பரீட்சை எழுதிக் கொண்டிருந்தனர்.

அப்போது கல்லூரி வளவுக்குள் ஷெல்கள் விழுந்து வெடித்தன. உடனே பரீட்சை எழுதிய மாணவர்கள் வீழ்ந்து படுத்து பாதுகாப்புத் தேடிக்கொண்டார்கள். அடுத்தடுத்து ஐந்து ஷெல்கள் கல்லூரி வளவுக்குள் விழுந்து வெடித்தன.

ஏற்கனவே பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து கஷ்டப்பட்டு படித்துத்தான் பரீட்சை எழுத வேண்டியிருக்கிறது. இந்நிலையில் ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டால் மாணவர்கள் மனநிலை பாதிப்படைவது தவிர்க்க முடியாது என்கிறார்கள் ஆசிரியர்கள்.

# படையினர் குடும்பங்களுக்கு முன்னுரிமை
## அரச திணைக்களங்களுக்கு உத்தரவு!

(திருமலை நிருபர்)

படைத்துறை சார்ந்தோரின் குடும்ப உறுப்பினர்களுக்கு அரச அலுவல்கள் தொடர்பாக முன்னுரிமையும் சலுகையும் அளிக்குமாறு சகல திணைக்கள ஊழியர்களுக்கும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

"நாட்டின் ஐக்கியத்துக்கும் சமாதானத்துக்கும் இடையூறாகவிருக்கும் ஆயுதந்தாங்கிய பிரிவினைவாதிகளுக்கெதிராக வடக்கு-கிழக்கில் போராடும் முப்படையினர் பொலிசார் ஆகியோரின் குடும்ப உறுப்பினர்களுக்கு முன்னுரிமையும் சலுகையும் அளிக்கப்படவேண்டும்." என்று கூறப்பட்டுள்ளது.

வெண்தாமரை இயக்கத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை இவர்கள் வைத்திருப்பார்கள் என்றும், அமைச்சர்களிலோ அரச திணைக்களங்களிலோ அலுவல் நிமித்தம் அவர்கள் வருமிடத்து அடையாளங்கண்டு முதலிடம் வழங்கப்படவேண்டுமெனப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வுத்தரவைக் கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 17/97 சகல திணைக்களங்களுக்கும் அரசினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# சிப்பாய் சுட்டதில் சார்ஜன் பலி

யாழ் குடாநாட்டில் இராணுவ சிப்பாய் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இராணுவ சார்ஜன் ஒருவர் பலியானார். 6.08.97 அன்று இச்சம்பவம் நடைபெற்றது.

முகாம் பாதுகாப்புக்காக முகாமின் முன் பகுதியில் மூன்றுபிரிவாக பதுங்கி இராணுவத்தினர் நிலையெடுத்திருந்தனர். ஒரு பிரிவின் தகவல் தொடர்பு சாதனம் வேலை செய்யவில்லை. அதனால் அப்பிரிவுக்கு பொறுப்பான சார்ஜன் மற்றைய பிரிவை நோக்கி ஊர்ந்து ஊர்ந்து சென்றிருக்கிறார். அப்போது நேரம் இரவு 10.30 மணி. மற்றைய பிரிவைச் சேர்ந்த பதுங்கியிருந்த சிப்பாய்க்கு ஊர்ந்து வருவது சார்ஜன் என்பது இருட்டில் தெரியவில்லை. புலிகள்தான் வருகிறார்கள் என்று நினைத்து சுட்டுவிட்டார். துப்பாக்கிச் சூட்டில் சார்ஜன் பலியானார். திசாநாயக்கா என்ற சார்ஜனே பலியானவராவார்.

# மன்னார் மோதல்

மன்னார் முருங்கனில் 07.08.97 அன்று புலிகள் இயக்கத்தினர் கிளைமோர் தாக்குதல் ஒன்றை நடத்தினார்கள். காலை 7.15 மணியளவில் சிலாவத்தை வீதியில்வைத்து இத் தாக்குதல் நடத்தப்பட்டது. மூன்று இராணுவத்தினர் பலியானதாகவும், தமது தரப்பில் இழப்புக்கள் எதுவும் இல்லை எனவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

# மீண்டு வந்தவர்களுக்கு துப்பாக்கிச்சூடு
## அடையாளம் தெரியாத மற்றொரு தாக்குதல்!

ஓமந்தைக்கு வடக்கே ஆகஸ்ட் 1ம் திகதி புலிகள் தாக்குதல் தொடுத்ததைத் தொடர்ந்து அங்கு காவலிலிருந்த பொலிசார் பலர் அருகிலுள்ள காடுகளுக்குள் தப்பி ஓடிவிட்டனர். அடுத்தநாள் ஓரளவு அமளிகள் ஓய்ந்த பின்னர் தப்பிச் சென்றவர்களில் சிலர் மீண்டும் தமது அரண் நோக்கித் திரும்பியுள்ளனர். ஏற்கனவே காலியாகக் கிடந்த அரணைப் பாதுகாக்க புதிதாக பொலிசாரும் இராணுவத்தினரும் அனுப்பப்பட்டிருந்தனர்.

தப்பிச் சென்று திரும்பி வந்தவர்களை புலிகள் என நினைத்த புதியவர்கள் துப்பாக்கிகளால் சரமாரியாகச் சுட ஆரம்பித்தனர். இதில் இரண்டு பொலிசார் கொல்லப்பட்டனர். சிலர் காயமடைந்தனர். வேறுபலர் தப்பிச்சென்று ஒளிந்து கொண்டனர்.

கடந்த மாதத்திலும் ஜெயசிக்குறுய் முன்னரங்கப் படைகளிலும் தங்கள் அணிகளைத் தாங்களே தாக்கிய மற்றுமொரு சம்பவமும் இடம்பெற்றது. படையினருக்குத் தெரியாமல் வேறோர் புறத்திலிருந்து கடற்படையைச் சேர்ந்த சிலர் அடுத்த முகாம் நோக்கிவந்து கொண்டிருந்தனர். இவர்கள் கடற்படையைச் சேர்ந்தவர்கள். இவர்களையும் எல்.ரி.ரி.ஈ. போராளிகளே என்று கருதி இராணுவத்தினர் வேட்டுக்களைத் தீர்த்தனர். இதில் கடற்படையைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டனர்.

# கூட்டணிப் பிரமுகரின் சமரச முயற்சி?
## திருமலை கிளைத் தலைவர் தூதரா?

தமிழர் விடுதலைக் கூட்டணி திருமலை கிளைத் தலைவர் ஈழத்துநாதன் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரது பாரியாரும் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.

ஈழத்துநாதன் புலிகள் இயக்கத்தின் சாள்ஸ் அன்ரனிப் படைப்பிரிவுத் தளபதியான சொர்ணத்தின் உறவினர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழத்துநாதன் மூலமாக திருமலை மாவட்ட முன்னாள் பா.உ ஒருவர் பற்றிய புகார்கள் அவரது போட்டி அரசியல்வாதி மூலம் புலிகள் இயக்கத்தினருக்கு தெரிவிக்கப்பட்டு வந்ததாம். குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவி விலகவேண்டும் என்று திருமலைக் கிளையினர் தீர்மானமும் நிறைவேற்றி இருந்தனர் என்பது தெரிந்ததே. பின்னர் அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் மறைந்த பின்னர் ஈழத்து நாதன் தலைமையில்தான் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

காலியான இடத்தை உடனடியாக பெற்றுக்கொண்டால் மக்களிடம் சந்தேகம் ஏற்படும் என்று ஒரு முக்கியஸ்தர் கருதுகிறாராம். புலிகளின் சம்மதம் பெறவும் அவர் விரும்பியுள்ளார். ஈழத்துநாதன் குறிப்பிட்ட முக்கியஸ்தருக்காக புலிகளிடம் பேசியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

திருமலை முன்னாள் பா.உ தங்கத்துரை கொலை தொடர்பாக கைதுசெய்யப்பட்டுள்ள கஜன் என்பவரது தந்தையும் ஈழத்துநாதனும் நெருங்கிய சகாக்கள் என்பதை 'முரசு' முன்னரே குறிப்பிட்டிருந்தது தெரிந்ததே.

மற்றொரு தகவல்படி முல்லைத்தீவுக்கு சென்று புலிகளின் தலைமைப்பீடத்தை சந்திக்க நாதன் முயன்றதாகவும், தலைமைப் பீடம் நாதனை சந்திக்க மறுத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. ஒரு பிரமுகரின் பதவி ஏற்பு தொடர்பாக பேசுவதற்காகவே நாதன் அம் முயற்சியில் இறங்கினாராம்.

கூட்டணியின் அப் பிரமுகர் தொடர்பாகவும், அவரது சில செயற்பாடுகள் தொடர்பாகவும் புலிகளின் தலைமைப்பீடம் அதிருப்தியில் இருக்கிறதாம். அரசியல் தீர்வுப் பொதி விடயத்தில் முன்னணியில் நிற்பவர்களில் குறிப்பிட்ட பிரமுகரும் ஒருவர் என்ற விபரம் புலிகளின் தலைமைப் பீடத்திற்கு தெரியுமாம்.

# பதவி உயர்வுகள் வழங்கப்படும்

வட-கிழக்கில் கடமைபுரியும் படை அணித்தலைவர்களுக்கு பதவி உயர்வுகளும் இடமாற்றங்களும் அண்மையில் வழங்கப்படவிருப்பதாக பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த விபரமறிந்தோர் கூறுகின்றனர்.

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்ட படை அணிகளைவிட 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கைக்கு மிகக்கூடுதலான அணிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. இதற்கு இரு படைப் பிரிவுகள் முன்னேறிச் செல்லவும் ஒரு பிரிவு கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை அரண் செய்வதற்குமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆனால் எல்.ரி.ரி.ஈ.யினரின் பலமுனை தாக்குதல்களைச் சமாளிப்பதில் கடுமையான தாக்கம் இருந்தமையினால் கடற்படையைச் சேர்ந்த 4 இன்ஃபென்டரி பட்டாலியன்களும் விமானப்படையைச் சேர்ந்த 2000 பேரும் பல்லாயிரக்கணக்கான பொலிசாரும் பின்னர் அணிகளில் சேர்க்கப்பட வேண்டியதாயிற்று என்று இராணுவத்தலைமைப்பீடம் அறிவித்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# ஒப்பந்தக் கம்பெனியின் ஏமாற்றுவேலை!

## அதிகாரிகள் சிலருக்கும் சம்பந்தம்?

(திருமலை நிருபர்)

வடக்கு-கிழக்கு மாகாண சபையை கொழும்பைச் சேர்ந்த கட்டட ஒப்பந்தக் கம்பெனி ஒன்று ஏமாற்ற முயன்றுள்ளதா? சுமார் நாற்பது மில்லியன் ரூபா அளவிலான கட்டட ஒப்பந்தம் ஒன்றுக்காக இந்தக் கம்பெனி கொழும்பில் இயங்கும் பிரபல வங்கியொன்றின் பெயரைப் பயன்படுத்திப் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்துள்ளதாக அறியவந்துள்ளது.

இது பற்றிய பூரண விபரமாவது: திருக்கோணமலை உப்புவெளியில் நாற்பது மில்லியன் ரூபாவுக்கான கட்டடம் ஒன்றுக்கு வடக்கு-கிழக்கு மாகாணசபை ஒப்பந்தக்காரர்களைக் கோரியிருந்தது. திருக்கோணமலையைச் சேர்ந்த இரண்டு கம்பெனிகளும், கொழும்பைச் சேர்ந்த மூன்று கம்பெனிகளும் இதற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்தன. முதற் சுற்றிலேயே திருக்கோணமலையைச் சேர்ந்த கம்பெனிகள் பொருளாதார பலமின்மை எனக் காரணம் காட்டி நிராகரிக்கப்பட்டன.

நிராகரிக்கப்பட்ட கம்பெனிகளைப் பொறுத்தமட்டில் அவை அதிருப்தி கொண்டுள்ளன. 'இத்தகைய நிராகரிப்பு முறையானதல்ல. இதனை விடக்கூடுதலான தொகையுள்ள பணிகளைச் செய்யுமளவுக்கு நிரூபிக்கப்பட்டதும் சட்டரீதியானதுமான வசதிகளை உடையவர்கள் நாங்கள்' என்பது அவர்களது நிலைப்பாடு.

கொழும்பிலுள்ள கம்பெனி ஒன்றுக்கு கட்டடம் அமைக்கும் உரிமை வழங்கப்பட்டது. இதற்காக அக்கம்பெனி வங்கிப் பிணைக்காகப் போலி ஆவணங்களைத் தயார் செய்து சமர்ப்பித்திருந்தமை இப்போது கண்டுபிடிக்கப்பட்டுப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

திருக்கோணமலைக் கம்பெனிகள் நிராகரிக்கப்பட்டதும், சரியான ஆய்வுகளின்றி கொழும்பைச் சேர்ந்த கம்பெனி ஒன்றுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டதும் சில அதிகாரிகளின் 'பொக்கற்றை' நிரப்பவா என்ற சந்தேகம் மக்களிடையே பலமாக எழுந்துள்ளது.

# தனிச் சிங்களத்தில் விண்ணப்பப் படிவங்கள்

வானொலிப் பெட்டிகள் சம்பந்தமான விபரங்களைத் திரட்டுவதற்காக கிராம உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள படிவங்கள் தனிச்சிங்களத்திலேயே காணப்படுகின்றன.

திருக்கோணமலை பிரதேசச் செயலாளர் மட்டத்திலும் இத் தனிச்சிங்களப் படிவங்களே விநியோகிக்கப்பட்டுள்ளன. 42 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவில் 36 பிரிவுகள் தமிழ் பேசும் கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

'முரசு' கிராம உத்தியோகத்தர் ஒருவருடன் தொடர்பு கொண்டு இதுபற்றிக் கேட்டபோது, "விளங்காத மொழியில் படிவங்களை வைத்துக் கொண்டு நாங்கள் திணறுவது ஒருபுறம் இருக்கட்டும்; இரண்டு மாதங்களில் எங்கும் தமிழில் கருமமாற்ற வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன என்ற அரசாங்கத்தின் அறிவிப்பின் முதற் கட்டம் இதுதானா?" என்று வருத்தத்துடன் வினவினார்.

தமிழ்ப் படிவங்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு பிரதேசச் செயலாளர்களுடையதே என அவ்வலுவலக அதிகாரியொருவரும் தெரிவித்தார்.

ඛළසේනා මූලස්ථානය සහ සම්බන්ධීකරණ මූලස්ථානය

பிறிகேட்டும் இனணப்பு தலைனமதினலயம்

BRIGADE AND COORDINATING HEADQUARTERS

இலங்கை பாதுகாப்பு படையின் பிரிகேட் இணைப்பு தலைமைக் காரியாலயத்தின் கடிதத் தலைப்பே இதுவாகும். அதுதான் தமிழில் 'பிறிகேட்டும் இனணப்பு தலைனமதினலயம்' என்று அச்சிடப்பட்டுள்ளது. இவ்வாறான தமிழ் மொழி அமுலாக்கல் தேவைதானா?

இரண்டுமாத காலத்துக்குள் தமிழ்மொழி அமுலாக்கலுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக செய்திகள் வந்தன. அந்த காலவரையறையும் முடியப் போகிறது. பாராளுமன்றத்தால் அதன் உறுப்பினர்களுக்கு அனுப்பப்படும் கடித உறைகள் இன்று வரை தனிச் சிங்களத்திலேயே காணப்படுகின்றன. அரச அச்சகத்தால் அனுப்பப்படும் கடித உறைகளும் அவ்வாறே உள்ளன. பாராளுமன்றத்தால் அனுப்பப்படும் கடித உறை கீழே காணப்படுகிறது.

රාජ්‍ය සේවය පිණිසයි

# 'செலவு நிறைந்த வேடிக்கை'

திருக்கோணமலைப் பட்டினமும் சூழலும் பிரதேச சபை உறுப்பினர்களின் மாதாந்தக் கூட்டம் இனிமேல் வெள்ளை மணலிலுள்ள உப அலுவலகத்தில் நடைபெறும்.

இரண்டு தமிழ் உறுப்பினர்களின் வெளிநடப்புக்கிடையே 'திடுதிப்' பென்று இவ்வாறான தீர்மானமொன்று 30/7/97 உப்புவெளிப் பிரதேசசபைக் கட்டடத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆறு ஐ.தே.க. உறுப்பினர்களையும் ஒரு பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினரையும் இரண்டு சுயேச்சை உறுப்பினர்களையும் கொண்ட இச்சபையின் தலைவராகப் பணியாற்றிய ஐ.தே.க. உறுப்பினர் ஜனாப் முஜிப் என்பவர் அண்மையில் பதவி விலகியதைத் தொடர்ந்து திரு.பி.கொடிப்பிலி என்பவர் தலைவராக நியமிக்கப்பட்டதன் பின்னர் இடம்பெற்ற முதற் கட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது.

வெளிநடப்புச் செய்த சுயேச்சை உறுப்பினர்களில் ஒருவருடன் முரசு தொடர்பு கொண்டு இதுபற்றிக் கேட்டபோது, "பிரதேச சபை உறுப்பினர்கள் எவருக்காவது இங்கே அச்சுறுத்தல் எதுவும் இருந்ததாக நான் அறியவில்லை. எல்லாம் அரசியல் ஏமாற்று. வசதியான தலைமையகத்தை விட்டு வசதி குறைந்த உப அலுவலகத்தில் கூட்டம் நடத்துவது செலவு நிறைந்த ஒரு வேடிக்கை" என்று கூறினார்.

# பரீட்சை வினாத்தாள்கள்

(ஏறாவூர் நிருபர்)

கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 1996ம் ஆண்டு வரை நடைபெற்றுள்ள க.பொ.த. (சா/த), க.பொ.த. (உ/த) ஆகிய பரீட்சை வினாத்தாள்களைத் தொகுத்து நூல் உருவில் தயாரித்து குறைந்த விலையில் வெளியிட்டுள்ளது.

இவ்வினாத்தாள் புத்தகங்களை இசுறு பாயவிலும், கொழும்பில் ஒல்கொட் மாவத்தையிலுள்ள கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் விற்பனைக் கிளையிலும் பொதுமக்கள் வாங்க முடியும்.

# தோட்டப் பாடசாலைகளில் பல பாடங்களுக்கு ஆசிரியரில்லை!

தோட்டப்புறத் தமிழ்ப்பாடசாலைகளுக்கு இற்றைவரை பல குறைபாடுகள் காணப்படுவது சகலரும் அறிந்ததே. ஆனால் சம்பந்தப்பட்டோர் மாத்திரம் இவற்றையெல்லாம் கரிசனையில் எடுத்துக் கொள்ளாது காலம் கடத்துகிறார்கள்.

பதுளை-லுணுகலையிலுள்ள ஒரேயொரு தமிழ் மகாவித்தியாலயத்தில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. இது மகா வித்தியாலயமாக இருந்தபோதும் விஞ்ஞானம், விவசாயம், இஸ்லாம், வர்த்தகம், இந்து சமயம், கணிதம் போன்ற பாடங்களைப் போதிக்க ஒரு ஆசிரியர் தானும் இல்லை. பாடசாலையில் நடனம், சங்கீதம் ஆகிய நிகழ்ச்சிகளை நடத்த ஒரு மண்டப வசதியில்லை. இக்குறை பாடுகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாக பாடசாலை அதிபர் திரு.ஏ.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது இப்படியிருக்க, தோட்டப் புறங்களில் ஒரு பூச்சிக்கடி காணப்படுகிறது. லுணுகலை- ஹோலண்ட்ஸ் தமிழ் மேல் வித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களும் இக்கடியினால் அவஸ்தையுறுகிறார்கள்.

இதனிடையே பதுளை- லெஜர்வத்தை தோட்டப் பகுதியில் தேயிலைக் கொழுந்து கொய்து கொண்டிருந்த ஆறுபேர் ஒரு வித விஷ அட்டைக்கடியினால் வலிப்பு உண்டாகிப் பாதிக்கப்பட்டார்கள்.

விஷத் தன்மையுள்ள இந்த அட்டைகள் கடித்ததும் உடனே அவை ஓடி இலைச் சருகுகளுக்குள் மறைந்து விடுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

தேயிலைக் கொழுந்து கொய்யும் பெண்கள் இந்த வித விஷ அட்டைகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள புகையிலை அல்லது உப்பு நிரப்பப்பட்ட பைகளைக் கொண்டுசெல்லுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தோட்ட நிருவாகம் இவ்வித விஷ அட்டைகளையும், பூச்சிகளையும் அழிப்பதற்குரிய இரசாயனங்களைத் தெளிக்கத் தவறியமையே இதற்குக் காரணமென்று தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

# மின்சாரம் இல்லாத கிராமம்

மூதூரைச் சேர்ந்த கடற்கரைச் சேனைக் கிராமத்துக்கு இன்றுவரை மின்சார வசதிகள் செய்து தரப்படவில்லை என்று அந்தப்பகுதி மக்கள் குமுறுகிறார்கள்.

கடற்கரைச் சேனைக்கப்பால் சம்பூர்வரை நீடிக்கப்பட்டிருக்கும் மின்சார வசதி அரைமைலுக்கும் குறைவான தூரத்துக்கு இணைப்பு வழங்குவதன் மூலம் தாங்களும் அனுபவிக்க வசதி செய்து தரும்படி கேட்கிறார்கள்.

இந்தக் கிராமத்தில் சுமார் நானூறு குடும்பங்கள் வரை வாழ்கிறார்கள். பாடசாலைப் பிள்ளைகள் உட்படப் பலர் மின்சாரம் இல்லாத நிலையில் பாதிப்படைந்துள்ளனர்.

இக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்கப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கின்ற போதிலும் இன்றுவரை மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்காதது கவலைக்குரியது என அப்பகுதிப் பெரியவர் ஒருவர் கூறினார்.


## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)

மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதித்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயதினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரயின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரண்மான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

**SEXUAL DISORDERS**

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான்வீரியம் உள்ள ஆண்மகனாக்கி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

**வெளிநாட்டில் வசிப்போருக்கு**

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத் தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம் பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேற்று இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

**கொழும்பில் ஆகஸ்ட் 19 முதல் 31 வரை**

Dr. P. Arumugam. Ahamed Tourist inn. Bang Building No:10, Reclamation Road. (Entrance Bankshall St. Opposite Ranjanas) Colombo 11. T.P. 436383, 436390 கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 078-71101.

கொழும்பில் முன்கூட்டி பதிவு செய்யவும்.

**ஓட்டமாவடி செப்டம்பர் 6, 7ம் தினங்களில்**

Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி.

**கல்முனையில் செப்டம்பர் 13,14,15,16, தினங்களில்**

T.M.M. பாமசியிலும் T.P. 065/29329

மற்ற நாட்களில் **Dr. P. Arumugam** No. 33, Tissa Weerasingam Sq., Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.





**மலையாள மாந்திரிகம்**



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச் சேவையில் ,கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது. பிரிந்தவரை அழைத்து எடுப்பது. திருமண தோஷத்திட்கு சாந்தி பரிகாரம் செய்வது பிறந்த திகதி மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

*தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

**தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி J.D.G.A.N&JP**

**ஸ்ரீ துர்காதேவி மாந்திரிக உச்சாட்டபீடம்**

இல. 162, கொட்டாஞ்சேனை வீதி. மே பீல்ட் ரோட், கொழும்பு-13

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி Fax-00941342464 Tel-00941431137

உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்- 342463-344831


# விளம்பரப் பகுதி


## அற்புதம்!

கருஞ்சீரகத்தின் மருத்துவத்தன்மைகள்

பல நூற்றாண்டுகளாக கருஞ்சீரகத்தின் மருத்துவத்தன்மைகள் அறியப்பட்டு வந்துள்ளன. அதனால்தான் சுத்தமான, இயற்கையான பரகா கருஞ்சீரக எண்ணையின் ஒவ்வொரு துளியிலும் அநேக நோய்களுக்கு எதிரான பாதுகாப்புத் தன்மை உண்டு.





**பரகா**
கருஞ்சீரக எண்ணை

EXPO LANKA வின் தரமான தயாரிப்பு

* தலைவலி, பல்வலி, இருமல், ஜலதோஷம் ஆகியவைகளுக்கு உடனடி நிவாரணம்.
* நீரிழிவு, இருதய நோய்களுக்கு நிவாரணம்,
* முதுகுவலி, வாதநோய்களுக்கு.
* சரீரத்தின் நோய் எதிர்ப்புத் தன்மையை ஊக்குவித்து, நோய்களிற்கு எதிரான சக்தியை அதிகரிக்கிறது.

*25 மி.லீ, 50 மி.லீ, 100 மி.லீ, ஆகிய அளவுகளில் எல்லா பாமசிகளிலும், சுப்பர்மார்கட்களிலும் கிடைக்கிறது.*

VISTA

விலை ரூபா 65/- ல் இருந்து

அற்புத மூலிகை நிவாரணி

ஆயுர்வேத திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.



## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925=

**ஞான சுந்தர வைத்தியசாலை**

187, செட்டியார் தெரு, கொழும்பு 11, போன்: 421398



## பழுது பார்த்தல்

வீடியோ கமெரா, போட்டோ கமெரா திருத்திக்கொடுக்கப்படும்

**நியூ விக்ரேஸ்**
**New Victors**

40 1/3, Galle Road, Colombo-06.

(Hongkongbank அருகாமையில்)

T.P-594492



## UNION

யூனியன் மோட்டிஸ் கதவு பூட்டுக்கள்

Single, Double, Night Latch & Sliding Locks, (English Origin)

**றம்சன்ஸ்**

443, பழைய சோனகத் தெரு. கொழும்பு - 12.

தொலைபேசி - 431511, 434411



## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள் வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S. MANI**

144 2/1, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 6.

T.P. 586218




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# ஊடறுப்புக்களும் - பின்னடைவுகளும்

## புலிகள் சொல்லும் இராணுவப் பொன்மொழி!

நாரதர்

வடக்கில் பருவ மழை தொடங்க முன்னர் புலிகளின் வன்னித் தளத்தை முற்றுகையிடுவதுடன், இடையால் ஊடறுத்து தரைப்பாதையையும் திறந்து விட்டால் எத்தனை நன்றாக இருக்கும் என்று அரச தரப்புக்கு ஆதங்கம் இருக்கிறது.

புலிகள் இரண்டு ஊடறுப்புத் தாக்குதல்களை தொடுத்த பின்னரும் படை நகர்வுக்கு உத்தரவு பறந்ததும் அந்த ஆதங்கத்தால்தான்.

'ஜெயசிக்குறுய்' படையினர் தொடர்ந்து சந்தித்த மூன்று ஊடறுப்பு அழித்தொழிப்புக்கள் படையினரின் ஆட்பலத்தில் ஏற்படுத்திய வீழ்ச்சியைவிட, மனோபலத்தில் பல மடங்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

புலிகளின் வன்னித்தளம் நோக்கி 'ஜெயசிக்குறுய்' படையினர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் பொறிக்குள் கால்வைப்பது மாதிரித்தான். இதனை படை உயர் அதிகாரிகள் பலரே நன்கு உணர்ந்து வைத்திருக்கிறார்கள்.

சமீபத்தில் ஓமந்தை இறம்பைக் குளத்தில் புலிகள் நடத்திய மூன்றாவது அழித்தொழிப்புச் சமரைப் பற்றிய விபரங்களை தமது வசதிக்கேற்பவே அரச தரப்பினர் வெளியிட்டனர்.

புலிகளின் நூறு உடல்களை கைப்பற்றினோம் என்றெல்லாம் கூறியதெல்லாம் வெறும் கதைதான். ஆக 39 புலிகளது சடலங்களை மட்டுமே படையினரால் கண்டெடுக்க முடிந்தது.

உள்ளே நன்றாக ஊடுருவி மறைவான இடங்களுக்குள் பதுங்கு நிலை எடுத்தபோது கண்ணிவெடிகளிலும் துப்பாக்கிச் சூடுகளிலும் சிக்கி அவர்கள் மடிந்திருக்கலாம். ஏனைய புலிகளின் அணிகளின் கண்களில் படாத மறைவிடங்களில் பலியாகி கிடந்தமையால் அந்த உடல்களை ஏனைய புலிகளால் கண்டெடுத்து கொண்டுசெல்ல இயலவில்லை.

ஊடுருவித் தாக்கிவிட்டு புலிகள் சென்றபோது புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த இரண்டு கிலோமீட்டர் பகுதி வெறிச்சோடிக் கிடந்தது. ஆயுதங்களைக் கைவிட்டு அங்குள்ள படையினரும், பொலிசாரும் பின்வாங்கிச் சென்றிருந்தனர்.

அதனால்தான் புலிகள் எதிர்பார்த்து வந்தளவுக்கு இன்னமும் அதிகமான இழப்பை படையினருக்குள் ஏற்படுத்த இயலவில்லை.

நிலமை இப்படியிருக்க, புலிகள் ஆயுதங்களையும் கைவிட்டுப்போனதாக ஒரு தொகை ஆயுதக் குவியலையும் காண்பித்து பிரசாரம் செய்யப்பட்டது.

ஏற்கனவே இரண்டு ஊடறுப்புக்களை சந்தித்து பாரிய இழப்புக்களை 'ஜெயசிக்குறுய்' படையினர் சந்தித்திருந்தனர். இதனால் வன்னிப் படை நடவடிக்கை ஆழமறியாமல் கால்வைத்த செயலாக தென்னிலங்கை சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளிலும் விபரிக்கப்பட்டது. எதிர்க்கட்சியும் கேலி செய்யத் தொடங்கியது.

அதனால் மூன்றாவது ஊடறுப்புத் தாக்குதல் நடந்த உடனேயே படைத்தரப்பு முந்திக் கொண்டு பிரசாரத்தில் இறங்கி விட்டது.

கிரிக்கெட் ஸ்கோர் மாதிரி புலிகள் தரப்பு இழப்பு நூறு, இருநூறு, முன்னூறு என்று மோதல் நடந்த முதல் நாளே சொல்லத் தொடங்கிவிட்டார்கள்.

படையினரின் இழப்பு விபரங்கள் பற்றி உள் தகவல்கள் பெறும் சில பத்திரிகையாளர்களுக்குக்கூட இம்முறை சரியான தகவல்கள் கிடைக்கவில்லை.

படையினர் தரப்பில் பலியானோர் எண்ணிக்கை தொடர்பாக படைத்தரப்பு உத்தியோகபூர்வமாக சொல்லும் தகவல்களை மட்டுமே பத்திரிகையாளர்கள் பெற முடிந்தது.

**முல்லைத்தீவு முகாமில் ஆயிரத்துக்கு மேற்பட்ட படையினர் பலியாகியும்கூட படையினர் தரப்பு வெளியிட்ட உத்தியோகபூர்வ செய்திகளில் எண்ணிக்கை சில நூறுகளை தாண்டவேயில்லை. எனினும் அப்போது உள்தகவல்கள் மூலம் உண்மையான எண்ணிக்கையைப் பத்திரிகைகள் வெளியிட்டன.**

இம்முறை பத்திரிகைகளுக்கு தகவல் கொடுக்கும் சில அதிகாரிகளுக்கேகூட படையினர் தரப்பின் இழப்பு விபரங்கள் மூடுமந்திரமாக இருந்துள்ளன.

புலிகள் தரப்பில் 126 பேர் பலியானதும் படையினருக்கு சாதகமாகிவிட்டது. தங்கள் தரப்பு இழப்பைப் பற்றி அடக்கிவாசித்துக் கொண்டு, புலிகள் தரப்பு விபரங்களை ஆர்ப்பாட்டமாக அறிவித்தனர். இது பிரசார யுத்தம்.

ஆனால் புலிகள் தங்கள் தரப்பு இழப்பை உடனடியாக அறிவித்திருந்தனர்.

**எப்படியோ புலிகளின் மூன்றாவது ஊடறுப்புச் சமரில் தமக்கு ஏற்பட்ட பின்னடைவை மறைப்பதில் படைத்தரப்பின் பிரசார யுத்தம் இம்முறை ஓரளவு வெற்றி பெற்றுள்ளது.**

மறுபடி இராணுவப் பேச்சாளராக சரத் முனசிங்காவை கொண்டுவந்தமைக்கு தக்க பலன்கள் கிடைத்து வருகின்றன. தனது திறமைமீது படைத்தலைமையினர் கொண்டுள்ள நம்பிக்கையை அவர் பாதுகாத்திருக்கிறார்.

இலங்கைக் கிரிக்கெட் அணியின் உலக சாதனைகள், சாதனைக் கொண்டாட்டங்கள் என்ற அமளிகளும் வன்னியில் கள நிலவரங்கள்மீதான கவனத்தை திசை திருப்பியிருந்தன.

**போர்க்கள நிலவரத்தை அறிவதைவிட கிரிக்கெட் போட்டி நிலவரத்தை அறிவதில் மக்கள் ஆர்வம் காட்டத் தொடங்கிவிட்டார்கள். சிங்கள மக்களோ அல்லது வேறெந்த மக்களோ யுத்தத்தில் ஆர்வம் காட்டவில்லை. யுத்தச் செய்திகளையும் நம்பத் தயாரில்லை.**

யாழ் குடாநாட்டை படையினர் கைப்பற்றிய போது தென்னிலங்கையில் இருந்த ஆர்வம் தற்போது மங்கிப் போயிருக்கிறது. புலிகளை வெற்றி கொள்வது அத்தனை சுலபமில்லை. வெற்றி தோல்விகள் மாறிக்கொண்டே இருக்கும் என்று சாதாரண சிங்கள மக்கள் புரிந்து கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

**போரில் ஈடுபட்டுள்ள படைத்தரப்பினரின் மரணத்திற்கான சோகத்தைவிட, கிரிக்கெட் வீரர் ஒருவர் அவுட்டானதால் ஏற்பட்ட சோகம்தான் பெரிதாகியிருக்கிறது.**

அரசுக்கும் படைத்தரப்பினரின் வெற்றிச் செய்தியைவிட, கிரிக்கெட் அணியின் சாதனைச் செய்திதான் பாண், மா விலை உயர்வுக்கு சாதகமாக அமைந்திருக்கிறது.

**உலகக் கிண்ணத்தை இலங்கை அணி பெற்றபோதும் விலை உயர்ந்தது. இப்போது உலக சாதனை செய்தபோதும் விலை உயர்ந்தது. இலங்கை அணியின் ஓட்ட எண்ணிக்கை சாதனைகளை நோக்கி உயரும் போது, விலைவாசிகளும் விண்ணை நோக்கி உரயத் தொடங்கிவிடுகின்றன. 'ரன் ரேட்' உயர்ந்தால் 'பாண் ரேட்' உயரும் என்பது வாய்ப்பாடு மாதிரி பாடமாகிவிட்டது.**

ஆனால் விலைவாசிகளை உயர்த்த கிரிக்கெட் வெற்றிகள் உயர்ந்தாலும், அடுத்த தேர்தலில் வாக்கு வங்கிகளை கவர கிரிக்கெட் அணிகளை நம்பியிருக்க முடியாது.

அதற்கு அரசியல் கிரிக்கெட்டைத்தான் நம்பியாக வேண்டும். யுத்த முனையில் அதிக ஓட்டங்களை பெற்ற அரசாங்கம் என்ற முத்திரையை பெற்றாக வேண்டும்.

குறிப்பிட்ட காலத்துக்கு முன்னரே பொதுத் தேர்தல் நடத்தவும் அரசு தயாராக இருக்கிறது. ஆனால் போர்க் களத்தில் குறிப்பிடத்தக்க வெற்றியை பெறாமல் அது சாத்தியப்படாது.

**யுத்தத்தில் விரைவான வெற்றி என்ற அரசின் எதிர்பார்ப்புக்கும், யுத்தம் நடைபெறும் கள நிலவரத்துக்கும் இடையே எட்டமுடியாத தூரம் இருக்கிறது.**

எப்படியாவது தரைப் பாதை திறந்தே தீருவோம் என்று பாராளுமன்றத்தில் நின்ற அமைச்சர்கள் பலர் ஆளாளுக்கு சூளுரை செய்கிறார்கள்.

ஆனால் களத்தில் போரிடும் படையினர் ஒவ்வொரு அடியாக முன்னால் எடுத்து வைக்கக்கூட பாரிய எதிர்ப்புக்களை கடக்க வேண்டியிருக்கிறது. இழப்புக்களை சந்திக்க வேண்டியிருக்கிறது. ஊடறுப்புக்களை எதிர்நோக்கி காத்திருக்க வேண்டியிருக்கிறது.

'ஜெயசிக்குறுய்' படை நடவடிக்கை ஆரம்பித்து மூன்று மாதங்களாகிவிட்டன. தொண்ணூறு நாட்கள்.

வன்னிக் களத்தைப் பொறுத்த வரை புலிகளுக்கு ஏற்பட்ட உயிரிழப்புக்கள் தவிர்க்க முடியாதவை.

கெரில்லா உத்திகளை மட்டுமல்லாமல், மரபுப் படையணிகளுக்குரிய சில குணாம்சங்களையும் புலிகள் கடைப்பிடித்துள்ளனர்.

எதிரி தன் பலத்தை திரட்டிக்கொண்டு முன்னேறும்போது பின்வாங்கிச் செல்வது கெரில்லாக்களின் போர்முறை. எதிரியை தடுத்து நின்று மோதிக்கொண்டிருப்பது மரபுப் படையணியின் குணாம்சம்.

கெரில்லாப் போர்முறையையும், மரபுப் படையணியின் குணாம்சத்தையும் கலந்துதான் வன்னிக் களத்தில் புலிகள் 'ஜெயசிக்குறுய்' படையினரை எதிர்கொள்கின்றனர்.

முன்னேறும் படையினரின் மூக்கில் குத்தி தடுத்து நிறுத்திக்கொண்டே, படையினரின் பலவீனமான முனைகளுக்குள் ஊடறுத்து அழித்தொழிக்கும் அதிரடி கெரில்லா நடவடிக்கைகளிலும் புலிகள் ஈடுபட வேண்டியதாகிறது.

முன்னேறும் படையினரை தடுத்து நிறுத்த போரிடுவது மரபுப் படையின் குணாம்சம்தான். ஆனால் படையினரை தடுத்து நிறுத்த புலிகள் போரிடும் முறை கெரில்லா பாணியில் அமைந்ததுதான்.

முன்னேறும் படையினரை நோக்கி நன்கு அரண் செய்யப்பட்ட பங்கர்களில் இருந்து புலிகள் தாக்குகிறார்கள். மோட்டார் ஷெல்களை ஏவுகிறார்கள். மரபுப் படை அணிகள் போல ஆட்டிலரித் தாக்குதல்களையும் புலிகள் நடத்துகின்றனர்.

டாங்கிகள், கவச வாகனங்கள் இல்லாத குறையை பங்கர்கள் மூலம் நிவர்த்தி செய்து கொண்டு புலிகளின் அணிகள் எதிர் தாக்குதல் நடத்தி படையினரின் முன்னேற்றத்தை



பெரிய அம்புக்குறிகள் ஜெயசிக்குறுய் நடவடிக்கைகளையும் சிறிய அம்புக்குறிகள் இரண்டு டிவிஷன்களும் 'இணைந்ததாக' கூறப்படும் மார்க்கத்தையும் காட்டுகிறது.

தடுத்து நிறுத்துகின்றன.

**உண்மையில் இது ஒரு வியக்கத்தகு போர் களநிலவரம்தான். இருபதாயிரம் படைகள், கனரக ஆயுதங்கள், வாகனங்கள் சகிதம், விமானப்படை உதவியுடன் கடந்த 50 நாட்களாக ஐந்து கிலோமீட்டரை கடக்க முடியவில்லை என்றால் நம்புவது சிரமம் தான்.**

வவுனியா,யாழ் சாலையில் சென்ற 55வது படைப்பிரிவினர் புளியங்குளத்தை கைப்பற்றி விட்டார்கள் என்று செய்தி சொல்லப்பட்டு கிட்டத்தட்ட 60 நாட்களாகிவிட்டன. ஏதோ ஒரு சாலையை புளியங்குளச் சாலை என்றும் தப்பாக தொலைக்காட்சியில் காண்பித்தார்கள்.

ஆனால் இன்றுவரை புளியங்குளம் சந்தியை ஜெயசிக்குறுய் படையினர் சென்றடைய முடியவில்லை. புளியங்குளம் செல்ல வேண்டுமானால் இன்னமும் கிட்டத்தட்ட ஐந்து கிலோமீட்டர் தூரத்தை படையினர் கடந்தாக வேண்டும்.

கடந்த ஜூன் 10ம் திகதி 'ஜெயசிக்குறுய்' படையினர் மீதான முதலாவது ஊடறுப்பு தாக்குதலை தாண்டிக்குளத்தில் புலிகள் நடத்தினர். அப்போது 'ஜெயசிக்குறுய்' படையினரின் முன்னரங்க அணிகள் புளியங் குளத்தை சமீபித்து விட்டன என்றே கூறப்பட்டன.

**ஆனால் ஜூன் பத்தாம் திகதி 'ஜெயசிக் குறுய்' படையினரின் தலைப்பகுதி எங்கு இருந்ததோ அதே இடத்தில்தான் இன்று வரை இருக்கிறது.**

புளியங்குளத்தை கைப்பற்றவில்லை என்பதை இப்போது படைத்தரப்பினரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

'முரசு' முன்னரே குறிப்பிட்டதுபோல புளியங்குளத்தில் புலிகளின் பாரிய பதுங்கு நிலைகள் இருக்கின்றன. அங்கிருந்து பலத்த தாக்குதலை புலிகள் தொடுப்பதால் படையினரால் ஐந்து கிலோமீட்டர் தூரத்தை அடைய 60 நாட்களாகியும் முடியாமல் போயிருக்கிறது.

இந்த கள நிலவரங்கள் தென்னிலங்கையில் பெரியளவுக்கு தெரிய வாய்ப்பில்லை. வன்னியின் பூகோள அமைப்பு, ஊர்ப் பெயர்கள் என்பன தெரியாமையால் படையினர் தெரிவிக்கும் செய்திகளில் உள்ள முரண்பாடுகள் தெரிவதில்லை.

வவுனியாவில் இருந்து ஓமந்தை பத்துக் கிலோமீட்டர். அங்கிருந்து புளியங்குளம் 12.5 கிலோமீட்டர். ஓமந்தையில் இருந்து புளியங்குளம் நோக்கி கிட்டத்தட்ட ஏழு கிலோமீட்டர் வரை தான் படையினரால் முன்னேற முடிந்தது.

எப்படியாவது புளியங்குளத்தை பிடித்து விடலாம் என்றுதான் படையினர் எதிர்பார்த்தனர். புலிகளின் இரண்டாம் கட்ட ஊடறுப்பும், மூன்றாம் கட்ட ஊடறுப்பும் அந்த எதிர்பார்ப்பை பின்னடையச் செய்திருக்கிறது.

**மேலும் ஐந்து கிலோமீட்டர் முன் னேறிச் சென்றால் புலிகளின் ஷெல் வீச்சுக்களால் 'ஜெயசிக்குறுய்' படையினரின் தலைப்பகுதியும் தாக்குதலுக்கு உள்ளாகும். அதேவேளை படையினர் மேலும் விரிவாக பரவும் அவசியம் ஏற்பட்டு அடர்த்தி குறைவதால் புலிகளின் ஊடறுப்பையும் எதிர்கொள்ள முடியாமல் போகும்.**

புலிகளின் ஊடறுப்புத் தாக்குதல்கள் நடந்திருக்காவிட்டால் படையினர் புளியங் குளத்தை கைப்பற்றி, புளியங்குளம் நெடுங் கேணி சாலையையும் கைப்பற்றி முற்றுகையை ஏற்படுத்தி இருப்பர். அத்தோடு முதலாம் கட்டத்தை பூர்த்தி செய்து இரண்டாம் கட்டமாக புளியங் குளத்தில் இருந்து மாங்குளம் நோக்கியும் தரை நகர்வுக்கான முயற்சிகள் தொடங்கப்பட்டிருக்கும்.

புலிகளின் எதிர்தாக்குதலைவிட ஊடறுப்புத்தாக்குதல்கள்தான் ஜெயசிக்குறுய் படையினரின் அதிவேக முன்னேற்ற திட்டத்தை தடுத்துள்ளன.

அதுமட்டுமல்லாமல் ஊடறப்புச் சமர்கள் மூலமாக புலிகள் எடுத்துள்ள ஆயுதங்களும், ஆட்டிலெறிகளும், அவற்றுக்கான ஷெல்களும் மரபுப்போர் ரீதியான தாக்குதல்களை தொடுக்கும் பலத்தையும் புலிகளுக்கு அதிகமாக்கியுள்ளன.

எனவே ஊடறுப்புச் சமர்களில் புலிகளுக்கு ஏற்பட்டுள்ள ஆட்பல இழப்புக்கள் தவிர்க்க முடியாதவையாகவே அமைந்துள்ளன. அதேசமயம் ஊடறுப்புச் சமர்களின் விளைவாக பெறப்பட்ட பலன்கள் வன்னிப் போர்களத்தில் புலிகளின் படைக்கலப் பலம், மனோபலம் என்பவற்றில் உயர் நிலையை உருவாக்கியுள்ளன. அதே சமயம் படையினர் தரப்பில் போர் வெற்றி பற்றிய விரைவான கனவுகளை கேள்விக் குள்ளாக்கி உள்ளன.

இந்நிலையில் 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கை தொடர்பாக தினமும் மிகையான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பின்னடைவுகளை வெற்றியாகக் காட்டும் முயற்சிகளில் அரசும், அதன் பிரசார சாதனங்களும் தீவிரமாய் உள்ளன.

புளியங்குளத்துக்கும், நெடுங்கேணிக்கும் இடையே படைப்பிரிவுகள் இணைப்பை ஏற்படுத்திக் கொண்டதாக கடந்த வாரம் செய்திகள் சொல்லப்பட்டன.

**புளியங்குளத்தை கைப்பற்றுவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தை மறைக்கவும், புலிகளின் மூன்றாவது ஊடறுப்பு சமரால் தமக்கு ஏற்பட்ட பின்னடைவை மறைக்கவும் படையினர் செய்த முயற்சிதான் அது.**

புளியங்குளத்தில் இருந்து நெடுங்கேணிக்கு செல்ல வேண்டுமானால் முதலில் புளியங் குளத்தை படையினர் கைப்பற்றியாக வேண்டும். அல்லது நெடுங்கேணியில் உள்ள படையினர் புளியங்குளம் நோக்கி வரவேண்டும்.

புளியங்குளம் நெடுங்கேணி சாலை 20 கிலோமீட்டர் தூரம் உடையது. 20 கிலோ மீட்டர் தூரத்தை கைப்பற்றி இணைப்பை ஏற்படுத்துவது உடனடியாக சாத்தியம் இல்லை.

நெடுங்கேணியில் நிலைகொண்டுள்ள படையினர் முன்னேறும் முயற்சிகளில் ஈடுபட முடியாதளவுக்கு புலிகள் கடும் தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

இரு முனைகளிலும் புலிகளின் அணிகள் நிலையெடுத்து படை நகர்வுகளை கண்காணித்தபடியே உள்ளன.

விமானக் குண்டுவீச்சுக்கள் மூலம் புலிகளின் நிலைகளை நொறுக்கித் தள்ளிவிட்டு, ஆட்டிலெறிகள் மூலம் ஷெல்களை ஏவிக் கொண்டு டாங்கிகள் சகிதம் படையினர் நகர்வதுதான் வழக்கம். சமீபத்தில் புளியங் குளம் பகுதியில் இத்தகைய தந்திரமும் மேற்கொள்ளப்பட்டது.

சரமாரியாக காட்டுப் பகுதிகளை நோக்கி குண்டுகள் பொழியப்பட்டன. ஷெல்கள் பறந்தன. பின்னர் தரை நகர்வில் ஈடுபட்ட படையினருக்கு ஆச்சரியம் காத்திருந்தது. புலிகளின் ஷெல்கள் அவர்களை நோக்கி பறந்து வந்தன. தரை நகர்வு முயற்சியை எதிர்த்து புலிகளின் அணிகள் தாக்குதல் நடத்தின.

விமானத் தாக்குதல்கள் மத்தியிலும் தமது அரண்களை தக்கவைக்குமளவுக்கு அவற்றை புலிகள் நிர்மாணித்துள்ளனர்.

இதன் பின்னர்தான் ஓமந்தையில் இருந்து புறப்பட்டு குறுக்குப் பாதையூடாக நெடுங்கேணிக்கு செல்லும் திட்டம் தீட்டப்பட்டது.

**அதாவது புளியங்குளம் நெடுங்கேணி சாலையில் இரு முனைகளில் படையினர் முன்னேறிச் சென்று எதிரும் புதிருமாக சந்திப்பது சாத்தியப்படவில்லை. நேருக்கு நேர் இரு படைப்பிரிவுகளும் கைகுலுக்க முடியாத எட்டாத தூரத்தில் உள்ளன.**

**இப்போது என்ன நடந்திருக்கிறது என்றால், வவுனியா, யாழ் சாலையில் நிலை கொண்டுள்ள 55வது படைப்பிரிவு தனது கையை முதுகுப் பக்கமாக வளைத்து நெடுங்கேணியில் உள்ள 53வது படைப் பிரிவுடன் கை குலுக்கி இருக்கிறது.**

**இதனைத்தான் இணைப்பு என்று சொல்லியிருக்கிறார்கள்.**

அதாவது முன்னரங்க வழியாக செல்லாமல் பின் கதவின் வழியாக இரு படைப்பிரிவுகளும் சந்தித்துள்ளன.

புளியங்குளம் செல்லாமல், ஓமந்தைக்கும், புளியங்குளத்துக்கும் இடைப்பட்ட பகுதிகள் ஊடாக நெடுங்கேணிக்கு செல்ல குறுக்குவழி இருக்கிறது. அங்கிருந்த மக்கள் இடம்பெயர்ந்து சென்றுவிட்டனர். சிங்கள கிராமங்கள் சிலவும் உள்ளன. அவ் வழியே தான் இரு படைப்பிரிவுகளும் சந்தித்துள்ளன.

ஆனால் இது ஒரு வலுவான இணைப் பல்ல. அரண்கள் அமைத்து நிலைகொண்டிருக்கக் கூடிய சாதகமும் குறைவு. இப்படியான இணைப்பை செய்வது என்றால் ஓமந்தையை கைப்பற்றிய பின்னரே படையினர் செய்திருக்கலாம்.

புளியங்குளம் நெடுங்கேணிச் சாலையைக் கைப்பற்றுவதுதான் முற்றுகை அரணாக அமையும் என்பதால்தான் இரு முனைகளால் முன்னேற முயன்றார்கள். பலத்த இழப்புக்களையும் சந்தித்தார்கள்.

இப்போது குறுக்குப் பாதையால் இரு படைப்பிரிவுகளும் சந்திக்க முயன்றமை படையினரின் பலவீனத்தையே காட்டுகிறது.

இணைப்பை ஏற்படுத்திவிட்டதாக கூறப்பட்டாலும் தொடர்ந்து அப்பாதையில் படைத்தரப்பு நிலைகொண்டிருக்கிறதா என்பதுகூட தெரியவில்லை. பத்திரிகையாளர்கள் அழைத்துச் செல்லப்படவில்லை. தொலைக்காட்சியில்கூட தாங்கள் ஏற்படுத்திய இணைப்பை படைத்தரப்பினர் காண்பிக்கவில்லை.

இணைப்பை ஏற்படுத்தினார்களோ இல்லையோ முன்னரங்கம் மூலமாக இரு படைப்பிரிவுகளும் எதிரும் புதிருமாக முன்னேறிச் சந்திப்பதை புலிகளின் எதிர்தாக்குதல்கள் தடுத்து நிறுத்தி உள்ளன.

ஊடறுப்புக்கள், எதிர் தாக்குதல்கள் மூலம் 'ஜெயசிக்குறுய்' தனது இலக்கின் முதல் கட்டத்தைக்கூட பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கிறது என்பதே உண்மையாகும்.

'ஜெயசிக்குறுய்' படை நடவடிக்கை தொடர்வதாக பிரசாரம் செய்தபடியே படையணிகளை ஸ்திரப்படுத்தவும், மூச்சுவிட்டுக் கொள்ளவும் ஒரு கால அவகாசம் படையினருக்கு தேவைப்படுகிறது.

அந்தக் கால அவகாசத்தை படையினருக்கான பொறியாக மாற்ற புலிகளும் பயன்படுத்திக்கொள்வர். ஆனால், ஓய்வில்லாமல் படையினரை போரிட வைத்தாலும் பொறிக்குள் சிக்கியாக வேண்டும் என்பதுதான் படையினருக்கு உள்ள பிரச்சனை.

'ஜெயசிக்குறுய்' தொடர்பாக புலிகள் ஒரு இராணுவப் பொன்மொழியை வாய்ப்பாடாக சொல்லத் தொடங்கி உள்ளனர். வன்னியில் புலிகளின் அணிகளுக்குள் இப்போது பிரபலமாக அடிபடுவது இதுதான்.

**'எடிபல' ஓடி 'ஜயசிக்குறுய்' வரும் வரை காத்திருந்ததாம் புலிப்படை.**

மன்னார் நோக்கி முன்னேறிய படையினரை எதிர்ப்பின்றி செல்ல அனுமதித்ததையும், 'ஜயசிக்குறுய்' படையினரை எதிர்த்து நடத்தியுள்ள தாக்குதல்களையும் அடுத்தே புலிகள் அவ்வாறு கூறிவருகின்றனர்.

ஓடுமீன் ஓடி உறுமீன் வருமளவு வாடியிருக்கும் கொக்குப் போல தங்கள் படையணிகளை உருவகப்படுத்தி உள்ளனர் புலிகள்.

# அதிரடி அப்பாத்துரை



**கிழக்கின் சிங்கத்தார்** கனடாவுக்கும் விஜயம் செய்தவராம். ரெண்டு எழுத்தாரின் பேச்சாளர் போலவே பேட்டிகள், அறிக்கைகள் யாவும் கொடுத்துக் கலக்கிப்போட்டாராம். கூட்டான கட்சித் தலைவர் என்ன சொல்லப்போகிறார்? சிங்கத்தாரும் இளமைத்துடிப்பில்தான் பேசுகிறார் எண்டு சொல்லப் போகிறாரோ?

**திருவான மலையின்** சம்பந்தமானவர் காலியான நாற்காலியைப் பெறும் விடயத்தில் மறைமுக முயற்சிகளை முடுக்கி விட்டிருந்தவராம். அந்த முயற்சிகளில் தூதராக இருந்து ரெண்டு எழுத்தாரின் நாடி பிடித்தறிய முயன்றவராம் திருவான மலை கிளைத் தலைவர். அப்பவே நான் இதைக் கோடிட்டுக் காட்டியிருந்தனான். இப்ப பார்த்தியளோ அந்த முயற்சியில்தான் கிளைத் தலைவர் சிறைப்பட்டிருக்கிறார்! தங்கமானவரின் விவகாரத்தின் பின்னர் கிளைத் தலைவர் இரகசியமாக கண்காணிக்கப்பட்டிருக்கிறார். தங்கமானவர் விடயத்தில் விசாரணை கேட்டபடியால் தன்மீது சந்தேகம் வராது எண்டுதான் கவனமில்லாமல் காரியம் பார்த்து வலையில் சிக்கிக்கொண்டாராம். நாதரை வெளியே எடுத்தே தீர வேண்டும் எண்டு சம்பந்தமானவர் ஒற்றைக்காலில் நிற்கிறாராம். ஆதலால் மேலிடத் தலையீட்டால் 'நாதர்' தப்பச்சாத்தியம் உண்டாம்.

**சுதந்திரப் பொன்விழா** குழுவில் அங்கம் வகிக்குமாறு கிழக்கின் வெகுஜனப் பிரதிநிதிகளை நிலமானவர் துரத்தித்திரிகிறாராம். சிங்கத்தாரிடம் கேட்கமுடியாது என்பதால், ஏனைய இரண்டு பேரில் ஒருவரை மாட்டிவிடத்தான் ஓடித்திரிகிறாராம். பார்க்கலாம் நிலமானவரின் விருப்பத்தை நிறைவு செய்யும் அந்த 'நாட்டுப்பற்றாளர்' யார் என்று? 'ஏற்கனவே என் பெயர் பொடியளின் லிஸ்ட்டில் இருக்குதாம்' எண்டு சொல்லி நழுவிக்கொண்டிருக்கிறாராம் இரண்டுபேரில் ஒருத்தர்.

**"யாரைச் சொல்லி** என்ன பயன்? சனத்தைத்தான் சொல்லவேணும். யாரை எங்கே வைப்பது எண்டு யாருக்கும் தெரியேல்லை. அதுதான் இந்த கண்றாவியையெல்லாம் கண்ணால் பார்க்கிறம்." இது திருவான மலைப் பிரமுகர் ஒருவரின் முணுமுணுப்பு. காரணமில்லாமல் அவர் முணுமுணுப்பாரோ? திருவான மலை சபைத் தலைவரும், இடம்பெயர்ந்த அகதி ஒருவரும் 'டுசும் டுசும்' போட்ட காட்சியை நேரில் கண்டவர்களில் அவரும் ஒருத்தர். அகதித் தமிழனை தலைவர் கன்னத்தில் அறைய, அந்த அகதித் தமிழனும் திருப்பிக் கொடுத்தானாம். விறைச்சுப் போனாராம். பின்னர் தன் பாதுகாவல் 'சீருடை'யார் மூலம் அந்த அகதித் தமிழனை அடித்துப் புரட்டினாராம். யப்பா என்னே வீரம்? சபைச் சரித்திரத்திலேயே ஒரு தலைவர் இப்படி நாலுபேர் முன்னால் சண்டைக் காட்சியில் ஈடுபட்டது இதுதான் முதல் தடவையாம். இந்த விவகாரம் வெளியே வராமல் அடக்கிப்போட்டாராம். சம்பவம் நடந்தது திருவான மலை பிரதேச செயலகத்துக்குள்ளாம். "வாயால் மண்டையில் போடும் வீரரை கன்னத்தில் போட்ட அகதித் தமிழன் வாழ்க! வாழ்க!" என்கிறார் முணுமுணுத்த பிரமுகர்.

**பச்சைக் கட்சி** தலைவர் வெகுஜன சபையில் நின்று கிரிக்கெட் வீரருக்கு பாராட்டுத் தெரிவித்தார். பாராட்டுத் தெரிவிக்கலாம். ஆனால் முந்திக் கொள்ளும் அவசரத்தில் சபைக் குறிப்பில் பிழையான தகவலைச் சேர்த்துப் போட்டார். 'இன்னும் சில மணி நேரங்களில் லாராவின் சாதனை முறியடிக்கப்படும்' என்றல்லோ சொல்லிப்போட்டார். எங்கள் அரசியல்வாதிகளுக்கு எதிலும் அவசரம்தான். இலாபங்களுக்கு உரிமை கோருவதில் பலமடங்கு அவசரம். உந்த அவசரத்தால்தானே போர்க்கள நிலவரமும் புரியேல்லை. இப்ப விளையாட்டுக் கள நிலவரமும் புரியேல்லை. வெற்றிகள் என்ன காலவரையறை செய்து வாங்கும் கடைச்சரக்கோ? அதெல்லாம் கிடக்க, கஷ்டப்பட்டு விளையாடி ஜெயிக்க, அதிலும் குளிர்காயப் பார்க்கிற அரசியல்வாதிகள் தாணுங்கோ கில்லாடிகள்!

**முன்னாள் வடக்கு-கிழக்கு** மாகாணக் கட்சிக்கு இந்திய காங்கிரஸ் கட்சி மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லையாம். ஜனநாயகக் கட்சிக்காரருக்கு அழைப்புவிட்டு அவை போனவையாம். நட்பு நிலவரங்கள் மாறுதோ தெரியேல்லை. எல்லாம் இருக்க, காங்கிரஸ் மாநாட்டில் எங்கள் பிரச்சனை பற்றி ஒரு தீர்மானம்கூட போடப்படவில்லைப் பார்த்தியளோ! தங்கள் பிரச்சனையைப் பார்க்கவே அவைக்கு நேரம் இல்லையாம். எங்கள் பிரச்சனையைப் பற்றி சிந்திக்கவோ முடியும்? வலி புண்ணுக்குத்தானே!

**கனடாவில்** இலங்கைக் கிரிக்கெட் அணியினரின் சாதனையை புலம்பெயர் தமிழர்கள் கொண்டாடினவையாம். சில கார்களில் புலிக் கொடி ஒரு புறமும், மறுபுறம் சிங்கக் கொடியும் பறக்க விட்டுக்கொண்டு ரவுண்ட் அடிச்சவையாம். உலகக் கிண்ணப் போட்டியின்போதும் இப்படியான காட்சிகள் கனடாவில் காணப்பட்டன.

**யாழ்ப்பாணத்து** யோகர் சுவாமிகள் சொன்ன பொன்மொழி:

"ஆமை ஆயிரம் முட்டைகள்
இட்டபின்னரும்
அமைதியாக இருக்கும்.
கோழி ஒரு முட்டை
இட்டதும் கொக்கரிக்கும்"



படிப்பகம்

www.padippakam.com



# கட்டாய ஆட்சேர்ப்புக்கள்
# கவனிப்பார் இல்லாத உறுப்பினர்கள்!

## தொண்டர் படை

வடக்கு-கிழக்கு மாகாண சபையை பாதுகாக்கவும், அதன் சாதனைகள் என்று கூறத்தக்க விதத்திலும் இந்திய அரசு பல திட்டங்களைப் போட்டுக் கொடுத்தது.

மாகாண சபைக்கான பொலிஸ்படை, மற்றும் தேசிய இராணுவம் என்பவற்றை உருவாக்கவும் திட்டமிடப்பட்டது.

சி.வி.எஃப்.என்று சுருக்கமாக அழைக்கப்பட்ட தொண்டர் படைக்கு மாகாண சபை மூலமே ஊதியம் வழங்கப்பட்டது.

"தமிழ் பொலிஸ் படையை உருவாக்கி விட்டோம்" என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். பிரசாரம் செய்தது. ஆனால் தொண்டர் படையின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருந்தது.

வேலை இல்லாமல் இருந்த இளைஞர்களும் ஊதியத்துக்காக தொண்டர் படையில் சேர்ந்தனர். அது தவிர கட்டாய ஆட்சேர்ப்பு மூலம் பிடிக்கப்பட்ட இளைஞர்களும்- சம்பளம் தருவதாகக் கூறி தொண்டர் படையில் சேர்க்கப்பட்டனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக்கத்தின் கட்டாய ஆட்சேர்ப்புக்கு பயந்து பாடசாலைகளுக்கு, தம் பிள்ளைகளை அனுப்பவே பெற்றோர் தயங்கினார்கள்.

தொண்டர் படையினருக்கு காக்கி உடை கொடுக்கப்பட்டது. ஈ.பி.ஆர். எல்.எஃப். மாகாண சபை பிரமுகர்களுக்கு சல்யூட் அடிப்பதும் ஒரு வேலை.

ஒரு தொண்டர் படை உறுப்பினரிடம் "உங்கள் பணி என்ன?" என்று கேட்ட போது அவர் மனம் கசந்து சொன்னது இது: "வாறவன் போறவனுக்கெல்லாம் சல்யூட் அடிக்கும் வேலை."

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க உறுப்பினர்கள்தான் தொண்டர்படைக்குள் பொறுப்புக்களில் இருந்தனர். இந்தியப் பொலிஸ் படையின் ஒரு பிரிவாகவே 'தொண்டர் படை' இயங்கியது.

கட்டாய ஆட்சேர்ப்பில் ஈ.பி.ஆர். எல்.எஃப். ஈடுபட்டதால் ஏற்கனவே இருந்த கொஞ்ச நஞ்ச ஆதரவையும் மக்களிடம் இழந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி. எல்.எஃப். ஆகிய இயக்கங்களைவிட ரெலோவிடம் சற்றுப் பயமில்லாமல் மக்கள் பழகத் தொடங்கினார்கள். இந்த மூன்று இயக்கங்களும் இந்தியப் படையுடன் இணைந்து கூட்டாகவே செயற்பட்டன.

ஆனால் மூன்று இயக்கங்களுக்குள் ஒப்பீட்டளவில் ரெலோ பரவாயில்லை என்று சொல்லுமளவுக்கு, ஏனைய இரு இயக்கங்களும் மக்களிடம் கெட்ட பெயரைச் சம்பாதித்திருந்தன.

'ரெலோ' இன்னொரு வேலையும் செய்தது. சில பகுதிகளில் கட்டாய ஆட்சேர்ப்புப் பயத்தில் உள்ளவர்களிடம் "நீங்கள் எங்கள் ஆட்கள் என்று கூறி விடுங்கள்!" என்று சொல்லி வைத்திருந்தது. அதன்படி அவர்களும் தம்மைப் பிடிக்க வந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரிடம் தாங்கள் ரெலோ என்று கூறி தப்பித்துக்கொண்டனர்.

## வசதிகள் இல்லை

தொண்டர் படைக்கு கட்டாய ஆள் பிடிப்பு மூலம் ஆட்களைச் சேர்த்துக் கொண்டாலும், தொண்டர் படையினருக்கு போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை.

கூலிப்படையினரைப் போலவே அவர்கள் நடத்தப்பட்டனர். தொண்டர் படையில் இருந்து மாகாண சபையிடம் ஊதியம் வாங்கியவர்களில் பெரும்பாலானோர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைமைமீது அதிருப்தி கொண்டிருந்தனர்.



ஈ.பி.ஆர்.எல்.எஃப்.-இந்தியப்படை ஆயுதங்களுடன்

மாகாண சபையில் ஆட்சி அதிகாரம் பெற்ற பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் நிலமை மிகவும் மோசமடைந்திருந்தது.

மாகாண சபை உறுப்பினர்களாக



இருந்த பலர், இயக்க உறுப்பினர்களாகவே இருக்க இலாயக்கற்றவர்கள்.

மாகாணசபை உறுப்பினர்களானதும் அவர்கள் இயக்க உறுப்பினர்களை ஆட்டிப்படைக்கத் தொடங்கினார்கள்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் சபாநாயகராக நியமிக்கப்பட்டார் ராம் ராஜகாரியர்.

இவர் ஈ.பி.ஆர்.எல்.எஃப் தலைவர் க. பத்மநாபாவின் தனிப்பட்ட நண்பர். கொழும்பில் உத்தியோகமும் பார்த்துக் கொண்டு, பத்மநாபா கேட்டுக் கொண்ட தன்பேரில் இயக்கத்துக்கு சில உதவிகளும் செய்துவந்தவர். ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இவர் நண்பர்.

அந்த நட்புகள் காரணமாக இயக்கத்தின் ஆதரவாளராக இவர் இருந்தார். ஈ.பி.ஆர்.எல்.எஃப். உளவுப்பிரிவால் கொழும்பில் சில தகவல்களை பிரட்டவும் இவர் பயன்படுத்தப்பட்டார்.

அப்போதே ராம் ராஜகாரியருக்கு சில பொறுப்புக்கள் கொடுக்க பத்மநாபா விரும்பினார். ஈ.பி.ஆர்.எல்.எஃப். உளவுப் பிரிவுக்குள் மணி, ரமேஷ் ஆகியோர் அதற்கு உடன்படாமையால் பொறுப்புக்கள் கொடுக்கப்படவில்லை.

ராமிடம் இருந்த சில குணாம்சங்கள், பிரமுகர் தோரணைகள் போன்றவை அவரிடம் பொறுப்புக்கள் சென்றால் துஷ்பிரயோகம் செய்யப்படும் என்று அப்போது ஈ.பி.ஆர்.எல்.எஃப். உளவுப்பிரிவுக்குள் கருதப்பட்டது.

அக் கருத்து மிகச் சரியானவை என்பதை சபாநாயகர் பதவிகிடைத்த பின்னர் தன் செயல்கள் மூலம் நிரூபித்தார் ராம் ராஜகாரியர்.

இயக்கத்திற்காக கீழ்மட்டத்தில் இருந்து கஷ்டப்பட்டு உழைத்த உறுப்பினர்களை ராம் ராஜகாரியர் போன்றோர் மேய்க்க [illegible]பட்டதால் அந்த உறுப்பினர்கள் கசப்படைந்தனர்.

தற்போது ராம் ராஜகாரியர் தனிப் பிரமுகராக இருக்கிறார். இவர்மீது ஏராளமான ஊழல் குற்றச்சாட்டுக்கள் ஈ.பி.ஆர். எல்.எஃப். தலைமையால் சுமத்தப்பட்டுள்ளன. சுருட்டிய பணத்தில் கொழும்பில் சொத்துக்களும் வாங்கிச் சேர்த்துள்ளார். "இவருக்கு மரணதண்டனை வழங்கப்பட வேண்டும். எங்களுக்கு யாரை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதும் தெரியாது, தவறுவிடும் போது தண்டிக்கவும் தெரியாது" என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர் ஒருவரே கசப்புடன் கூறியிருக்கிறார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரால் ராம் ராஜகாரியர்மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பொய் அல்ல என்பதே பரவலாகப் பேசப்படும் தகவல்.

பத்மநாபா மூலமாக பதவி பெற்ற ராம் ராஜகாரியர் கடைசியாக பத்மநாபாவுக்கும் தலையைச் சுற்றிமுடித்தார்.

## விரக்தி

மாகாணசபை சார்பாக தினம் ஒரு அறிக்கை. தினம் ஒரு வேலைத்திட்டம் என்று முதலமைச்சர் வரதராஜப் பெருமாளால் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

வேலை வாய்ப்புத் தேடியும், தங்கள் சில காரியங்களுக்காகவும் மாகாண சபை முதல்வரையும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். முக்கியஸ்தர்களையும் மக்கள் சந்தித்தனர்.

அவ்வாறு சந்திப்பவர்கள் எல்லாம் தமது ஆதரவாளர்கள் என்று ஈ.பி.ஆர். எல்.எஃப். இயக்கத்தினர் கருதிக்கொண்டனர். இதனால் அலுவலக அரசியலுக்குள் சிக்கிக் கொண்டு தாங்களும் அதிகாரிகள் போலவே

## கொலைப் பட்டியல்

1988ல் ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக்கத்தினரால் வடபகுதியில் கொல்லப்பட்ட பொது மக்களின் பட்டியல் இது. கிடைக்கப்பெற்றவை மட்டுமே இவை. எமக்கு கிடைக்காத விபரங்களும் உள்ளன.



| | | | |
|---|---|---|---|
| வைகுந்தநாதன் சுந்தரம் | சிவலிங்கம் சிவ அழகன் | கருணானந்த சிவம் | சிறீதரன் |

| ஆண்டு தேதி | பெயர் | ஊர் |
|---|---|---|
| 1.10.88 | வைத்தியலிங்கம், பரமநாதன் (மீன்பிடிச் சங்கத் தலைவர்) | மயிலிட்டி |
| 2.10.88 | நந்தகுமார் (21) பல்கலைக்கழக மாணவன் | சிறுப்பிட்டி |
| 2.10.88 | ராசையாசாமி (36) | இடைக்காடு |
| 3.10.88 | சிவலிங்கம் சிவ அழகன் (22) | அச்சுவேலி |
| 4.10.88 | வேலுப்பிள்ளை செல்லக்கண்டு, (60) | கெருடாவில் |
| 4.10.88 | செல்லக்கண்டு, ஜோதிலிங்கம் (20) | கெருடாவில் |
| 5.10.88 | சிவசுப்பிரமணியம் (52) | இடைக்காடு |
| 5.10.88 | வேல்முருகு (51) | இடைக்காடு |
| 5.10.88 | தர்மலிங்கம் துரையம்மா (பெண்) (43) | நல்லூர் |
| 6.10.88 | பொன்னம்பலம் (45) | மைலங்காடு |
| 10.10.88 | அருளானந்தம், அன்ரனி (38) (மீன்பிடிச் சங்கத் தலைவர்) | ஆழியவளை |
| 13.10.88 | அருளானந்தம் ரவிசந்த் (24) | காங்கேசன் துறை வீதி |
| 14.10.88 | பொன்னையா சிறீதரன் (24) | உடுவில் கிழக்கு |
| 14.10.88 | கதிர்காமநாதன் (24) | யாழ்ப்பாணம் |
| 21.10.88 | சிவானந்த சுந்தரம் (65) (தமிழீழ மக்கள் மன்றத் தலைவர்) | பருத்தித்துறை |
| 22.10.88 | செல்லையா, கிளைட்டன் (24) | யாழ்ப்பாணம் |
| 25.10.88 | சுப்பிரமணியம், ரவீந்திரா (22) (விஞ்ஞான ஆசிரியர்) | சங்கானை |
| 25.10.88 | சி.சிவராசபிள்ளை (40) (சுன்னாகம் வர்த்தகர் சங்கத் தலைவர்) | மல்லாகம் |
| 26.10.88 | ராசசங்கரி (தென்மராட்சி பிரஜைகள் குழுத் தலைவர்) | சாவகச்சேரி |
| 28.10.88 | க.பிரேமரூபன் (மினிவேன், கூல்பார் உரிமையாளர்) | காங்கேசன்துறை |
| 3.11.88 | சுந்தரம் | சரசாலை |
| 3.11.88 | மனோகரன் | சாவகச்சேரி |
| 4.11.88 | கனகசபை தனபாலசிங்கம் (45) (வட பிரதேச போக்குவரத்து சபையின் மக்கள் தொடர்பு அதிகாரி) | காங்கேசன்துறை |
| 9.11.88 | ஜெயக்குமார் | மல்லாகம் |
| 9.11.88 | சோமசுந்தரம் | யாழ்ப்பாணம் |
| 11.11.88 | அய்யாத்துரை | காரைநகர் |
| 12.11.88 | கிருஸ்ணானந்தன் மாஸ்டர் (36) (பொருளியல் ஆசிரியர்) | யாழ்ப்பாணம் |
| 13.11.88 | சுந்தரம், வைகுந்தநாதன் (46) | திருநெல்வேலி |
| 13.11.88 | அன்ரன், அலன் | அரியாலை |
| 1.12.88 | சின்னத்துரை, குணரத்தினம் (33) | பளை |
| 1.12.88 | ஜெயக்குமார் (23) | ஏழாலை |
| 2.12.88 | தம்பிப்பிள்ளை, சிவம் (17) | சாவகச்சேரி |
| 3.12.88 | சிவதாசன், நிர்மலா | கருகம்பானை |
| 4.12.88 | நா.கருணானந்தசிவம் (45) (நடேஸ்வராக் கல்லூரி ஆசிரியர்) | காங்கேசன்துறை |
| 4.12.88 | கணேஸ் (23) | யாழ்ப்பாணம் |
| 4.12.88 | வைரமுத்து, சின்னாச்சி (45) | கொக்குவில் |
| 4.12.88 | குமாரசாமி (26) | கொக்குவில் |
| 5.12.88 | செல்லத்தம்பி, செவ்வானந்தம் (23) | உடுப்பிட்டி |
| 8.12.88 | கந்தையா, அரசக்கோன் (52) (தனியார் பேருந்துச் சங்கத் தலைவர்) | பெரியவிளான் |
| 11.12.88 | பொன்னுத்துரை வண்ணக்கிளி(முகுந்தன்) (34) | மயிலிட்டி |
| 11.12.88 | காதர் | |
| 14.12.88 | பெர்னான்டோ | அளவெட்டி |
| 19.12.88 | தவஞானம் | கல்வியங்காடு |
| 19.12.88 | அருள்ஞானம் | கல்வியங்காடு |
| 19.12.88 | ரவீந்திரன் | சுளிபுரம் |
| 24.12.88 | சாந்தகுமார் | கிளிநொச்சி |
| 24.12.88 | கனகராஜன் | கிளிநொச்சி |
| 24.12.88 | சந்திரன் | காங்கேசன்துறை |

மாறினார்கள்.

மூடிய அறைக்குள் இருந்தபடி எல்லாம் நல்லபடியே நடப்பதாக அவர்கள் நினைத்துக் கொண்டிருக்க, இயக்கம் கட்டுக் கோப்பை முற்றாக இழந்து மிக உச்சபட்சமான கெட்ட பெயரைச் சம்பாதித்துக் கொண்டிருந்தது.

தலைமைகளில் இருந்தவர்களுக்கும், பொறுப்பாளர்களுக்கும் என்றோ ஒருநாள் மாகாண சபைக்கு முடிவுகாலம் நெருங்கும் என்பது தெரிந்துபோனது. அதனால் தம்மால் முடிந்தளவுக்கு சுருட்டல்களில் ஈடுபடத் தொடங்கினார்கள்.

இதற்கிடையே தொண்டர்படை போதாது என்று தமிழ் தேசிய இராணுவத்தை அமைக்குமாறு இந்தியா சொன்ன யோசனையையும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஏற்றுக்கொண்டது.

கட்டாய ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட வேண்டிய ஒன்றாக உணரப்படவில்லை. மேலும் மேலும் அதற்கான தேவைகள் கூடிக் கொண்டே போயின.

## 'துர்ப்பாக்கியசாலிகள்'

இது தொடர்பாக 'முறிந்த பனை' ஆவணத்தில் கூறப்பட்டுள்ள கருத்தை இங்கு தருதல் பொருத்தமானது;

"கட்டாய ஆட்சேர்ப்பு மூலம் தமிழ் தேசிய இராணுவத்தை உருவாக்கியது ஒரு வேளை இந்தியாவின் மன்னிக்கவே முடியாத தீர்மானமாக அமையக்கூடும். மக்களுக்கு கணக்கு காட்டியாக வேண்டிய பொறுப்பிலிருந்தும், சட்டபூர்வ நியாயத்திலிருந்தும் விலகிய நிலைமைகளில் தான் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்திய அமைதிப்படைக்கோ அல்லது ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைமைக்கோ சட்டபூர்வ நியாயம், அல்லது மக்கள் ஏற்பு என்பதனை சம்பாதித்துக்கொள்ள முடியவில்லை. ஈவிரக்கமற்ற, கோபமூட்டும், இழிவுபடுத்தும் தோரணையில்தான் தமிழ்தேசிய இராணுவம் அமைக்கப்பட்டது.

வீதிகளிலும், நீண்டதூர பஸ்வண்டிகளிலும், புகையிரதங்களிலும் இளம் பையன்கள் பிடித்துக் கொண்டு செல்லப்பட்டனர்.

வறுமையான, அநாதரவான பெற்றோர் தங்கள் பிள்ளைகள் எங்கே என்று தேடி, ஒரு இடத்திலிருந்து, இன்னொரு இடத்துக்கும், ஒரு முகாமிலிருந்து, இன்னொரு முகாமுக்கும் அலைந்து வேதனைப்பட்டனர்.

ஆயிரக்கணக்கான இந்த துர்ப்பாக்கியசாலிகளை எந்தளவுக்கு முடியுமோ அந்தளவுக்கு போராடிப் பாருங்கள் என்று குறைந்த பயிற்சியுடன் ஆயுதங்களை கொடுத்து அனுப்பினார்கள். இந்தியா உட்பட அனைவராலும் அவர்கள் கைவிடப்பட்டனர்.

## 'என்னைச் சுடு'

மற்றவர்கள் விஷயத்தில் மிகுந்த அனுதாப நோக்கத்துடன் தமிழ் இராணுவப்படை உறுப்பினர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

கோப்பாய் சந்தியில் நடைபெற்ற சம்பவம் ஒன்று தமிழ் தேசிய இராணுவ உறுப்பினர்கள் மத்தியில் இருந்த அவநம்பிக்கையைப் புலப்படுத்துகிறது.

வடமராட்சிக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞன் ஒருவன் 'பாஸ்' இல்லாத காரணத்தால் இந்திய அமைதிப் படையாலும், தமிழ் இராணுவப் படையாலும் தடுத்து நிறுத்தப்பட்டார்.

பின்னர் அவரைப் பார்த்துக் கொள்வதற்கு தமிழர் இராணுவப் படையைச் சேர்ந்த பையன் ஒருவன் நிறுத்தப்பட்டான்.

சுகவீனமாகவுள்ள தன் தாயைப் பார்ப்பதற்கு அவசரமாக கிளம்பியதால் தான் தன் அனுமதிச் சீட்டை விட்டுவிட்டு வந்ததாக தடுத்து நிறுத்தப்பட்ட அந்த இளைஞன் அப்பையனிடம் சொல்லியிருக்கிறான்.

அந்தப் பையனும் சிறிது நேரம் யோசித்துவிட்டு, "எனக்கும் அம்மா இருக்கிறா" என்று மெதுவாக முணு முணுத்திருக்கிறான். பின்னர் அந்தப் பையன் அந்த இளைஞனிடம், தனது ஏ.கே.47 துப்பாக்கியைக் கொடுத்துவிட்டு, "நான் உன்னைப் போகவிட்டால் நான் தண்டனை அனுபவிக்க வேண்டிவரும். இந்தத் துப்பாக்கியை எடுத்து என்னைச் சுட்டு விட்டு நீ போய்விடு. நீ தப்பியோடிவிட்டாய் என்று அப்போது அவர்கள் நினைப்பார்கள்." என்று கூறியிருக்கிறான்.

இதைத் தன் செவிகளாலேயே நம்ப முடியாத அந்த இளைஞன் உண்மையாகத்தான் அந்தப் பையன் அப்படிச் சொல்கிறான் என்று உணர்ந்தான். பின் அவன் அப் பையனிடம் கதைத்து அவ்வாறு செய்யவேண்டாம் என்று கூறியிருக்கிறான்.

பின்னர் இன்னொரு தமிழ் இராணுவப்படை உறுப்பினன் வந்து, தடுத்து நிறுத்தப்பட்டுள்ள அந்த இளைஞன் தனது மச்சான் என்று இந்திய அதிகாரியிடம்கூறி விடுதலை வாங்கிக் கொடுத்தான்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்.பிற்குள்ளேயே இந்தக் கட்டாய ஆட்சேர்ப்பில் அதிருப்தி கொண்டிருந்த பலர் தங்களின் கட்டுப்பாட்டின் கீழிருந்த தமிழ் இராணுவப் படையைச் சேர்ந்தவர்கள் தப்பிச் செல்வதற்கு உதவி செய்துள்ளனர்.

## துயரமான வரலாறு

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கம் தொடர்பாகவும், அதன் வீழ்ச்சி தொடர்பாகவும் 'முறிந்தபனை'யில் கூறப்படும் கண்ணோட்டம் இது:

" ஈ.பி.ஆர்.எல்.எஃப்.ஐப் பொறுத்தவரை இந்தியத் தலையீட்டினால் ஏற்பட்ட இராணுவமயப் போக்கும், பின்னர் புலிகளும், ரெலோவும் வெற்றிகரமாக எழுச்சியடைந்ததும் முதலில் அதனை நம்பிக்கை இழக்கச் செய்தது. கடைசியில் பைத்தியக்கார நிலைக்கு இட்டுச் சென்றது.

ஆரம்பகாலத்தில் இருந்தே ஈ.பி. ஆர்.எல்.எஃப். யாழ்ப்பாண சமூகத்தின் ஆதிக்கப்போக்குகளுக்கு எதிராக எதிர்நீச்சல் போடவேண்டியிருந்தது.

இதன் ஆரம்பகால உறுப்பினர்கள் மாக்ஸிய கருத்துக்களில் ஈடுபாடு கொண்ட திறமைமிகுந்த இளைஞர்களாக இருந்ததோடு, பள்ளிக்கூடங்களை விட்டுவிட்டு கிராமங்களில் அரசியல் வேலைகளில் ஈடுபடச் சென்றவர்களாகவும் இருந்தனர்.

.....1987 ஆகஸ்ட் மாதத்தில் இந்திய அமைதிப்படை புடைசூழ ஈ.பி.ஆர்.எல்.எஃப். மீண்டுவந்தபோது விடுதலைப் புலிகளை பழிவாங்கவேண்டும் என்ற வீறுடனும், மக்கள்மீது கொண்டிருந்த ஆழ்ந்த கசப்புணர்வுடனும் செயற்பட ஆரம்பித்தனர்.

இந்தியப் படை இவர்களைப் பாவித்த விதத்தில் நாளடைவில் மக்களைச் சந்தேகிப்பவர்களாகவும், மக்களை வெறுப்பவர்களாகவுமே இவர்கள் மாறினார்கள்.

இந்தியப் படை முகாம்களில் இருந்து செயற்படும் அடி ஆட்களாகவும், உளவாளிகளாகவும் இவர்களை இந்தியப் படை பாவித்தது.

மாகாண சபைகள் மூலம் அதிகாரங்களை பெற்ற பின்னரும்கூட அவர்களிடம் போதுமான கட்சி கட்டுத்திட்டங்கள் காணப்படவில்லை.

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குப் பின், அதற்குப் பழிவாங்கும் நடிவடிக்கைகளில் அவர்கள் இந்திய அமைதிப் படையின் கட்டளைகளுக்கு காத்திருக்க ஆரம்பித்தனர்.

விடுதலையை நோக்கிய நகர்வுக்கு மாறாக, செல்வாக்கு படைத்த வகுப்பினர் கையில் தாம் முன்னர் அடைந்த துயரங்களைவிட, ஈ.பி.ஆர்.எல்.எஃப்.பிடம் பெரும் துன்பங்களை அடைந்தனர் பிற்படுத்தப்பட்ட மக்கள். பிற்படுத்தப்பட்ட மக்களே மோசமான கொலைகள், அடி, உடமை நாசம் என்பவற்றுக்கு இலக்காயினர்.

இந்திய அமைதிப் படையினரிடம் பிடிபடுவது, அவர்களிடம் கூட்டுச் சேர்ந்துள்ள இம் மண்ணின் மைந்தர்களிடம் பிடிபடுவதைவிட அதிஷ்டம்மிக்கது என்று மக்கள் கருத ஆரம்பித்தனர்.

இந்திய அமைதிப்படையின் கட்டாய ஆட்சேர்ப்பில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். பங்கு கொண்டமை அதற்கு எந்தப் பலமும் இல்லை என்பதுடன், யதார்த்தம் குறித்த பார்வையின்மையுமே பிரதிபலித்தது.

(தொடர்ந்து வரும்)

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது- இராஜதந்திரி

# வாய்மூடி நிற்கும் தமிழ் அரசியல் கட்சிகள்! அரசியல் தீர்வு; ஆளும் தரப்பின் தினம் ஒரு கருத்து!

"வடக்கு-கிழக்குக்குத் தனியான உரிமைகள் வழங்கப்படுவதை நாட்டின் ஏனைய பகுதி மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்," என்று அண்மையில் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் மாநாடொன்றில் பேசும்போது நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருந்தார்.

**பேராசிரியர் கூறியுள்ள இக்கருத்தை நோக்கும்போது இதுவரை காலமும் வடக்கு-கிழக்கு மக்கள் மேற்கொண்ட அனைத்து வடிவிலான உரிமைப்போராட்டங்களையும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் துச்சமென மதித்து. தமது 'விடாக்கண்டன் கொடாக்கொண்டன்' நிலைப்பாட்டை முதன்மைப்படுத்த முயற்சிப்பதையே அவதானிக்க முடிகின்றது.**

இலங்கை சுதந்திரம் பெற்ற நாள்முதல் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளும் விஸ்வரூபமெடுக்கலாயின. தமது பாரம்பரிய பிரதேசம், மொழி, கல்வி, தொழில் ஆகிய அனைத்திலும் தமக்குரிய ஆளுமையை அவர்கள் பறிகொடுத்தனர்.

தமிழ் பேசும் மக்களுக்கு பிரச்சினைகள் உண்டு; அவை மனிதாபிமான அடிப்படையில் தீர்க்கப்படவேண்டுமென்று கூறி வந்த பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியாளர்கள், தற்போது தமிழர்கள் குறித்த பிரச்சினையை அணுகும் பாங்கே வித்தியாசமாகவுள்ளது.

**இராணுவ முனைப்புக்களை முதன்மைப்படுத்தி இராணுவரீதியிலான அழுத்தங்களையும், வேறு வடிவிலான அழுத்தங்களையும் வழங்கி தமக்குத் திருப்தியான தீர்வொன்றைக் கொடுக்கவே அரசு தயாராகிவருகின்றது.**

எனவே இந்த நாட்டில் ஆளுங்கட்சியோ அல்லது எதிர்க்கட்சியோ, எவ்வகையிலும் நேர்மையான அரசியல் அணுகுமுறைகளுடன் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சினையை அணுக முன்வராதிருப்பது- முன்னைவிட தற்போது-பெரிதும் உறுதியாகியுள்ளது.

நாட்டின் ஏனையபகுதி மக்கள் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களுக்கு. விசேட உரிமைகள் வழங்குவதை விரும்ப மாட்டார்கள் என்று பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறியிருக்கிறார்.

ஆனால் 1994ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தல், பின்னர் நடந்த ஜனாதிபதித் தேர்தல், அவற்றைத் தொடர்ந்துவந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் என்பவை அனைத்திலும் பொதுஜன ஐக்கிய முன்னணி வடக்கு-கிழக்குப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமென்ற தேர்தல் பிரசாரத்தையே முன்வைத்திருந்தது.

எனவே நாட்டுமக்கள் அனைவருமே வடக்கு-கிழக்குப் பிரச்சினையை ஏற்றுக்கொண்டு அப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்ற விதத்திலேயே பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வாக்களித்து தமது ஆணையைவழங்கினர்.

**இந்நிலையில் நாட்டு மக்கள் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களுக்கு விசேட உரிமைகள் வழங்கப்படுவதை எதிர்ப்பார்கள் எனக்கூறுவது ஆட்சியாளரது நொண்டிச்சாக்கு என்றே கொள்ளவேண்டும்.**

வடக்கு-கிழக்கில் உள்ள முஸ்லிம் மக்களுக்கு தனிமாகாணம் வழங்கப்படுவதை பேராசிரியர் பீரிஸ் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளார்.

கூட்டணி அதனை ஏற்றுக் கொண்டுள்ளதால் ஏனைய தமிழ் கட்சிகள் அதனை ஏற்குமாறும் பேராசிரியர் பீரிசே நேரடியாக அக்கட்சிகளிடம் கேட்டுமிருக்கிறார்.

**வடக்கு-கிழக்கில் உள்ள முஸ்லிம்களுக்கு தனியான மாகாணம் என்பது வடக்கு-கிழக்கு நிலவரத்தைப் பொறுத்து அங்கு மட்டுமே முன்வைக்கப்படும் விசேஷ ஏற்பாடுதான். இது ஏனைய பகுதிகளுக்கு பொருந்தாது.**

ஏனைய பகுதிகளுக்கு பொருந்துமானால் மலையகத் தமிழர்களுக்கும் தனியான மாகாணம் கொடுக்க வேண்டும்.

**தமிழ்-முஸ்லிம் கட்சிகளுக்குள் முரண்பாடு தோன்றி இழுபடக்கூடிய ஒரு விடயத்தில் விசேஷ ஏற்பாட்டை பீரிஸ் ஆதரிக்கிறார். அதே பீரிஸ் வடக்கு-கிழக்கு மக்களுக்கு விசேட உரிமைகள் கொடுத்தால் ஏனைய பகுதி மக்கள் எதிர்ப்பார்கள் என்கிறார்.**

எனவே பேராசிரியர் பீரிஸ் அவர்களும் சிங்கள மக்கள் மத்தியில் இனவாதிகளால் தோற்றுவிக்கப்பட்ட மனோபாவங்கள் முன்பாக சரணடைந்துவிட்ட ஒருவராகவே காணப்படுகிறார். இந்நிலையில் நியாயமான அரசியல் தீர்வொன்று எட்டப்படப் போவதில்லை என்பது தெளிவாகி வருகிறது.

இந் நிலையில் சிங்கள மக்களிடமுள்ள தப்பான அபிப்பிராயங்களைப் போக்குவதைவிட, அவற்றை தக்கவைத்துக்கொண்டு தங்கள் இயலாமையை நியாயப்படுத்தவே ஆட்சியாளர்கள் முற்படுவர்.

சிங்கள கமிஷன் போன்றவற்றுக்கு தடை விதிக்கப்படாமைகூட தென்னிலங்கையில் பேரினவாத கூச்சல்கள் இருந்தால்தான் தங்கள் தரப்பை நியாயப்படுத்தக்கூடிய பூச்சாண்டிகளாக அவற்றைக் காட்ட முடியும் என்று கருதி ஆளும் தரப்பு விட்டுவைத்துள்ளதாகவே தோன்றுகிறது.



பண்டாரவன்னியன்

இலங்கை ஒன்பது மாகாணங்களைக் கொண்டதாகும். இதில் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசமாகும்.

இலங்கையில் இனப்பிரச்சினை தோற்றம் பெற்ற காலம் முதல் வடக்கு-கிழக்குப் பிரதேசங்கள் சுயாட்சி, சமஷ்டி என்பவற்றின் அடிப்படையிலேயே நிர்வகிக்கப்பட வேண்டுமென்றே தமிழ் அரசியல் தலைவர்கள் குரல்கொடுத்து வந்துள்ளனர்.

அவ்வாறு குரல் கொடுத்த அரசியல் தலைவர்களில் பலர் இன்று உயிருடனில்லை. எனினும் அவர்கள் கூறிச்சென்றவை தூரநோக்குடன் தீர்க்கதரிசனத்தோடு அமைந்தவையாகவே காணப்படுகின்றன.

இன்றைய தமிழ் அரசியல் கட்சிகளின் நிலை கவலையளிப்பதாகவும், வேடிக்கையானதாகவுமே இருக்கின்றது.

ஆட்சியாளர்கள் எதைக் கூறுகிறார்களோ அதற்குத் தலையசைத்து விடுவோராகவும், அரசின் அணுகுமுறைகளுக்கு அமைவாகவே தமது கருத்துக்களை வெளியிடுவோராகவும் இருக்கின்றனர்.

இன்றைய தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பலரும் தமது சொந்தப் பிரதேசங்களுக்கு வெளியிலேயே வாழ்ந்து வருகின்றனர். அவர்களது பாதுகாப்பு, அரசியல் நலன்கள் என்பவை அனைத்துமே ஆளும் கட்சியினரைச் சார்ந்ததாகவே இருக்கின்றது. இதன் காரணமாகவே அரசுக்கு அமைவாகவே அவர்கள் நடந்து வருகின்றனர். இருந்தபோதிலும் 'தாயகக் கோட்பாடு' எவ்விதத்திலும் விட்டுக் கொடுக்கப்படமுடியாது என்ற உண்மையையும் அவர்கள் உணர்ந்தே இருக்கின்றனர்.

ஆயினும் அந்த உண்மையை வலியுறுத்தி அதனை நிறைவேற்ற அவர்கள் எவ்விதத்திலும் திராணியற்றவர்களாகவே இருக்கின்றனர்.

**கொழும்பிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகளின் பலவீனங்களை நன்கு அறிந்து வைத்திருக்கும் நிலையிலேயே ஆட்சியாளர்கள் வடக்கு-கிழக்குப் பிரச்சினை குறித்து தமது மனம் போன போக்கிலான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.**

அரசியல் தீர்வு தொடர்பாக ஆளும் தரப்பும், பேராசிரியர் ஜி.எல்.பீரிசும் தினம் ஒரு கருத்து தெரிவித்துவருகின்றனர். அவற்றுக்கு தகுந்த பதில் கொடுத்து தமிழ்பேசும் தரப்புக்காக வாதாடக்கூட முடியாத நிலையிலையே தமிழ் கட்சிகள் உள்ளன.

இன்று வடக்கு-கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டம் இடம்பெறாத விடத்து ஆட்சியாளர்கள் எப்போதோ தமக்கு அமைவான ஒரு தீர்வைத்திணித்து விட்டிருப்பார்கள்.

ஆனால் புலிகளின் அழுத்தங்களே ஆட்சியாளர்களுக்குப் பெரும் திண்டாட்டத்தைக் கொடுத்து வருவதுடன், எடுத்த எடுப்பிலேயே அவர்களால் எவ்வித முடிவுக்கும் வர முடியாத சூழ்நிலைகளை உருவாக்கி விட்டுள்ளது.

**அதிகாரத் தோரணையுடன் கூடிய முற்றிலும் தமது விருப்பு வெறுப்புக்களையே முதன்மைப்படுத்துகின்ற ஒரு தீர்வைக் கொண்டுவரவே ஆட்சியாளர்கள் முனைகின்றனர். ஆனால் அதனை வெளிப்படையாகவே செய்வதைத் தவிர்க்கும் வகையிலேயே அரசியல்பேச்சு, புலிகளுடனான பேச்சு என்ற வார்த்தைகளை பூசி, மெழுகிக் கூறிவருவதைக் காண முடிகின்றது.**

கடந்தவாரம் சேர்ஜோன் கொத்தலாவல இராணுவப்பயிற்சிப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு வைபவம் பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ்வைபவத்தில் ஜனாதிபதி சந்திரிகா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அப்பல்கலைக்கழகத்தில் பயிற்சியை முடித்து வெளியேறிய படையதிகாரிகளுக்குச் சான்றிதழ்களை வழங்கியிருந்தார்.

**அங்கு அவர் உரை நிகழ்த்தும்போது பண்டைய அரசர்கள் படைபலத்தை பெருக்கவில்லை, அயல்நாடுகளுடன் நல்லுறவையே விரும்பியிருந்தனர் என்று கூறியிருக்கிறார்.**

ஜனாதிபதி அங்கு கூறத் தவறிய விடயங்களும் உள்ளன.

ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்கள் இந்த நாட்டுக்குள் புகுவதற்கு முன்னர் சிங்கள மக்களும், தமிழ் மக்களும் தமக்கான தனி இராச்சியங்களை கொண்டிருந்தனர்.

**சிங்கள மக்களும், தமிழ் மக்களும் தனித்தனி இராச்சியங்களை கொண்டிருந்தமையால் அன்று இனங்கள் மத்தியில் நேரடியான பகைமைகள் மூண்டிருக்கவில்லை. 'வாழு, வாழவிடு' என்ற கொள்கைப்படி இரு பிரதான இனமக்களும் வாழ்ந்துவந்தனர். அதனால்தான் படைபலத்தை பெருக்கி தொடர் யுத்தம் நடத்தும் தேவை அன்றைய சிங்கள, தமிழ் மன்னர்களுக்கு ஏற்படவில்லை என்பதை ஜனாதிபதி நினைவூட்டத் தவறிவிட்டார்.**

தமிழ் மன்னர்களான சங்கிலியன், பண்டாரவன்னியன் ஆகியோரைப் பற்றி பேசுவதும், அவர்களை நினைவு கூருவதும்கூட பிரிவினை எண்ணம் போல கருதப்பட்டு வருகிறது.

துட்டகைமுனுவுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் சங்கிலியனுக்கோ, பண்டாரவன்னியனுக்கோ வழங்கப்படுவதில்லை.

அது தவிர, துட்டகைமுனு- எல்லாளன் யுத்தம் தமிழ் மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும் இடையிலான யுத்தமாக சிங்களப் பேரினவாதிகளால் சித்தரிக்கப்பட்டு வருகிறது.

ஆனால், அந்த யுத்தம் ஒரு தமிழருக்கும், சிங்களவருக்கும் இடையேயான யுத்தமல்ல எல்லாளன் இந்தியாவில் இருந்து வந்த அந்நிய நாட்டவன் என்ற ரீதியில் துட்டகைமுனு எதிர்த்துப் போரிட்டான். அச் சமயம் எல்லாளன் படையில் சிங்களப் போர்வீரர்களும் இருந்தனர். துட்டகைமுனுவின் படையில் தமிழ் போர்வீரர்களும் இருந்தனர்.

இந்த உண்மைகளுக்கு மாறாக சிங்கள-தமிழ் மன்னர்கள் அன்றும் இன ரீதியாக போரிட்டுக் கொண்டிருந்தனர் என்று வரலாறுகள் திரிக்கப்படுகின்றன. தமிழ் மன்னர்கள் சிங்களவர்களுக்கு எதிரானவர்களாகச் சித்தரிக்கப்படுகின்றனர்.

யாழ் குடாநாட்டை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த படையினர் யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்திருந்த சங்கிலியன் சிலையை உடைத்துப் போட்டிருந்தனர்.

**வரலாற்றுத் திரிபுகளும், அதனடிப்படையிலான இனவாதக் கருத்துக்களும் படையினர் மத்தியில் இருந்தும் களைந்தெறியப்படவில்லை. ஓரினத் தன்மை கொண்டதாக உள்ள இலங்கை அரச படைகளிடம் வரலாறு தொடர்பான தப்பான அபிப்பிராயங்களும் விட்டுவைக்கப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகிறது.**

சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கல்லூரியில் உரையாற்றிய ஜனாதிபதி அவர்கள் இலங்கை வரலாற்றில் தமிழ்-சிங்கள மன்னர்களின் அந்நிய ஆதிக்க எதிர்ப்பையும் சுட்டிக்காட்டத் தவறியிருந்தார். அந்நிய ஆதிக்கத்தை வேரோடு சாய்க்க போர்கொடி உயர்த்தியதில் சிங்கள, தமிழ் மன்னர்கள் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களாக இருக்கவில்லை.

இந்தநாடு சகல இனமக்களுக்கும் சொந்தமானது. இந்த நாட்டின் உயர்விலும், தாழ்விலும் எல்லோருமே பங்கு கொண்டிருக்கிறார்கள். சிங்கள மக்களும், தமிழ் மக்களும் தனியான பிரதேசங்களில் தனியான ஆட்சி நடத்தியபடி வாழ்ந்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் விளக்கிச் சொல்லியாக வேண்டும்.

**இவற்றின் மூலமாகவேனும் தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டம் சிங்கள மக்களின் உரிமைகளைப் பறிக்கும் போராட்டமல்ல. தங்களுக்கு உரித்துடைய உரிமைகளுக்காகவே போராடுகிறார்கள் என்பதை சிங்கள மக்களிடம் புரியவைத்தாக வேண்டும்.**

அதனைச் செய்யக்கூடிய சந்தர்ப்பங்களையும், மேடைகளையும், அரங்குகளையும் ஆட்சியாளர்கள் தவறவிட்டே வருகின்றனர். நீதியான தீர்வொன்றுக்கான புரிந்துணர்வான சூழலை உருவாக்க முயலாமல், இருக்கின்ற தவறான சூழலை தமிழ் மக்களுக்கு பூச்சாண்டியாக காட்டுவதில்தான் ஆட்சியாளர்கள் அக்கறை செலுத்துகின்றனர்.

## சிறப்புப் படையணிகள் சிறப்புப் பயிற்சிகள்

**வி**டுதலைப் புலிகள் சிறப்புப் படையணிகள். வன்னியில் படையினரின் முற்றுகையை முறியடிக்க பிரபாகரன் உருவாக்கியுள்ள முன்னணிப் படையணிகளே சிறப்புப் படையணிகள் என்று அழைக்கப்படுகின்றன. யாழ் குடாநாட்டில் இருந்து பின்வாங்கி வன்னியை தமது தளமாக்கிய பின்னர் புலிகளின் அணிகளுக்குள் சற்றே சோர்வுகள் காணப்பட்டன.

முல்லைத்தீவு முகாம் தாக்குதல் மூலம் அச் சோர்வினை நீக்கிய பின்னர், சிறப்புப் படையணிகளை உருவாக்கினார் பிரபாகரன்.

விசேஷ பயிற்சிகள் மூலம் தாக்குதல் முன்னணிப்படையணிகளாக சிறப்புப் படையணிகள் கட்டப்பட்டதுடன், சீருடைகளும் வழங்கப்பட்டன.

தாண்டிக்குளம் ஊடறுப்பு தாக்குதல் வன்னியில் உருவான சிறப்புப் படையணிகளுக்கு பரீட்சார்த்த களமாக அமைந்தது. அடுத்தது ஓமந்தை, பெரியமடு ஊடறுப்பில் சிறப்புப் படையணிகள் முக்கிய பங்கெடுத்தன. மூன்றாவதாக ஓமந்தை, இறம்பைக்குள ஊடறுப்புத் தாக்குதல்.

மூன்று ஊடறுப்புக்களிலும் சிறப்புப் படையணிகளில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் பலியாகியுள்ளனர்.

ஆண்கள், பெண்கள் இருபாலாரும் சிறப்புப் படையணிகளில் உள்ளனர். தாண்டிக் குளம் தாக்குதலை கண்ணால் கண்ட ஒருவர் சொன்ன சேதி இது: முன்னாள் சென்ற பெண்கள் படையணியைச் சேர்ந்தவர்கள் சுடுபட்டு விழுகிறார்கள். அவர்களது உடல்களைத் தாண்டிக்கொண்டு ஏனைய பெண் புலிகள் முன்நோக்கிச் சுட்டுக் கொண்டே ஆவேசமாகச் செல்கிறார்கள். பெண்கள் தானா இவர்கள் என்று சந்தேகம் வந்துவிட்டது" எனறுவியக்கிறார். இதைச் சொன்னவர் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமகன். சண்டை தொடங்கியபோது வீட்டைவிட்டு ஓடும்போது அவர் கண்ட காட்சிதான் அது.

சகல பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும் சிறப்புப் படையணிகளில் சேர்க்கப்படுகின்றனராம். அரண்களை உடைத்து துரிதமாக ஊடறுப்பது, அழித்தொழிப்பது என்பவற்றில் சிறப்பாக செயற்பட தனியான பயிற்சிகள் தரப்படுகின்றனவாம்.

தளப்பிரதேசம் ஒன்று இருக்குமானால் நிரந்தரப் படையணிகளும் இருக்க வேண்டும். தளப்பிரதேசத்தை பாதுகாத்தல், தளப் பிரதேசம் மீதான தாக்குதலை முறியடித்தல் என்பவை நிரந்தரப் படையணிகளுக்குள்ள கடமைகளாகும். கெரில்லாக்களும் இருப்பர். அவர்கள் நிரந்தரப் படையணியைப்போல் அல்லாது சிறு சிறு குழுக்களாக நடமாடி வாய்ப்பான இடங்களில் தாக்கிக் கொண்டிருப்பர். இரு அணிகளுமே முக்கியமானவை. ஆயினும் அவற்றின் செயற்பாட்டைப் பொறுத்து தாக்குதல் முறைகள், நடமாட்டங்கள் மாறுபடுகின்றன.

சிறப்புப் படையணி என்பது நிரந்தரப் படைக்குரிய அம்சங்களைக் கொண்டிருக்கிறது. அதே சமயம் அதன் தாக்குதல் முறை கெரில்லா பாணியில்தான் அமைகிறது. அரசின் நிரந்தரப் படையைப் போல நேரடிச் சமர்களில் ஈடுபட ஆட்பலம், கனரக படைக்கலப் பலம் என்பவை இல்லாமையால் கெரில்லா முறையிலேயே அவற்றின் தாக்குதல்கள் திட்டமிடப்படுகின்றன.

வன்னியின் பூகோள அமைப்புக்கு ஏற்ப சிறப்பு படையணிகள் உருவாக்கப்பட்டுள்ளமை போர் விதிகளில் புலிகளுக்குள்ள அனுபவம், பரிச்சயம், திறன் என்பவற்றையே காட்டுகின்றன.

பயிற்சிகள், தெரிவுகள், புதிய படையணிகள் என்று அணிகளைச் சீரமைப்பதில் புலிகள் கவனம் செலுத்துகிறார்கள்.



மட்டக்களப்பு முன்னாள் தளபதி கருணா வன்னியில் தாக்குதல் ஒன்றுக்கான திட்டத்தை விளக்குகிறார்.



ரொக்கட் லோஞ்சர்களுடன் ஊடறுப்புக்காகச் செல்லும் புலிகளின் சிறப்புப் படையணி உறுப்பினர்கள்.



புலிகளின் சிறப்புப் படையணி ஆண் உறுப்பினர்களும் பெண் உறுப்பினர்களும்.



படிப்பகம்

www.padippakam.com

## பாகம் 02

# கொள்ளை ராணி பூலான்தேவி 57

தருவது ரசிகன்



உடலும், உள்ளமும் ஒத்துழைக்காத சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அன்று பூலானுக்கும் அதுதான் நேர்ந்தது.

அடுத்தடுத்து ஏற்பட்ட துர்ச் சகுனங்களால் பூலானின் உள்மனது அபாய எச்சரிக்கை விடுத்துக் கொண்டிருந்தது. ஒரு நிலையில் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தது.

உடல் அசதியால் மல்லா தூங்கிப்போனான். தூங்குவதற்கு முன்னர் பூலானை முத்தமிட்டான். பூலான் தடுக்க, "கடைசியாக ஒன்று!" என்று அவள் உதடுகளில் முத்தமிட்டுவிட்டே மல்லாந்து படுத்தான்.

"கடைசியாக என்று" என மல்லா கூறியதுகூட பூலானுக்கு பின்னர் நினைத்த போதுதான் மனதில் உறுத்தியது.

பட்டாம்பூச்சியாய் இதயம் துடித்தது. 'தூங்கக்கூடாது-தூங்கவே கூடாது' என்று நினைத்துக்கொண்டேதான் மல்லாவின் அருகில் படுத்திருந்தாள்.

தலைமாட்டில் இருந்த துப்பாக்கியை பூலானின் கரம் அடிக்கடி தொட்டுப் பார்த்துக் கொண்டது.

உடல் அசதி மெல்ல மெல்ல பூலானின் கண்களையும், மனதையும் உறங்கச் செய்தது.

உறக்கமும், இறப்பும் ஒன்றுதான் என்பார்கள். அதுவும் களைப்பில் உறங்கும்போது வழக்கமான விழிப்புக்கூட வராமல்போய்விடுகிறது.

பூலான் ஆழ்ந்த உறக்கத்திற்குள் சென்று கொண்டிருந்தாள். சீராக மூச்சு விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தாள். சீரான மூச்சுக்கேற்ப அவள் மார்புகள் ஏறி இறங்கிக்கொண்டிருந்தன.

அவள் தலைமாட்டில் இருந்தபடி சீருடைக்குள் அவள் மார்புகள் விம்மித்தணிவதை கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் லாலா ராம்.

பின்னர் மெல்ல எழுந்தான். பூலானின் தலைமாட்டில் இருந்த அவளது துப்பாக்கியையும், மல்லாவின் துப்பாக்கியையும் தன் இரு கரங்களில் எடுத்துக் கொண்டான்.

மல்லாந்து படுத்தபடி, தன் கைகளில் ஒன்றை மடித்து தலைக்கு அணையாக வைத்துக்கொண்டு பூலான் படுத்திருந்தாள். அதனால் அவள் தேக திரட்சிகள் லாலா ராமை பைத்தியமாக்கின.

லாலா ராம் எங்கே காரியத்தைக் கெடுத்துவிடப்போகிறானோ என்று எட்டத்தில் நின்ற ஸ்ரீராம் பயந்தான். அவன் துப்பாக்கியுடன் தயாராக நின்றான்.

பூலானினதும், மல்லாவினதும் துப்பாக்கிகளை அகற்றிவிட்டு மல்லாவைச் சுடுவதற்காகவே லாலா ராமிடம் துப்பாக்கிகளை எடுத்துவரச் சொல்லி அனுப்பினான் ஸ்ரீராம்.

லாலா ராம் பூலானை வெறித்துப் பார்ப்பதை, அவன் கண்களில் காமம் நிரம்பி வழிவதை ஸ்ரீராம் கவனித்தான். கையை பலமாக ஆட்டி சைகை செய்தான். லாலா ராம் அதனைக் கவனித்தான்.

"மல்லாவை மட்டும்தான் கொல்ல வேண்டும். பூலானை எனக்கு விட்டுவிடு." என்று ஸ்ரீராமிடம் முன்னரே சொல்லி வைத்துவிட்டான்.

மல்லாவையும், பூலானையும் ஒன்றாகவே தீர்த்துக் கட்டிவிடலாம் என்றுதான் ஸ்ரீராம் நினைத்தான். குசுமா வந்துவிட்டதால் ஸ்ரீராமுக்கு பூலான் பைத்தியம் மறைந்துவிட்டது.

லாலா ராம்தான் தடுத்துவிட்டான்.



சுட்டுக் கொல்லப்பட்ட விக்கிரம் மல்லாவை பொலிசார் எடுத்த புகைப்படம்.

பூலான்மீது லாலாராமின் பைத்தியம்தான் பூலானைக் காப்பாற்றியது.

'இந்த உடம்பு முழுக்க இன்னும் கொஞ்ச நேரத்தில் எனக்கு... எனக்கேயாகப்போகிறது.' என்று நினைக்க லாலா ராமுக்கு உடம்பெல்லாம் முறுக்கேறியது.

அவ்விடத்தைவிட்டு அகன்று, ஸ்ரீராமிடம் சென்றான். ஸ்ரீராம் தன் துப்பாக்கியை நீட்டியபடி மல்லாவை நெருங்கினான்.

மல்லா அப்போது தூக்கத்தில் புரண்டு படுத்தான். இதுவரை மல்லாந்து கிடந்தவன் ஒருக்களித்துப் படுத்ததால் அவன் மார்பைக் குறிவைத்துச் சுடமுடியாமல் ஸ்ரீராம் தவித்தான்.

'தொட்டு நிமிர்த்தினால்..... மல்லா எழுந்துவிட்டால் காரியம் கெட்டுவிடும். மல்லா பொல்லதவன்;' ஸ்ரீராமுக்கு மல்லாவின் பலம் தெரியும்.

அப்படியே பூனைபோல பாதம் வைத்து பின்னால் நகரத் தொடங்கினான் ஸ்ரீராம்.

அதேநேரம் மல்லா மீண்டும் புரண்டான். விழித்துக் கொள்ளப்போகிறானா என்ற பயத்தில் ஸ்ரீராம் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டான்.

புரண்ட மல்லாவின் உதடுகள் "பூலான், பூலான்" என்று முணுமுணுத்தன.

கண்களைத் திறக்கவில்லை. அதனால் தன் கால்மாட்டுப் பக்கத்தில் தன்னைக் கொல்ல வந்த நரியை அவன் காணவில்லை.

இப்போது மல்லா மறுபடி மல்லாந்து கிடந்தான். ஸ்ரீராமுக்கு போன உயிர் திரும்பிவந்ததுபோல் இருந்தது.

ஸ்ரீராம் இப்போது மீண்டும் சற்று முன்னே நகர்ந்தான். மல்லாவின் மார்பின் மையப் பகுதியை நோக்கி குறிவைத்தான்.

ஒன்று, இரண்டு... மூன்று "டுமீல்"

வெடியோசை அப் பிரதேசத்தை அதிர வைத்தது.

சுட்டதும் பின்னடைந்து ஓடத்தொடங்கினான் ஸ்ரீராம். அவனுடன் சேர்ந்து லாலா ராமும் ஓடினான்.

அருகே, காதருகே, வெடியோசை கேட்டு அதிர்ச்சியில் பூலான் திடுக்கிட்டெழுந்தாள்.

எழுந்த வேகத்தில் தலைமாட்டில் கிடந்த துப்பாக்கியை எடுக்க கையை நீட்டினாள்.

'திக்' என்று அடித்தது நெஞ்சுக்குள்.

சட்டென்று விபரீதம் புரிய மல்லாவைப் பார்த்தாள். மல்லா நெஞ்சைப பிடித்தபடி முனகிக்கொண்டிருந்தான். நெஞ்சத்தைப் பொத்தியிருந்த அவன் கைகளையும் நனைத்துக்கொண்டு இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது.

"ஐயோ... ஐயோ... மல்...மல்லா" என்று அரற்றிக்கொண்டே அவன் தலையைத் தூக்கி தன் மடியில் வைத்துக்கொண்டாள் பூலான்.

மல்லாவுக்கு கண்கள் செருகிக் கொண்டிருந்தன. நினைவு தப்பிக்கொண்டிருந்தது.

கடைசியாக ஒரு தடவை தன் உயிருக்குயிரான பூலானை பார்த்துவிடவேண்டும். ஒரு வார்த்தை பேசிவிட வேண்டும்; என்று அவன் மனது துடித்தது.

மல்லா சாகப் பயந்தவனல்ல. பூலானை தனியே விட்டுச் செல்கிறோமே என்று நினைத்தபோதுதான் 'சாகக்கூடாது, எனக்கு சாவு வரக்கூடாது... ஐயோ... சாவே என்னை விட்டுப் போய்விடு' என்று அவன் மனது கிடந்து தவியாய்த் தவித்தது.

"மல்லா... மல்லா ஐயோ மல்லா... என்ன செய்கிறது...? கண்ணைத் திறந்து பார் மல்லா...." பூலான் கதறுவது அவன் காதுகளில் புகுந்து மூளை அதை கிரகித்துக் கொண்டது.

மல்லா பல்லைக் கடித்து வலியைத் தாங்கிக் கொண்டு, கண்களைத் திறந்து

**கடந்த வாரம்**

**மல்லாவை தீர்த்துக்கட்ட ஸ்ரீராம் திட்டம் தீட்டினான். மல்லா தனது கிராமத்துக்கு பூலானுடனும், ஸ்ரீராம் குழுவினருடனும் சென்று, தன் பெற்றோரை பார்த்துவிட்டு திரும்புகிறான். திரும்பும் போது ஓரிடத்தில் தங்குகிறார்கள். மல்லாவும், பூலானும் தூங்கிப்போகிறார்கள். அப்போது திடீரென்று வெடிச்சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுகிறாள் பூலான்.... இனி....**

பூலானைப் பார்த்தான். மங்கலாகத் தெரிந்தாள்.

பூலானைவிட்டு தான் வெகுதூரம் சென்றுகொண்டிருப்பதாக மல்லாவுக்கு தோன்றிற்று.

"ப.. பயப்படாதே... எப்..எப்போதும் தைரியமாக இரு. நான்.. பிழைக்கமாட்டேன்.." ஒவ்வொரு வார்த்தையாய் திக்கித் திக்கி மல்லா பேசினான்.

"இங்கிருந்து ஓடிவிடு.. பாபாவிடம்... போ... அவர் உனக்கு... உதவுவார்.... நான் பிழைக்கமாட்... போ....போ... ஓடு...."

"ஐயோ... மல்லா... நீ சாகமாட்டாய். நான் சாகவிடமாட்டேன். மல்லா.... ஐயோ மல்லா..." பூலான் மல்லாவின் தலையை உலுப்பிக்கொண்டு கத்தினாள்.

மல்லாவுக்கு பூலான் சொன்னதெல்லம் கிணற்றுக்குள் இருந்து கேட்பதுபோல இருந்தது. இறுதி முயற்சியாக தன் பலத்தை எல்லாம் திரட்டிக்கொண்டு பூலானின் முகத்தை கடைசியாகப் பார்த்தான்.

அவனுக்கு விக்கல் எடுத்தது.

பூலான் தண்ணீர்கொண்டுவர எழ நினைத்தாள். மல்லாவின் கரம் அவள் கரத்தை அழுத்திப் பிடித்தது.

"வேண்டாம்.... நீ.. பெரிய தலைவியாக.... ராணியாக.... வரவேண்டும். மல்லா... என்றும் உன் கூடவே இருப்பான்... எது வந்தாலும் தைரியத்தை... புரிகிறதா தைரியத்தை.. இழக்... இழக்.. இழக்காதே..."

மல்லா விக்கினான்.

"ஐயோ..."

பூலானின் கதறல் பெரிதாக எழுந்தது. மல்லாவின் தலை தொங்கியது.

மல்லா.... விக்கிரம் மல்லா.... அத்தோடு அடங்கிப்போனான்.

பூலானால் மல்லா செத்துப்போனான் என்பதை நம்பமுடியவில்லை.

எல்லாமே கனவுபோல இருந்தது.

"மல்லாலாலா..."

தலை உலுக்கினாள்.

அவன் நெஞ்சில் குத்தினாள்.

மூக்கருகே கைவைத்துப் பார்த்தாள்.

சட்டென்று கண்விழித்து, கண்ணடித்து "என்ன பூலான் ஏமாந்துபோனியாடி கள்ளி?" என்று கேட்கமாட்டானா?

கேட்கமாட்டான். இனி மல்லா பேசமாட்டான். இனி மல்லா எழுந்து வரமாட்டான்.

பூலானுக்கு எல்லாமே சூனியமாகத் தெரிந்தன. பூலான் அதன் பின்னர் அழவில்லை. அவள் கண்ணீர் நெஞ்சுக்குள் அடைத்துக் கொண்டது. அவள் கதறல் தொண்டைக்குள் சிக்கிக்கொண்டது. தன் மடியில் கிடந்த அசைவற்ற உடலை கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

குனிந்து மல்லாவின் நெற்றியில் முத்தமிட்டாள்.

முத்தமிட்டுவிட்டு நிமிர்ந்த பூலான், கூந்தலில் பற்றி இழுக்கப்பட்டாள்.

அவளை இழுத்தவன் ஸ்ரீராம்.

"விடடா நாயே!" என்றாள் பூலான்.

பூலானின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான் ஸ்ரீராம்.

களைத்துப் போயிருந்த பூலான் அப்படியே சுருண்டு நிலத்தில் விழுந்தாள்.

"கொண்டுபோய் இவளை படகில் போடுங்கள். நாங்கள் விரைவாக ஜமுனா நதியைக் கடந்து போயாக வேண்டும்!" என்றான் ஸ்ரீராம்.

ஸ்ரீராம் அருகே நின்ற குசுமா உயிரற்ற மல்லாவின் உடலை கடைசியாக ஒரு தடவை பார்க்கும் ஆசையில் கிட்டே சென்று கவனித்தாள்.

மல்லாவின் நெஞ்சில் இரத்தம் உறைந்திருந்தது. ஈக்கள் மொய்க்கத் தொடங்கியிருந்தன. அவன் சட்டையும், காற்சட்டையும் இரத்தத்தால் சிவப்பேறிக் கிடந்தன.

மல்லாவின் உடலை அப்படியே விட்டுவிட்டு ஸ்ரீராமும் அவன் ஆட்களும் புறப்பட்டார்கள்.

மயங்கிக் கிடந்த பூலானை லாலா ராம் தன் கைகளில் தூக்கிக்கொண்டுபோய் படகில் கிடத்தினான்.

எல்லோரும் ஏறியதும் படகு புறப்பட்டது. பூலானின் உடல் படகின் ஆட்டத்திற்கு ஏற்ப அசைந்தபடி கிடந்தது.

மல்லாவின் பிணத்தைக் கண்ட யாரோ ஒருவர் மூலம் பொலிசாருக்கு தகவல் எட்ட, அவர்கள் வந்து மல்லாவின் உடலை பலகோணங்களில் புகைப்படம் எடுத்தார்கள்.

மறுநாள் தினசரிகளில் செத்துக்கிடந்த மல்லாவின் புகைப்படத்துடன் கொட்டை எழுத்தில் பெரிய செய்தி:

**"பொலிசாருக்கு சிம்ம சொப்பனமாக இருந்த பிரபல கொள்ளைக்காரன் விக்கிரம் மல்லா சுட்டுக் கொலை.**

**அவன் பிணம் அநாதரவாகக்கிடந்தது. தனது சகாக்களாலேயே அவன் சுட்டுக் கொல்லப்பட்டான்."**

பூலானின் வாழ்க்கையில் அடுத்த அத்தியாயம் ஆரம்பமாகக் காத்திருந்தது..

**(தொடர்ந்து வரும்)**

## இறந்தவர் பிழைத்தார்.... ஆனால்...

இப்போதெல்லாம் சில டாக்டர்களிடமும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். எகிப்தில் நடந்த சம்பவம் ஒன்று அதிர்ச்சி தரக்கூடியது.



ஈரல் வியாதி என்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் ஒருவர். மருத்துவமனையில் சேர்ந்த பின்னர் மயக்கம் போட்டு விழுந்துவிட்டார்.

அவரைப் பரிசோதித்த டாக்டருக்கு என்ன அவசரமோ, 'ஆள் அவுட்' என்று சொல்லிவிட்டார். உடனே ஆளைத்தூக்கிப் போய் பிரேத அறையில் போட்டுவிட்டார்கள்.

கொஞ்ச நேரத்தில் மயக்கம் தெளிந்து அவர் எழுந்து பார்த்திருக்கிறார். சுற்றிலும் பிணங்கள் கிடப்பதைக் கண்டு திருதிருவென்று முழித்துக்கொண்டு இருந்திருக்கிறார்.

அப்போது பிரேத அறை மேற்பார்வையாளர் கதவைத் திறந்துகொண்டு வந்திருக்கிறார். வந்தவர் பிணங்கள் மத்தியில் எழுந்து அமர்ந்திருந்த ஆளைப் பார்த்திருக்கிறார்.

பார்த்ததும் மேற்பார்வையாளருக்கு பலத்த அதிர்ச்சி. அந்த இடத்திலேயே மாரடைப்பில் செத்துப்போனார்.

இறந்தவர் என்று நினைத்தவர் பிழைத்தார். இன்னொருவர் இறந்தார்.

## தடை உனக்குத் தடை



இந்தியாவின் பிரபல பத்திரிகையாளர் குஷ்வந்த் சிங். அரசியல் முதல் காதல் வரை வித்தியாசமாக அலசும் நெத்தியடியான எழுத்தாளர். காதல் விவகாரங்களிலும் கில்லாடியானவர். அரசியல்வாதிகளுக்கு குஷ்வந்த் சிங் எழுத்துக்கள் என்றாலே குலை நடுக்கம்.

இப்போது குஷ்வந்த் சிங்கின் எழுத்தைக் கண்டு சீறியெழுந்திருப்பவர் சோனியா காந்தி. சமீபத்தில் குஷ்வந்த் சிங் எழுதிய புத்தகத்தின் பெயர்: 'உண்மைக் காதலும் கொஞ்சம் விஷமமும்.' இந்த புத்தகத்தில் தன் குடும்பத்தினர் பற்றி குஷ்வந்த் சிங் விஷமத்தனமாக எழுதியிருப்பதாக சோனியா கூறுகிறார்.

நீதிமன்றத்தில் தடை உத்தரவு விதிக்குமாறு சோனியா காந்தி மனுப்போட்டார். இப்போது புத்தகத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் குஷ்வந்த் சிங் லேசில் விவகாரத்தை கைவிடக்கூடியவரல்ல. புத்தகத்தைக் கொண்டுவர ஒற்றைக் காலில் நிற்கிறார்.

## தலாய் லாமாவின் கோபம்



சமீபத்தில் புத்தமதத் தலைவரான தலாய் லாமா ஹொலிவூட் சினிமா உலகுக்கு விஜயம் செய்தார். அனைவரும் உற்சாகமாக வரவேற்றார்கள். அதன் பின்னர் தலாய் லாமா கொடுத்த சாட்டையடியால் ஹொலிவூட் புள்ளிகள் பலருக்கு முகம் சுண்டிவிட்டது.

'முறைகெட்ட செக்ஸ்' பற்றி காரசார மாக கிழித்துவிட்டார் தலாய் லாமா. 'ஓரினச் சேர்க்கை' புத்தமதத்தைப் பெறுத்தவரை தவறானது. கணவன்-மனைவி உறவில்கூட தவறான முறைகள், செய்கைகள் கூடாது என்றெல்லாம் அவர் சொல்லிக்கொண்டே போக ஹொலிவூட் புள்ளிகள் பலர் கொட்டாவிவிடத் தொடங்கிவிட்டார்களாம்.

மற்றொரு விவகாரம் என்னவென்றால், செக்ஸ் விஷயத்தில் புத்தமதம் தங்களைக் கட்டுப்படுத்தாது என்று நினைத்து அமெரிக்காவில் இளம் பெண்களும், இளைஞர்களும் புத்தமதத்தில் சேர்ந்தார்களாம்.

தலாய் லாமா கடைசியாக எழுதியுள்ள புத்தகத்தைப் படித்ததும் அவர்கள் கலங்கிப் போயிருக்கிறார்கள். இயற்கைக்கு மாறான 'செக்ஸ்' பற்றி ஒரு பிடி பிடித்திருக்கிறார் தலாய் லாமா. அதுதான் கலங்கிப் போயிருக்கிறார்கள்.

## டைசனின் சந்தேகம்

குத்துக்களால் எதிராளிகளைத் திணற வைத்த மைக் டைசன் இப்போது தானே திணறிக் கொண்டிருக்கிறார்.

மைக் டைசனின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் சங்கடங்கள் ஏற்பட்டுள்ளன. மைக் டைசனின் முதல் மனைவி ரொபின் கிவென்ஸ் பிரமாதமான அழகி. பிரபல நடிகை.



டைசன்-மோனிகா

இருவரும் திருமணம் செய்துகொண்டு சேர்ந்து வாழ்ந்தது ஆக எட்டே எட்டு மாதங்கள் மட்டுமே.

'தனது கட்டான உடல்மீதும், கட்டுக்கட்டான பணம்மீதுமே ரொபின் கிவென்சுக்கு மோகம்' என்று அறிவித்தார் டைசன். இருவரும் விவாகரத்து செய்தனர். சுமுகமாக பிரச்சனையை முடிப்பதற்காக கிட்டத்தட்ட 7 கோடி அமெரிக்க டொலர்கள்வரை டைசனிடம் கறந்துகொண்டு போனார் நடிகை.



டைசன்-கிவென்ஸ்

தற்போது கூடைப்பந்து வீரர் மாலிக் சீலி என்பவரை காதலித்து வருகிறார் ரொபின் கிவென்ஸ்.

டைசன், மோனிகா டர்னர் என்னும் பெண்ணை இரண்டாவதாகத் திருமணம் செய்துகொண்டது தெரிந்த செய்தி. இப்போது மோனிகாவுடனும் விரிசல் ஏற்பட்டிருக்கிறதாம். டைசன் லாவேகாஸ் என்ற இடத்திலும், மோனிகா மெரிலாந்து என்ற இடத்திலும் இருக்கின்றனர்.

எல்லாவற்றுக்கும் முக்கிய காரணம் டைசனின் சந்தேகப் புத்திதானாம். தன்னைச் சுற்றியுள்ளவர்கள் பணத்திற்காகவே தன்னுடன் இருப்பதாக நினைக்கிறாராம். யாரிடமாவது பேச நேர்ந்தாலும் கூட "எவ்வளவு பணம் வேண்டும்" என்று கேட்கிறாராம் டைசன்.

மொடலிங் செய்யும் ஒரு பெண்ணுக்கு ஆறு இலட்சம் டொலர்களை கொடுத்திருக்கிறார்.

சின்ன வயதில் இருந்தே டைசனுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் யாரையும் நம்பக்கூடாது என்ற எண்ணத்தை ஏற்படுத்திவிட்டது என்கிறார்கள். தற்போது அந்த எண்ணத்தால் தன்னம்பிக்கை இன்மையும் தோன்றியிருக்கிறது. அதனால் அவரது ஆக்ரோசம் குறைந்துவிட்டது. அதுதான் ஹொலிஃபீல்ட்டின் காதைக் கடிக்குமளவுக்குக் கொண்டு சென்றது என்கிறார்கள்.

பெண்கள் விஷயத்தில் டைசனுக்குள்ள ஈடுபாடும் அவரது மன உளைச்சலுக்கு மற்றொரு காரணமாம்.

டைசனுடன் மோனிகாவின் கசப்புக்கு டைசனின் பிற தொடர்புகள் சிலவும் காரணம் என்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



# தாவல் மன்னன்

← தாவித் தாவி ஏறுவதில் அண்ணர் சூராதிசூரர். அங்கே ஏறி, இங்கே ஏறி கடைசியாக நியூயோர்க் உலக வர்த்தக மையக் கட்டடத்திலும் ஒரேதாவாகத் தாவிவிட்டார். அண்ணாரது பெயர்: ஜோச்வில்லிக். அமெரிக்காவைச் சேர்ந்தவர்.

அமெரிக்க நியூயோர்க் உலக வர்த்தக மையக் கட்டிடம் 110 மாடிகளைக் கொண்டது. அக் கட்டடத்தின் மேல் ஜோச் வில்லிக் தாவி ஏறிக்கொண்டிருந்த போது எடுக்கப்பட்ட படம்தான் இது.

கட்டடத்தின் மேல் இவர் ஏறிக் கொண்டிருப்பதைப் கண்டவர்கள் தற்கொலை செய்யும் எண்ணத்துடன் ஒரு ஆசாமி ஏறிக் கொண்டிருப்பதாக நினைத்தனர். பொலிசாருக்கு போன் செய்தனர். கட்டடத்தின் முன்பாக பெரும் கூட்டம் கூடிவிட்டது. தொலைக்காட்சிக்காரர்களும் இக் காட்சியை படமாக்கத் தொடங்கிவிட்டார்கள்.

பொலிசாரும் இவர் தற்கொலை செய்யத்தான் வேகம் வேகமாக ஏறுகிறார் என்று நினைத்து இறங்கிவருமாறு அழைத்துப் பார்த்தனர். இவர் கேட்காமல் தொடர்ந்து ஏறியதால், கட்டடத்தின் உட்பக்கத்தால் சென்று மடக்கிப் பிடித்தனர். அப்போது ஆயிரத்தி முன்னூற்று ஐம்பது அடி உயரத்துக்கு ஏறி முடித்திருந்தார் ஜோச் வில்லிக். பின்னர்தான் தெரிந்தது தற்கொலை முயற்சியல்ல, சாதனை முயற்சி என்று. ஆனாலும் பொலிசாருக்கு கெட்ட கோபம். போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்தியது உட்பட நஷ்டஈடாக இரண்டரை இலட்சம் டொலர்கள் செலுத்துமாறு கோரினார்கள்.

ஆனால் தொலைக்காட்சிகள் மூலமாக இவரது சாதனை முயற்சியை கண்ட மக்கள் வாய்பிளந்து நின்றனர். அதனால் ஹீரோவாகிவிட்டார் ஜோச் வில்லிக். அதனால் அபராதத் தொகையை குறைத்தனர். ஆக ஒரே ஒரு டொலர் மட்டும் நியூயோர்க் மேயரிடம் சிரித்த முகத்துடன் தண்டமாக செலுத்திவிட்டு வந்துவிட்டார் தாவல் மன்னன். ■



↑ நியூயோர்க் மேயரிடம் தண்டப் பணத்தை செலுத்திவிட்டு சிரித்தபடி காணப்படுகிறார் ஜோர்ஜ் வில்லிக்.


## தகவல் பெட்டி



## தங்கமோ தங்கம்


→ பார்த்தால் விளையாட்டு ரயில் போலத்தான் தெரியும். ஆனால் விலை உயர்ந்த ரயில். முழுக்க முழுக்க தங்கத்தினால் செய்யப்பட்டது. ஹொங்ஹொங்கில் நடைபெற்ற உலகின் அபூர்வப் பொருட்கள் கண்காட்சியில் இதனையும் பார்வைக்கு வைத்தனர். நேரில் காணும்போது கண்களைப் பறிக்கும் வகையில் இருக்கும். இதனைக் கண்டவர்கள் வியந்து போனார்கள். இன்று நேற்றல்ல, 1835ம் ஆண்டில் ஜெர்மன் நாட்டுக் கலைஞரால் உருவாக்கப்பட்டதாம். ஒல்ட் இஸ் கோல்ட். ■

## காம்பு ஒன்று, காய் மூன்று



← ஒரு கொடியில் இரு மலர்கள் என்பது அதிசயமல்ல. ஒரு காம்பில் மூன்று காய்கள் என்றால் அதிசயம்தான்.

தமிழ்நாட்டில் மார்த்தாண்டம் என்ற ஊரில் அருள் பிரகாஷ் என்பவரது தோட்டத்தில்தான் ஒரு காம்பில் மூன்று கத்தரிக்காய்கள் காய்த்துள்ளன. இந்தக் காம்புக்கு கல்லெறிந்தால் ஒரேயடியாக மூன்று காய்கள் வரும். கல் ஒன்று காய் மூன்று என்றழைக்கலாம், யாராவது எறிந்து பார்த்தார்களா தெரியவில்லை. ■



## மஞ்சள் ஆற்றின் மீதினிலே

↑ ஆச்சரியம் ஆனால் உண்மை. கார் பறக்கும் காட்சியைத்தான் சொல்கிறோம்.

சீனாவில் உள்ள மஞ்சள் ஆற்றை ஸ்போட்ஸ் கார் ஒன்றின் மூலம் ஒரே பாய்ச்சலாக கடந்து செல்லும் காட்சிதான் இது. மஞ்சள் ஆற்றைத் தாண்டிய இந்தக் கார் அப்படியே சேவ்ஸி மலை உச்சியை சென்றடைந்தது.

இந்த அபாயகரமான உலக சாதனையை படைத்திருப்பவர் தைவானைச் சேர்ந்த ஸ்டண்ட் மாஸ்டர் சீ கோலியாவ். அவர்தான் காரை இலாவகமாகச் செலுத்தி அசத்தியிருக்கிறார். இந்த ஸ்போட்ஸ் காருக்கு விமான எரிபொருள்தான் பயன்படுத்தப்படுகிறதாம். உயிரைப் பணயம்வைத்து படைத்த சாதனை இது. சற்றுப் பிசகினால் காரும் மிஞ்சாது, எலும்பும் மிஞ்சாது.

## கால் நாலு

↓ எங்கள் வீட்டுக் கோழி, உங்கள் வீட்டுக் கோழி எல்லாவற்றுக்கும் இரண்டு கால்கள்தான். ஆனால் இது பாலஸ்தீன கோழி. எண்ணிப் பாருங்கள் நான்கு கால்கள் இருக்கின்றன. பாலஸ்தீனத்தில் அபூ ஸமீர் என்பவரது கோழிப் பண்ணையில்தான் இந்த அதிசயக் கோழிக் குஞ்சு பிறந்திருக்கிறது. பத்திரமாக பராமரித்து வருகிறார்கள். தினமும் நூற்றுக் கணக்கானோர் சென்று இதனைப் பார்வையிடுகின்றனர்.

(பட உதவி எம்.ஐ.எச்.ஜமால். அபுதாபி) ■





## இந்த மானைப் பாருங்கள்

← நாய் குரைக்கும் என்பது தெரியும். மான் குரைக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இந்த மானைப் பாருங்கள், இது குரைக்கும்.

தமிழ் நாட்டில் சென்னையில் உள்ள கிண்டி சிறுவர் பூங்காவில்தான் இந்த குரைக்கும் மான் கொண்டுவரப்பட்டுள்ளது. துருக்கி நாடுதான் இதன் பூர்வீகம். இப்போது ஏழு வயது.

வழக்கமாக பூங்காக்களில் வளர்க்கப்படும் மான்கள் புல், பிண்ணாக்கு போன்றவற்றை உண்பதுண்டு. இந்த மானின் உணவும் வித்தியாசம்தான். காரட், வாழைப்பழம் போன்றவற்றை ஒரு பிடி பிடிக்கிறதாம்.

தனியாக இருப்பதால் வாடிப்போயிருக்கிறதாம். அதனால் இதற்கு துணையாக இன்னொரு குரைக்கும் மானை கொண்டுவரப்போகிறார்கள். ■



படிப்பகம்

www.padippakam.com

## அனுமான் மணி

நக்மாவும், ரம்பாவும் இணைந்து கலக்கப் போகும் படம் 'ஜானகிராமன்'. நாயகன் சரத்குமார். 'சூரியவம்சம்' படம் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருப்பதால் அந்தச் சூட்டோடு ஜானகிராமனை திரையிடப் போகிறார்கள்.

படத்தில் இன்னொரு கலக்கலும் உண்டாம். ஒரே ஒரு காட்சியில் அனுமாராகத் தோன்றி பக்தர்களுக்கு அருள் புரிகிறாராம் மணிவண்ணன். நையாண்டித்தனமும் உண்டாம்.

## நக்மா வருத்தம்

நக்மாவுக்கு கார்த்திக்மீது சின்னதாக வருத்தமாம். காரணம், கார்த்திக் நடிக்கும் சுந்தரபாண்டியன் படத்தில் அவரது ஜோடியாக நக்மாவின் தங்கை ரோஷினிதான் நடிப்பதாக இருந்தது. 'சிஷ்யா' படம் படுதோல்வி கண்டதால் ரோஷினிக்கு கல்தா கொடுத்துவிட்டு, சுவாதியை போட்டிருக்கிறார்கள். ரோஷினியிடமும் கார்த்திக் 'சிஷ்யா' படப்பிடிப்பில் தட்பாகவே நன்கு பழகிக்கொண்டார். பின்னர் அவரை தூக்க விட்டிருக்கலாமா? என்பதுதான் நக்மாவின் வருத்தம். நக்மாவின் சிபாரிசில்தான் 'சிஷ்யா'வில் கார்த்திக் ரோஷினியை நடிக்க வைத்தார் என்பது தெரிந்த செய்திதானே.

## ஜூலியா

மன்சூர் அலிகானின் கண்டுபிடிப்பு. மும்பாயில் கண்டெடுத்த கவர்ச்சிக் குண்டு. 'வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு' படத்தில் இவர் வீசும் குண்டுகளை சந்திக்கலாம். மன்சூர் அலிகானின் கவனிப்பில்தான் இருக்கிறாராம். 'வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டு' வெளிவந்தால்தான் ஜூலியாவின் எதிர்காலம் தீர்மானமாகும். படம் பப்படமானால் ஜூலியா படவுலகைவிட்டு காலியாகலாம்.

## நான் சொல்வதெல்லாம் உண்மை

நடிகை கஸ்தூரி பிறமொழிப் படங்களில் கவர்ச்சி காட்டுவதில் வஞ்சகம் பண்ணுவதில்லை. அதே படங்கள் தமிழில் மொழி மாற்றப்பட்டு வரும்போது தமிழ்ப்பட ரசிகர்களுக்கும் கஸ்தூரியின் கவர்ச்சி தரிசனம் கிட்டுகிறது.

தெலுங்கில் வாய்ப்புப்பெற கஸ்தூரிக்கு உதவி செய்தவர் ஒரு தொழிலதிபர். அதற்கு நன்றிக்கடனாக தொழிலதிபருடன் இரகசியமாக வெளிநாடு சென்று வந்தார் கஸ்தூரி என்று ஒரு செய்தி கசிந்துள்ளது.

கஸ்தூரி அதனை மறுக்கிறார். "என் திறமையால்தான் தெலுங்கில் வாய்ப்புத் தேடி வந்தது. நானாக தேடிப் போகவும் இல்லை. யாரும் சிபாரிசு செய்து வாங்கித்தரவும் இல்லை. எனக்கு தனிப்பட்ட ரீதியில் எத்தனையோ நண்பர்கள் இருக்கலாம். அவர்கள் என் தொழிலில் தலையிடமாட்டார்கள். குடும்ப நண்பர்கள் அவர்கள். நான் சொல்வதெல்லாம் உண்மை. நம்பினால் நம்புங்கள்" என்கிறார் கஸ்தூரி.

## இந்தியில் ரகுவரன்

தமிழில் மறுபடியும் தீவிரமாக நடித்துக் கொண்டிரு... கிறார் ரகுவரன் என்பது தெரிந்த செய்தி. அமிதாப்பச்சன் நடிக்கும் இந்திப் படமான 'லால் பாட்ஷா' படத்தி... நடிக்க ரகுவரனை அழைத்தார்கள். தேதிகள் இல்லை என்று மறுத்திருந்தார். தமிழ்ப் படவுலக வேலை நிறுத்த... வந்ததால் இந்திக்கு ஓடிப்போய் 'லால் பாட்ஷா' படத்தி... நடித்துக் கொண்டிருக்கிறார் ரகுவரன்.

## தெலுங்கில் மந்த்ரா

தமிழில் கார்த்திக்- சுவலட்சுமி நடித்த 'கோகுலத்தி... சீதை' தெலுங்கில் தயாராகிறது. கார்த்திக் வேடத்தி... நடிப்பவர் சிரஞ்சீவியின் தம்பி கல்யாண். சுவலட்சு... நடித்த பாத்திரத்தில் மந்த்ரா நடிக்கிறார். இயக்கப்போவ... அகத்தியன் அல்ல. தெலுங்கில் பிரபலமான முத்தியா... சுப்பையாதான் இயக்குகிறார்.

## காதல் பற்றி கஸ்தூரி

நடிகை கஸ்தூரியின் பட்பட் பதில்கள்.

**காதல் என்றால் என்ன?**

காதல் ஒரு காமதேனு. கவிதைகளுக்கு கதைகளுக்... கனவுகளுக்கு. சந்தோசத்துக்கு.

**காதலை எப்போது தெரிவிக்கலாம்?**

சக்ஸஸ் ஆகும் என்ற தைரியம் வந்துவிட்டா... தைரியமாகத் தெரிவிக்கலாம்.

**காதலை எப்படியெல்லாம் தெரிவிக்கலாம்?**

கண், கடிதம், சொல், பூ, சாக்லேட், இ... பற்றியெல்லாம் தெரியும்தானே.

**காதல் எதிரிகளைப் பற்றி?**

காதலை யாரும் எதிர்ப்பதில்லை. காதலர்களுக்கு தான் எதிர்ப்பு வருகிறது.

**காதலர்கள் அடிக்கடி எதைப் பரிமாறிக் கொள்வார்கள்...**

காதலிக்கும் என் தோழியைக் கேட்டுப் பார்த்தே... முறைத்தாள்.

**காதல் எப்போது இனிக்கும்? எப்போது கசக்கும்?**

'தேன்' நிலவில் இனிக்கும். இல்லையேல் கசக்கு... கண்ணை.

**பிடித்த காதல் பாடல், படம்?**

பாடல்; வெண்ணிலவே. படம்; முதல் மரியாதை

**அடுத்த நூற்றாண்டில் காதல் எப்படியிருக்கும்?**

அடுத்த வீட்டுப் பெண் பக்கத்து கிரகக்காரனை... கல்யாணம் செய்துகொண்டதை விவாதித்து... கொண்டிருப்போம்.

சினி சீட்



பிரபு-மந்த்ரா
படம் தேடினேன் வந்தது

## எதற்கும் தயார்

பிரகாஷ்ராஜ் 'குருபார்வை' உட்பட ஐந்து படங்களில் கதாநாயகனாக நடித்துக் கொண்டிருக்கிறார். அவர் கதாநாயகனாக நடித்து வெளியாகியுள்ள 'நந்தினி' போட்ட முதலுக்கு பாதகமில்லாமல் ஓடிக் கொண்டிருக்கிறது.

'குருபார்வை' படத்தில் பிரகாஷ்ராஜ் ஜோடி குஷ்பு. மேலும் மூன்று கதாநாயகிகளும் நடிக்கப் போகிறார்கள். கொண்டாட்டம்தான்.

கன்னட நடிகரான பிரகாஷ்ராஜுக்கு தமிழ்ப் படவுலகில் சிவப்பு கம்பள வரவேற்பு.

"ஒரேவிதமான பாத்திரங்களில் நடிக்காமல் வித்தியாசம் காட்டவே விரும்புகிறேன் சிறந்த கதாநாயகனாக ரசிகர்கள் ஏற்காவிட்டால் மறுபடி வில்லனாக நடிக்கப் போய்விடுவேன்" என்கிறார் பிரகாஷ்ராஜ். டேக் இட் ஈஸி பொலிசி.



முகப்பில்
கஸ்தூரி

உஜ்வாலா
படம்: அமைதி

நாகார்ஜுன்
படம்:
ரட்சகன்

"சித்திர
விழிகளென்ன
மீனோ? மானோ?
செவ்விதழ்
வடித்ததென்ன
பாலோ? தேனோ?
முத்திரை
கன்னங்களென்ன
பூவோ?
பொன்னோ?
மோகத்தில்
துடித்ததென்ன
நீயோ
நானோ?"

ஜூலியா
படம் வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு

விக்னே...
பட...

திரையுலக மறுபக்கம் 16

மித்ரவாசு

# மாணவியரும் மோகன நடிகரும் எம்.ஜி.ஆருக்கு வந்த கோபம்

பெயரில் மட்டுமே மோகனமான ஒரு மூன்றெழுத்து நடிகருக்கும், பல கல்லூரி மாணவியருக்கும் வெளிப்படையான தொடர்பிருந்ததை மாணவர்கள் பல சந்தர்ப்பங்களில் அறிந்து, நேரில கண்டுமிருக்கின்றனர்.

அந்த நடிகர் கல்லூரி வாசலுக்கே சென்று மாணவியரைக் காரில் ஏற்றிச் சென்றது மாணவ, மாணவியரின் கண்முன்னாலேயே நடந்திருக்கிறது. அந்த நடிகர் கலந்துகொண்ட படப்பிடிப்பு நடைபெறுமிடத்திற்கு பல மாணவியர் வந்து அவரோடு கொஞ்சிக் குலாவியதைப் பத்திரிகையாளர்கள் பலர் நேரிலேயே கண்டிருக்கின்றனர்.

இதுபோல நடவடிக்கைகளைக் கொண்ட, மாணவியரின் பின்னால் அலைந்த மற்றொரு நடிகர், 'ஒரு தலை ராகம்' படத்தில் அறிமுகமான 'ர' நடிகர். இவர் பஸ்சுக்காக கல்லூரி வாசல்களில், பஸ் நிறுத்தங்களில் நிற்கும் மாணவியருக்கு தன் காரில் லிப்ட் கொடுப்பார். அதில் பலவீனமாக உள்ள பெண்களோடு பேச்சுக்கொடுத்து தன் வலையில் வீழ்த்தியுமிருக்கிறார். மாணவியரைத்தவிர வேறு பெண்களைத் தன் காரில் ஏற்றிச் செல்வதில்லை என்று ஒரு கொள்கையே வைத்திருந்தார்.

### இடி ரசிகர்

காஷ்மீரில் 'நினைத்ததை முடிப்பவன்' படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. எம்.ஜி.ஆர், மஞ்சுளா பங்குகொண்ட 'ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து' என்ற பாடல் காட்சி, தால் ஏரியில் இருந்த படகு வீடொன்றில் படமாகியது.

படப்பிடிப்பைக் காண மற்றொரு படகில் வந்திருந்த காஷ்மீர் மாணவிகள் எம்.ஜி.ஆரைப் பார்த்து "நாங்கள் உங்களை முத்தமிட விரும்புகிறோம்" என்று கூச்சலிட்டனர்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார் எம்.ஜி.ஆர். தலைவலியை உருவாக்கிவிடுவார்களோ என்று பயந்தவர், கோபமாக ஆங்கிலத்தில் ஒரு வார்த்தை சொன்னார். அத்தனை பெண்களும் அடங்கிவிட்டனர்.

காஷ்மீர் சோனாமார்க் பகுதியில் இதே 'நினைத்ததை முடிப்பவன்' படப்பிடிப்பு. எம்.ஜி.ஆர்., மஞ்சுளா நடித்த காட்சிகளை மாணவர் கூட்டமொன்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

மஞ்சுளா படப்பிடிப்பு இடைவெளியில் தனது நாற்காலியில் வந்தமர்ந்தார். அருகில் நின்றிருந்த மாணவன் ஒருவன் கேலியாக நாற்காலியை நகர்த்திவிட்டு மஞ்சுளாவின் பின்பக்கம் இடித்தான். உடனே மஞ்சுளா 'இடியட்' எனத் திட்டினார்.

இதைப் பார்த்த எம்.ஜி.ஆர். கடுமையான கோபத்துடன், தான் போட்டிருந்த கோட்டை கழற்றிவிட்டு, "டேய் தம்பி! மரியாதை கற்றுத்தரவா?" என்று முஷ்டியைத் தூக்கி கையை ஓங்க, அந்த மாணவன் ஓட்டம் பிடித்தான்.

### மணமானபின் வந்தவர்கள்

திருமணமாகியபின், குழந்தைகள் பெற்றபின் சினிமாவில் நடிக்க வந்த நடிகைகளும் உண்டு. அதை வெளியில் சொல்லிக் கொண்டவர்கள் ஒரு சிலரே. சௌகார் ஜானகி திருமணமாகியபின் குழந்தைகள் பெற்றபின் நடிக்க வந்தவர். அதைப் பகிரங்கமாக சொல்லிய பின்னரே நடித்தார்.

நடிகை சரிதா சினிமாவுக்கு வருவதற்கு முன்பே, மேஜராவதற்கு முன்பே திருமணம் செய்துகொண்டவர். சினிமாவில் அவர் நடிக்க வந்த பின்னர், 'என் மனைவி எனக்கு வேண்டும்' என்று கணவர் கோட்டுக்குப் போனபோது, திருமணமே செல்லாது என்று வழக்காடி வெற்றி பெற்றார் சரிதா. ஆனால் இதை சரிதா ஒருபோதும் வெளிப்படுத்திக் கொள்ளவில்லை.

இன்று சினிமாவைவிட்டு காணாமல்போயிருக்கும் அந்த பிரமிப்பூட்டிய பிரமிளமான நடிகை மணமாகி குழந்தை பெற்றபின் சினிமாவில் நடிக்க வந்தார். தன் மனைவி சினிமாவில் நடிப்பதை பத்திரிகைகள், போஸ்டர்கள் வாயிலாகப் பார்த்த கணவர் அரண்டுபோனார். விவாகரத்து நோட்டீஸ் அனுப்பினார்.

### நடிகையின் பேட்டி

சமீபகாலமாக அரசியலில் ஈடுபாடு காட்டத் தொடங்கியுள்ளார் இரண்டெழுத்து நடிகை. மக்கள் அபிமானம் பெற்ற திலகத்துடன் நெருக்கமாக இருந்ததாக பேசப்பட்ட நடிகைகளில் ஒருவர்.

அந்த நடிகை அப்போது ஸ்ரைல் காட்டிப் பிரபலமாகிய, சுருக்கமாக மூன்றெழுத்தால் அழைக்கப்படும் நடிகருடனும் நெருக்கமானார். அந்த நடிகருடன் ஒரே ஒரு படத்தில்தான் நடித்தார் நடிகை. அதற்குள் நடிகரை தன் கையில் போட்டுக்கொண்டார். அதன் பின்னர் 'திலக' நடிகரையும் கண்டுகொள்ளாமல் இருந்தார். திலக நடிகரும் அப்போது நடிப்பைவிட்டு வேறு துறையில் பிஸியாகிவிட்டார்.

இது நடிகைக்கு வாய்ப்பாகிப் போனது. 'ஸ்ரைல்' நடிகரை கல்யாணம் செய்யுமளவுக்கு நடிகை செல்ல, ஸ்ரைல் நடிகரை நேரில் அழைத்து 'திலக' நடிகர் புத்திசொன்னார். "அந்த நடிகையை நம்பி மோசம் போகாதே. நீ வளரவேண்டியவன். உன் எதிர்காலத்தைப் பாழாக்காதே" என்று புத்தி சொல்லி அனுப்பினார். 'ஸ்ரைல்' நடிகரும் அத்துடன் நடிகைக்கு கும்பிடு போட்டுவிட்டு, பின்னர் வேறொரு பெண்ணை காதலித்து மணந்தார். அவர் காதலித்த நடிகையின் பெயர்தான் மணந்த பெண்ணின் பெயரும் என்பதுதான் ஆச்சரியமான ஒற்றுமை.

தன் காதலை கெடுத்துவிட்டதாக 'திலக' நடிகர்மீது கோபப்பட்ட நடிகை சிங்கப்பூர் சென்றார். அங்கு திலக நடிகரை அந்தரங்க ரீதியாக விமர்சித்து பேட்டியளித்தார். அவருக்கு வயதாகிவிட்டது. என்று தொடங்கி.... சொல்லக்கூசும் விதமாகவெல்லாம் விமர்சனம் பண்ணினார். அந்த இரண்டு எழுத்து நடிகைதான் தற்போது அதே 'திலக' நடிகரின் பெயரைச் சொல்லிக்கொண்டு அரசியல் பிரவேசம் செய்திருக்கிறார்.

## சாந்தியைத் தேடும் ராஜா


பாரதிராஜா என்றால் மண்வாசனை கமகமக்கும் படங்களை இயக்குபவர் என்று ஒரு முத்திரை விழுந்துவிட்டது. 'சிகப்பு ரோஜாக்கள்', 'கொடி பறக்குது' போன்ற படங்களை இடையிலே எடுத்த போதும் அவரது ராசி மண்வாசனைப் படங்கள்தா...

இப்போது தெலுங்குப் படவுலகப் பக்கம் பாரதி... கவனம் திரும்பியிருக்கிறது. விரைவில் ஒரு தெலுங்குப்... இயக்கப் போகிறார். நாயகி யார் தெரியுமா? வி...



படிப்பகம்

www.padippakam.com



விக்னேஷ்
படம்: ராமன் அப்துல்லா

# மினி சினி

* கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் 'அவ்வை சண்முகி' படத்தில் நடித்த கமல் மீண்டும் கே.எஸ்.ரவிக்குமார் இயக்கும் படமொன்றில் நடிக்கவுள்ளார். இதில் கமல் கௌரவ வேடத்தில் நடிக்க இருக்கிறார்.

* பிரியதர்ஷன் இயக்கத்தில் மோகன்லால்-சுகன்யா இணைந்து நடிக்கும் 'சந்திரலேகா' என்ற மலையாளப்படத்தில், இந்தி நட்சத்திரங்களான அனில்கபூரும், பூஜா பட்ராவும் முக்கிய வேடங்களில் நடிக்கிறார்கள்.

* பிரபு-சுரேஷ்கோபி இணைந்து நடிக்கும் படத்திற்கு 'அமைதிப்பூங்கா' என்று பெயரிட்டார்கள். பின்பு 'நண்பா நண்பா' என்று மாற்றினார்கள். இப்போது அதையும் மாற்றி 'அமைதி' என்று பெயரிட்டுள்ளார்கள்.

* 'பாரதி கண்ணம்மா' படம் மூலம் இயக்குநரான சேரன் தற்போது முரளி-மீனா-சங்கவி நடிக்கும் 'பொற்காலம்' படத்தை இயக்கி வருகிறார். அத்துடன் இப்படத்தில் புகைப்படக்காரர் வேடத்தில் நடித்தும் வருகிறார்.

* நடிகர் திலகம்- விஜய் இணைந்து நடித்த 'ஒன்ஸ்மோர்' படத்தை இயக்கிய எஸ்.ஏ. சந்திரசேகரன் அடுத்து இயக்கும் படத்திற்கு 'லவ்லெட்டர்' என்று பெயர் வைத்துள்ளார். இதில் கதாநாயகன்-விஜய்.

* 'பூச்சூடவா', 'ஜாலி' ஆகிய படங்களில் அப்பாஸ்-சிம்ரான் இருவரும் ஜோடியாக நடித்து வருகின்றனர். இதைத் தொடர்ந்து 'இதுதான் காதல்' படத்திலும் அப்பாஸ்-சிம்ரான் ஜோடியாக நடிக்கின்றனர்.

* அஜித்குமார் நடித்த 'ராசி' படத்தைத் தயாரித்த நிறுவனம், மீண்டும் அஜித்குமாரை வைத்து 'வாலி' என்ற படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டிருந்தார்கள். 'ராசி'படத் தோல்வியால் அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டார்கள்.

* 'பூவே உனக்காக' படத்தின் தெலுங்குப் பதிப்பில் நடித்த மந்த்ராவுக்கு பல புதிய படவாய்ப்புக்கள் வந்துள்ளன. அவற்றில் இரண்டு படங்களில் மட்டுமே நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார் மந்த்ரா.

* 'பாஞ்சாலங்குறிச்சி' படத்தில் பிரபுவுடன் ஒரு பாடல்காட்சியில் நடனமாடியவர் கல்பனா. சின்னச் சின்ன வேடங்களில் நடித்துள்ள இவர் 'மனக்கதவு' என்ற புதிய படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார்.

* ஜெயராம் நடிக்க ஆர்.வி.உதயகுமார் இயக்கும் 'பெரியராமசாமி சின்னராமசாமி' படத்தில் மணிந்தர் என்பவர் வில்லனாக அறிமுகமாகிறார். இவர் ஆர்.வி.உதயகுமாரிடம் உதவி இயக்குநராகவும் பணிபுரிந்து வருகிறார்.


# காதோடு சொல்லுகிறோம்

'மீன்' நடிகைக்கு இந்திப் படங்களில் நடிக்க கொள்ளை ஆசையாம். ஆனால் யாரும் வாய்ப்புத் தருவதாக இல்லை. அம்மணி யார் யாருக்கோ தூதுவிட்டுப் பார்த்தார். பலன் இல்லை கடைசியாக தானே நேரில் சென்றும் வலை விரித்துப் பார்த்தார். ஒரு பலனும் இல்லையாம். பட்டதுபோதும் இந்தியாலே என்று பழையபடி தமிழுக்கே திரும்பிவிட்டார் பாவம்.

தமிழ் மகாகவியின் பெயரையும், மகாகவியின் பாடல்களில் இலட்சியக் காதலியாக வரும் பெண் பெயரையும் சேர்த்தால் அப்படத்தின் பெயர் வரும். வெற்றிகரமாக ஓடிய அப்படத்தின் இயக்குநர் பெயரும் பழம்பெரும் மன்னர் பரம்பரைப் பெயர்தான். அந்த இயக்குநருக்கும் மீன் நடிகைக்கும் இடையே ஏற்பட்டுள்ள நெருக்கம் பற்றித்தான் தற்போது பேசப்படுகிறது. படப்பிடிப்புக்கு வெளியேயும் இயக்குநர் சொற்படி ஆடுகிறார் நடிகை. இயக்குநரின் புதிய படத்திலும் அவர்தான் நடித்துக் கொண்டிருக்கிறார். நடிகையை இயக்குநர்தான் குத்தகை எடுத்திருக்கிறார். இதனால் குரு-சிஷ்ய மோதல் ஏற்பட்டுள்ளதாம். இளம் இயக்குநரின் குருவான இயக்குநர்தான் முன்னர் மீன் நடிகையை மொத்தக் குத்தகை எடுத்து கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். தொடர்ந்து தன் படங்களில் வாய்ப்பளித்தார். நாட்டாமையான அந்த இயக்குநர் இப்போது தன் சிஷ்யர்மீது வருத்தமாக இருக்கிறார். இளம் இயக்குநரோ 'கண்ணம்மா' என்று கொஞ்சிக் கொண்டிருக்கிறார். அவருக்கு இது 'பொற்காலம்'.

இதுவும் ஒரு இரண்டெழுத்து நடிகை பற்றிய சேதிதான். இந்தியில் இருந்து வந்த நடிகை அவர். அவரது பெயர் நடுவே ஒரு எழுத்தை சேர்த்தால் தப்பு என்றாகும். ஆக்ஷன்கிங்குடன் ஒரு படத்தில் நடித்து முடித்திருக்கிறார். அப்போது நட்பு வளர்ந்தது. நட்பை தொடர்ந்து நீடிக்க 'ஆக்ஷன்கிங்' விரும்பினாராம். ஆனால் நடிகையோ கைகொடுக்க மறுத்துவிட்டாராம்.

தமிழில் 'ஸ்டார்' நடிகருடன் அந்த நடிகை நடித்த படம் வெற்றி நடை போடுகிறது. அப்படியிருந்தும் நடிகை தமிழில் தொடர்ந்து கவனம் செலுத்துவதை அவரது பிரியத்துக்குரிய கன்னட நடிகர் விரும்பவில்லையாம். அங்கிருந்தால்தான் சௌந்தர்யமாக இருக்கலாம் என்று கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறாராம்.



# விஜயகாந்த் கசப்பு

விஜயகாந்த், மீனா, சங்கவி நடிக்கும் 'உளவுத்துறை' ...த்தின் இயக்குநர் புதியவர். படப்பிடிப்பு இன்னமும் முடிந்த...ல்லை. இயக்குநருக்கும் விஜயகாந்த்துக்கும் இடையே ...த்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாம். படத் தயாரிப்பும் விஜய...த்தான். அதனால் தற்போது விஜயகாந்த்துக்கு வேண்டப்பட்ட இயக்குநர்கள் மீதிப் பட வேலைகளை கவனிக்கிறார்களாம். ...றாலும் புதியவர்தான் பேருக்கு இயக்குநராக இருக்கிறார். ...ர் பிழைப்பைக் கெடுப்பானேன் என்று விட்டாராம் விஜயகாந்த்.

# ...ஜ்வாலா

முகப்பில் கஸ்தூரிக்கு அருகே உள்ளவர் உஜ்வாலா யார் இந்த உஜ்வாலா? ..., சுரேஸ் கோபி நடிக்கும் 'அமைதி' படத்தில் அறிமுகமாகிறார். ...தில் சுரேஸ் கோபியின் ஜோடியாக நடிக்கிறார். 'அமைதி'யில் ...வாலா அசத்தினால் வீசப்போவது புயல். அதாவது, கவர்ச்சிப் புயல். பெயர்தான் ஒரு தினுசாக இருக்கிறது.



...வயாணி
...தலி

# நாம் இருவர் நமக்கு இருவர்
## சுந்தர் இயக்கத்தில் பிரபுதேவா

நாம் இருவர். நமக்கு இருவர். பெயரைப் பார்த்தும் குடும்பக் கட்டுப்பாட்டு பிரசாரமோ என்றுதான் தோன்றும். இது பிரபுதேவா புதிதாக நடிக்கும் படம். இயக்கப் போவது குஷ்புவின் காதலர். அதுதாங்க, சி. சுந்தர்.

கதையில் சுவாரசியம் யாதென்றால், ஒரு இளைஞனை இரண்டு பெண்கள் விழுந்து விழுந்து காதலிக்கிறார்கள். பிரபுதேவாமீது விழுந்து காதலிக்கப் போகிறவர்கள் ரம்பாவும், மகேஸ்வரியும். இரண்டு காதலிகளிடமும் தன்னை வேறு வேறு ஆளாகக் காட்டி பிரபுதேவா செய்யும் குறும்புகள், வம்புகள்தான் கதையாம்.

'வி.ஐ.பி.'யில் சிம்ரானுடன் கவர்ச்சிப் போரில் களம் கண்ட ரம்பா, இதில் மகேஸ்வரியுடன் மோதப்போகிறார். துணிகள் நாற்புறமும் பறக்கப்போகின்றன. ஜொள்ளர்கள் ஜோராக கைதட்டலாம்.

ஜெமினிகணேசன், ஆனந்தராஜ், பொன்னம்பலம், ஆர். சுந்தர்ராஜன் ஆகியோரும் நடிக்கின்றனர். இசை; சிற்பி. பாடல்கள் பழனிபாரதி.

# நடிகைகள் ஓட்டம்

'எய்ட்ஸ் வதந்தியில் ஒரு நடிகரும் சிக்கினார். அவர் மோகன், பல வெள்ளி விழாப் படங்களில் மைக்கும் கையுமாக தோன்றிய மோகனேதான்.

படவாய்ப்பே இல்லாமல் இருந்த மோகன் சொந்தமாக படம் தயாரித்து நடிக்க முடிவு செய்தார். அவரது கெட்ட நேரம் 'எய்ட்ஸ்' வதந்தி பரவியது. கூட நடிக்க, நடிகைகள் பயந்து ஓடுகிறார்கள். அது போதாது என்று படத்தின் பெயரையும் அடிக்கடி மாற்றிக் கொண்டிருக்கிறார். முதலில் 'உயிரின் ஓசை' பின்னர், 'சந்தோஷம்', இப்போது அப் பெயரையும் தூக்கிக் கடாசிவிட்டு 'பொன்விழா' என்று பெயர் வைத்திருக்கிறார்

# அருணாச்சலம் வசூல்

'பாட்ஷா', 'முத்து' படங்களைப் போல 'அருணாச்சலம்' அசத்தல் அல்ல. அப்படியிருந்தும் 'பாட்ஷா'வின் வசூலை சில பகுதிகளில் அருணாச்சலம் முறியடித்து விட்டது. தமிழ்நாட்டில் சேலத்தில் பாட்ஷா பட வசூல் இந்திய பண மதிப்பில் 23 இலட்சம். ஆனால் அருணாச்சலம் இப்போதே 27 இலட்சத்தை தாண்டிவிட்டது. திருநெல்வேலி நகரில் இதுவரை எந்தப் படமும் இரண்டு தியேட்டர்களில் திரையிடப்பட்டது கிடையாது. அருணாச்சலம் திரையிடப்பட்டு நூறு நாட்களை தாண்டி ஓடிக்கொண்டிருக்கிறது.

சென்னையில் திரையிடப்பட்ட ஆறு திரையரங்குகளில் நூறுநாள் கொண்டாடியது. தற்போது சென்னையில் மூன்று திரையரங்குகளில் 150 நாளை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனால் சென்னையில் 'பாட்ஷா', 'முத்து' பட வசூல்களை அருணாச்சலம் எட்டவில்லை.

# நட்பில் விரிசல்

சத்யராஜை வைத்து 'ராஜ்பிலிம்ஸ்' என்ற பெயரில் ஒன்பது படங்களைத் தயாரித்தவர் ராமநாதன். 'வாத்தியார் வீட்டுப் பிள்ளை', 'பிரம்மா', 'வில்லாதி வில்லன்', 'வள்ளல்' உட்பட ஒன்பது படங்கள். அவற்றிலே சில தோல்வியும் கண்டன. சத்யராஜின் மனேஜரும் அவர்தான்.

இப்போது நட்பில் விரிசல் ஏற்பட்டுவிட்டது. தனியாகப் போய் படத் தயாரிப்பில் ஈடுபடத் தொடங்கியுள்ளார். விக்ரமன், சேரன் ஆகிய இயக்குநர்களை வைத்து மூன்று படங்களை தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறார் ராமநாதன்.

சமீபத்தில் தமிழ்ப்படவுலக அடிதடி அனுபவம் காரணமாக அடிதடி நாயகியின் பக்கம் சென்றுவிட்டாரோ பாரதிராஜா?!



படிப்பகம்

# நிற்க, இருக்க, நடக்க தக்க யோசனைகள்

நிற்பது, இருப்பது, நடப்பது, படுத்திருப்பது போன்ற செயற்பாடுகளில் நாம் கடைப்பிடிக்கும் பாவம் மிகவும் பிரதானமானது. ஒருவருடைய தோற்றத்தை நிர்ணயிப்பது இந்தப் பாவம் தான். நமது மனோபாவத்துக்கேற்ப நமது உடலின் அங்கங்களும் அவற்றுக்கான சாயல்களைப் பெறுகின்றன.

நமது செயற்பாட்டில் முறையான பாவத்தைக் கடைப்பிடிக்காவிட்டால் சாயலின் அழகு கெடுவதுடன் மட்டுமல்லாமல் சில நோய்களும் எம்மைப் பீடித்துவிடும்; அங்கங்கள் கோணி அவலட்சணமடைந்துவிடும்.



ஒரு சினிமா நடிகை ஒரு வகைத் துள்ளல் நடைபோடுகிறாள். அவளுக்கு அது அழகாக அமைந்துவிடுகிறது. அதைப் பின் பற்றி எமது இள நங்கையரும் துள்ளல் நடை போட எத்தனித்தால் இடையில் சுளுக்கு ஏற்பட்டு விடக்கூடும்.

எமக்கென்று இயல்பாக அமையும் நடையே அழகுதரும். அதனை மாற்ற முனையும்போது முழங்கால் வலி, முதுகு நோ, தசை நார்ப்பிடிப்பு போன்றவை ஏற்படுவதுடன் உடலின் நிதானம் தவறிவிடும்.

நடக்கும்போது நிமிர்ந்து நடக்க வேண்டும். சிறிதளவு கூனி நடந்தாலும் அக்கூனல் நாளடைவில் முதுகில் பெரும் வளைவினை ஏற்படுத்தி நிரந்தரக் கூனல் என்ற நிலையினை ஏற்படுத்திவிடும்.

### படுக்கை

படுக்கும்போது எப்போதும் இறுக்கமான உடைகளை அணியக்கூடாது. நரம்புகள், எலும்புகள் பாதிப்படையக் கூடியதாகப் படுத்திருத்தல் கூடாது. நன்றாகச் சுவாசிப்பதற்கேற்ற காற்றோட்டமுள்ள இடத்தில்தான் படுத்திருக்க வேண்டும்.

கூடுமானவரை கை கால்களை நீட்டிப் படுத்திருக்க வேண்டும். படுக்கை கரடு முரடாக இருக்கலாகாது. தலையணை அளவான உயரமாயும் மெதுமெதுப்பாகவும் இருக்கவேண்டும். படுக்கையும் தலையணையும் சீராக இருக்காவிட்டால் முதுகுவலி, கழுத்துச் சுளுக்கு போன்ற உபாதைகள் ஏற்படும். மூட்டுவாதம் ஏற்படவும் வழிகோலும்.

படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள் அடிக்கடி கழுவ வேண்டும். தலையணை உறைக்கு மேல் ஒரு விரிப்பினை விரிக்க வேண்டும். இதனை ஒவ்வொரு நாளும் மாற்ற வேண்டும். கழுவி நன்றாக வெயிலில் உலர்த்திய விரிப்பினைப் பயன்படுத்த வேண்டும்.

படுக்கும் பாயை அல்லது விரிப்பை எப்போதும் ஒரே சீராக விரிக்க வேண்டும். இன்று தலைவைத்துப் படுக்கும் பக்கத்தில் நாளை காலை வைத்துப் படுக்கலாகாது.



### இருக்கை

அலுவலகங்களில் பணிபுரிவோர் தினசரி ஒரே இருக்கையில் ஏறத்தாழ 8 மணி நேரமாவது இருக்க வேண்டியிருக்கும். ஆகவே, சௌகரியமாக அமர்ந்து செயலாற்றுவதற்கு வசதியாக மேசை-நாற்காலிகளைத் தெரிவு செய்துகொள்ள வேண்டும். 6 அடி உயரமான ஒருவர் பயன்படுத்தும் இருக்கையை 5 1/2 அடி உயரமான பெண் பயன் படுத்தலாகாது.

தட்டச்சு, கணனி, படம் வரைவோர், சாதா ரண லிகிதர் போன்ற பணிகளைப் புரிவோர் ஒவ்வொருவருக்கும் தனித்தனிப் பாணியிலான இருக்கைகள் இருக்கின்றன. அவர வருக்கு வேண்டிய தளபாடங்களைத் தெரிவு செய்துகொள்ள வேண்டும்.

நிற்கும்போதும் கூடுமானவரை நிமிர்ந்து நிற்கப் பழகிக் கொள்ள வேண்டும். கோணலாகவோ கூனிக் கொண்டோ நிற்பதனால் அதுவே பழக்கமாகிவிடும்.

பஸ் நிலையங்களில் நெடுநேரம் காத்திருப்போர் மனஉளைச்சல் காரணமாக பலதரப் பட்ட முறைகளில் தங்கள் உடலை வளைத்து நெளித்து கோண வைப்பதைப் பார்த்திருக்கிறோம்.

இவ்வேளைகளிலும் நிதானமாக நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். கழுத்தை ஒரு புறம் கோணலாக வைத்திருக்கவோ தோள்களை உள்ளுக்குள் அழுத்தவோ கூடாது. நீண்ட நேரம் விறைப்பாக நிற்காமல் தசை நார்களைத் தளர்ச்சியாக்கிக் கொண்டு நிற்க வேண்டும்.



வாயிலிருந்து துர்நாற்றம் வீசுவது சர்வசாதாரணமாக ஒவ்வொருவரிடமும் உள்ளதுதான். அடிக்கடி பல்லை விளக்கி, வாயில் தண்ணீரைவிட்டுக் கொப்பளித்து இந்நாற்றத்தை ஓரளவு குறைக்கலாம். ஆனால் முழுமையாக வாய் நாற்றத்தை எந்த மருந்தைக்கொண்டும் நீக்கி விட முடியாது.

ஒருநாள் பொழுதில் எத்தனையோ பதார்த்தங்களை வாயிலிட்டு பற்களால் சப்பிப் புசிக்கிறோம்; எத்தனையோ வகையான பானங்களைப் பருகுகிறோம். இவற்றின் சில பருக்கைகள் நமது பற்களின் ஈறுகளுக்குள் புகுந்து ஒட்டிக்கொள்கின்றன.

இவை நெடு நேரம் அவ்வாறே ஒட்டிக் கொண்டிருப்பதனால் இரசாயனமாற்றங்கள் ஏற்படுகின்றன. கிருமிகளும் இப்பருக்கைகளுடன் சேர்ந்து விடுகின்றன. இதனாலும் வாயில் கெட்டவாடை ஏற்படுகிறது.

நாம் உண்ணும் உணவு சமிபாடடைவதற்காக பல சுரப்புகளை சுரபிகள் சுரக்கின்றன. அப்போது வயிற்றில் உண்டாகும் அமிலங்களின் வாயு வாயினால் தான் வெளியேறுகின்றன.

நாம் இரவில் படுத்திருக்கும்போது வாய் பெரும்பாலும் மூடியே இருக்கும். அப்போது வாயுக்கள் வெளியேற முடியாமல் வாயினுள்ளேயே அமிழ்ந்து கிடக்கின்றன.

உமிழ் நீரிலும், நமது வயிற்றினுள்ளிருக்கும் கெட்ட நாற்றமுடைய அமிலங்கள் இணைந்து விடுகின்றன.

இத்தகைய காரணங்களால் தான் நம் வாயில் துர்நாற்றம் வீசுகிறது. இத்தகைய நாற்றத்தைக் கட்டுப்படுத்த அடிக்கடி வாயைச் சுத்தம் செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

பற்சிதைவு, முரசுகரைதல், தொண்டைத் தொற்றுப் போன்ற உபாதைகள் இருக்குமானால் நாற்றம் சற்று அதிகமாக இருக்கலாம். அத்தகைய நோய்களைக் குணப்படுத்தாவிடில் துர்நாற்றம் நிரந்தரமானதாகி ஏனையோரின் அருகில் சென்று பழகுவதே சங்கடமாகிவிடும்.

காலையிலும் இரவிலும் இருவேளையாவது தூரிகை கொண்டு பல் துலக்குவதால் துர்நாற்றத்தைக் குறைக்க முடியும். எப்பதார்த்தத்தை உட்கொண்டாலும் உடனடியாக வாயைச் சுத்தம் செய்வது அவசியம். நாற்றம் போக்கும் வாய் கழுவும் (MOUTH WASH) திரவங்களைப் பயன்படுத்தலாம்; அடிக்கடி கராம்பைச் சப்பினாலும் துர்நாற்றம் குறையும்.

அடிக்கடி வாய் கொப்பளிப்பது நல்லது. கூடுமானவரை அதிகளவு நீர் பருக வேண்டும். அவ்வப்போது வேப்பங்குச்சியினால் பல்லைச் சுத்தம் செய்வது நல்லது. வேப்பங்குச்சியிலிருந்து வெளிப்படும் சாற்றில் பற்சிக்கல்களைப் போக்கும் மருத்துவ குணம் இருக்கிறது.

# ஆலோசனைகள் ஆறு

### மலட்டுத் தன்மை நீங்க....

திருமணமாகிப் பல வருடங்களாகக் குழந்தைக்காக ஏங்கும் தம்பதியர் எம்மிடையே அதிகமாக இருக்கின்றனர். மலட்டுத் தன்மைக்கு பல காரணங்கள் இருக்கலாம்.

எத்தகைய காரணம் இருந்தாலும் சிலருக்கு செவ்வாழைப்பழம் உதவும் என்று தென் இந்தியாவிலுள்ள சித்த வைத்தியர்கள் கூறுகிறார்கள். ஆணும் பெண்ணும் படுக்கைக்குச் செல்வதற்கு முன் ஒவ்வொரு செவ்வாழைப் பழம் சாப்பிட்டு வந்தால் கருத்தரிக்க வாய்ப்புண்டு என்கிறார்கள்.

### தலையில் நீர் கோர்த்தல்....

சிலருக்கு தலை முழுக்கின் பின்னர் முடியிலுள்ள தண்ணீர் சுலபமாக உலராமல் நீர் கோர்த்து விடும். இதனால் தடுமல், காய்ச்சல், தலை வலி ஆகிய உபாதைகள் வாட்டும்.

ஒரு கையளவு ஓமத்தை விழுதாக அரைத்து தலையில் அழுத்திப் பூசி சிறிது நேரம் கடந்த பின் தலைக்குக் குளித்தால் நீர் கோர்க்காது. சில நாட்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தவர்கள் முதலில் தலை முழுகும் போதும் இம்முறையைப் பின்பற்றலாம்.



### காதுப்புண்

தோடு போடுவதற்காக காதுகளிலும் மூக்குத்திக்காக மூக்கிலும் துளை போடுகிறார்கள். இப்புண் சிலருக்கு இலகுவில் ஆறுவதில்லை. எருமைப்பாலை எடுத்து இப்புண்ணில் இரண்டொரு நாட்கள் தடவினால் புண் காய்ந்து விடும். கடுக்காயையும் அரைத்து தடவினாலும் குணமாகும்.

### முகப்பரு

இளம் பெண்களின் முகத்தில் முகப்பரு வந்தால் மிகவும் வேதனைப் படுவார்கள். பருவினால் ஏற்படும் வேதனையைவிட, அவர்கள், 'முக அழகு கெட்டுப்போகிறதே!' என்று படும் வேதனைதான் அதிகமாக இருக்கும்.

முகப்பருக்களை விரல்களால் தொடுவதும்கூட விபரீதமான விளைவைக் கொடுக்கும். ஊசியினாலோ, நகங்களினாலோ இப்பருக்களைத் தகர்த்தால் அது விஷமாகி விடும்; நிரந்தரமான வடுவையும் உண்டாக்கி விடும்.

சந்தனம், மிளகு, சாதிக்காய் ஆகிய மூன்றையும், அரைத்து பருவின் மீது தடவிவர பருக்கள் மறைந்துவிடும்.

### உடல் பருமன் நீங்க....

உடல் பருத்தவர்கள் மெலிய வேண்டுமானால் வாழைத் தண்டுச் சாற்றினை பருகி வரலாம். வாரம் ஒரு தடவை பருகினாலே போதுமானது.

### பேதியைத் தடுக்க....

உஷ்ண சம்பந்தமாக சிலருக்கு திடீரென வயிற்றோட்டம் ஏற்படும். இதற்கு மோர் கை கண்ட மருந்து. அடிக்கடி மலம் கழிக்க நேர்ந்தால் தயிர் சாப்பிட்டு வந்தால் சீராகி விடும்.

# சமைப்போம் சுவைப்போம்

### உருளைக்கிழங்கு அல்வா

(தொகுத்துத் தருவது- சுகந்தினி)

**தேவையானவை:**

| | |
|---|---|
| உ.கிழங்கு | - 250 கிராம். |
| சீனி | - 500 கிராம். |
| தேங்காய் | - 1. |
| முந்திரிப் பருப்பு | - 15. |
| ஏலக்காய் | - 5. |
| மார்ஜரின் | - 100 கிராம். |
| பச்சைக் கற்பூரம் | - ஒரு சிட்டிகை. |

**செய்முறை:**

உருளைக்கிழங்கை வேகவைத்து தோலை உரித்து சிறு சிறு துண்டுகளாக்கிக் கொள்ளவும். தேங்காயை உடைத்து மெல்லிய பூவாகத் துருவிக்கொள்ளவும். கிழங்கு, தேங்காய்ப்பூ, சீனி ஆகியவற்றை ஒன்றாக ஒரு பாத்திரத்தில் கொட்டி நன்றாகப் பிசையவும். முந்திரிப் பருப்பை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி சிறிதளவு நெய்யில் வதக்கிக் கொள்ளவும்.

பாத்திரத்தில் 50 கிராம் மார்ஜரினை விட்டு அளவான சூட்டில் அடுப்பில் வைத்து மேற்படி கலவையைப் போட்டுக் கிளறவும். சிறிது சிறிதாக மார்ஜரினை விட்டுக் கிளறிக் கொண்டிருக்கும்போது கலவை திரண்டு வரும். அல்வாவை ஊற்றும் பலகையில் ஒட்டாத பதத்தில் வரும்போது பொடியாக்கப் பட்ட ஏலக்காயையும் பச்சைக் கற்பூரத்தையும் முந்திரிப் பருப்பையும் கொட்டி, அடுப்பிலிருந்து இறக்கி, ஏற்கனவே நெய்தடவிய பலகையில் ஊற்றி ஆறவிடவும். ஆறியபின் சதுரம் அல்லது டைமண்ட் வடிவில் வெட்டிக் கொள்ளவும். இவ்வாறு 50 துண்டுகள் வரை வெட்டலாம்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## மட்டக்களப்பு வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**எஸ்.ஆர்.கிறிஸ்ரில்டா,**
10, கிருஷ்ணன் கோயில் வீதி, கல்லடி, மட்டக்களப்பு.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக-வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# இந்த ஒழுங்கை கடைப்பிடித்தால் தேவையில்லை பார்மஸி

1. அதிகாலையில் சூரியோதயத்திற்கு முன் எழுந்திருக்க வேண்டும்.
2. சிறிது தூரம் நடந்து பின்னர் காலைக் கடன்களை முடிக்க வேண்டும்.
3. மலச்சிக்கல் உள்ளவராயின் எழுந்தவுடன் பல் துலக்கி தண்ணீர் அல்லது வெந்நீர் 12 அவுன்ஸ் அளவு பருகி விட்டுச் சிறிது உலாவினால் மல நிவர்த்தியாகும்.
4. பல் துலக்க வேண்டும். 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி.' ஆகவே ஆலம் அல்லது வேலம் குச்சியால் பல்துலக்குவது நல்லது.
5. குளிர்ந்த நீரில் தினமும் நீராட வேண்டும்.
6. தலைக்குக் குளித்தால் சுத்தமான, உலர்ந்த துணியால் துவட்டிக் கொள்ள வேண்டும்.
7. கடவுள் வழிபாடு உள்ளத்திற்கு அமைதி தரும். 10 நிமிடமாவது தியானம் செய்யவும்.
8. சிற்றுண்டி அருந்தித் தொழிலில் ஈடுபட வேண்டும்.
9. நல்ல காற்றைச் சுவாசிக்க வேண்டும். ஒரு போதும் வாயினால் சுவாசிக்கக் கூடாது.
10. உணவருந்தும்போது பேசக்கூடாது. மௌனமாக நன்றாக மென்று சுவைத்துச் சாப்பிட வேண்டும்.
11. தினசரி உணவு வகையிலே காய்கறிகள், கீரை,பழங்கள்,நெய்,மோர் சேரவேண்டும்.
12. பகல் உணவை விட இரவு உணவு குறைவாகவும், எளிய வகையாகவும் இருக்க வேண்டும்.
13. இரவில் காலம் கடந்து உண்ணக் கூடாது. அஜீரணமும், கெட்ட கனவுகளும் வரும்.
14. இரவில் சாப்பிட்ட பின் சிறிது நேரம் உலாவி விட்டுத் தூங்க வேண்டும்.
15. கோபமே கூடாது. கோபப்பட்டால் நரம்புத் தளர்ச்சி, இரத்த அழுத்தநோய் உண்டாகும்.
16. மனக்கவலையே கூடாது. மன அமைதி வேண்டும். நினைத்தபடி நிறைவேறவில்லையே என்ற ஏக்கமே மனக் கவலையை உண்டாக்குகின்றது.
17. உணவில் உப்பும், சீனியும் குறைவாக இருக்க வேண்டும். காரமும் அப்படித்தான். நாவுக்கு அடிமையாகக் கூடாது.
18. வாரம் ஒரு முறையாவது எண்ணைக் குளியல் எடுக்க வேண்டும்.
19. வெறுங்காலுடன் நடக்கவே கூடாது. நோயாளியின் எச்சிலை மிதிக்க நேரிடும். மற்றும் வெய்யிலினால் ஏற்படும் உஷ்ணம் உடம்பில் சேராமல் தடுக்கலாம்.
20. உடலுக்கும், உள்ளத்திற்கும் நன்மை உண்டாக மாலை வேளையிலே ஒரு மைல் தூரமாவது நடக்க வேண்டும். இது ஓர் அரிய பயிற்சியாகும்.
21. ஆண்கள் இடது பக்கமும்,பெண்கள் வலது பக்கமும் படுத்துத் தூங்க வேண்டும். சுலபமாக உண்ட உணவு சமிபாடடையும்.
22. வெற்றிலை,பாக்கு போடுல், புகை பிடித்தல், பொடி போடுதல், புகையிலை மெல்லுதல் யாவும் உடலுக்கு ஊனமானவைகளே ஆகும்.
23. உண்ணுகின்ற ஒவ்வொரு முறையும் பல்லை நன்றாகச் சுத்தம் செய்து வாய் கொப்பளிக்க வேண்டும்.
24. பழுதாகிய பழங்கள், காய்கறிகளை அறவே ஒதுக்கி விடவும்.
25. தினசரி ஓய்வாக இருந்து நல்ல நூல்களைப் படிப்பதால் ஐம்புலன்களும் ஆரோக்கியமாக இருக்கும்.

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** CE

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 23-08-1997**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

### பரிசு பெற்றவர்



முரசின் பட்டுச்சேலைப் பரிசுப் போட்டியில் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகளில் ஒருவர் இவர்தான்:

ஆர். செஷ்மிலா
177, ஆரச்சி வளவு, யோனகபுர,
திக்வல்லை.


தினமுரசு-அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு— அருள் ஜுவலர்ஸ் பரிசுக் கூப்பன் இல 24

❀ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜுவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
❀ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
❀ பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
❀ தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.





www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## சிறகுகளைச் சேதப்படுத்திய நெருப்பு!

ஓராயிரம்
கண்ணீரோடைகளால்
உருவான தென் கவிதை
அலைகள் எறிந்து அலைகளெறிந்து
ஆர்ப்பரிப்பதென் துயரம்!
**
காதல் துயரத்தின்
வெறி நான் - எந்த
ஆறுதல்களாலும்
அடங்கப்போவதில்லை
எனது வேதனை!
**
எனது எதிர்காலமெனும்
ஏகாந்தப் பாழ்வெளியை
ஏழேழு அமாவாசைகள் கூடி
உருவாக்கிப் போயின!
பூபாளம் வரும் பாதை
பூமிக்குள் புதைந்தது!
நிலவும் நட்சத்திரமும்
ஒளியேந்தி வலம் வர
வானமும் மண்டிலமும்
இல்லாமற் போனது!
**
சோக கீதங்களின்
ஸ்வரங்களைச் சேர்த்து-என்
வேதனைகளைப் பாடிவிட முடியாது!
உள்ளத்தில் வேர்விட்டு
ஊடுருவியுள்ள துயரத்தால்
கண்ணீர் விட்டே
கண்கள் களைத்துப் போயின!
**
வாழ்வைப் பற்றி
நினைக்கும் பொழுதெல்லாம்
நெஞ்சம் நடுநடுங்குகிறது:
நினைவுகள் தடுமாறுகின்றன!
**
சோகம் தவித்துத் தவித்துத்
தவம் புரியும் வாழ்வை
எந்த நம்பிக்கைகளால்-இனி
உயிர்த்தெழச் செய்வேன்?
**
தூக்கத்தைத் தொலைத்த
துயர இராத்திரிகளுக்குத்
தெருவைக் காட்டித்
தந்து விட்டு- காதல்
தன் பாட்டில் போய்விட்டது!
**
நானும் ஒரு விட்டிலென
விளக்கின் அடியில் விழுந்தேன்!
சிறகுகள் பொசுங்கிச் சுருண்டன:
கனவுகள் போராடிச் செத்தன!
**
நெருப்பு-
காதலை விட்டிலிடமும்
மணத்தை ஊதுவத்தியிடமும்
ஒளியை விளக்கிடமும்
கொடுக்கும் நெருப்பு-
சித்தத்தைத் தடுமாற்றி
கண்களைக் குருடாக்கி
சுவாலையைக் காற்றில் அணைத்துக்
காணாமல் போனது!
**
பஹீமா ஜஹான்- தெமடகொல்ல,
மெல்சிரிபுர.

## வாழ்தலில் வாழ்தல்!

திணிக்கப்பட்ட நிகழ்வுகளால்
பிணிக்கப்பட்ட வாழ்தல்
அமர்முடுகலாய் நகரும்....!
-o-
சேய்மையில் சென்ற,
யௌவனம் பாடிய,
தாளம் தப்பிய ராகம்
மீளவொலிக்கையில்
கழிவிரக்கமே பிரவாகமாகும்!
-o-
பற்பல இடங்களில்
தருமதேவதையின்
துலாபாரம் சுழன்று வந்து
முகத்திலோங்கி அறையும்!
-o-
வசந்தகாலப் பூங்கொப்பில்
விசர்க்குரங்காய் வாழ்தல்....!
இடையிட்டு வியப்பூட்டி
வந்து போகும்
குறிஞ்சிமலர்வாய் மகிழ்தல்....!
-o-
போகத்துக்கும் பயம்!
புத்தனாகவும் பயம்!
யதார்த்தம் யாதென்றால்...
பதில்கள் பலவாகும்:
சிந்தனைக் கணக்கிற்கு
முடிவிலியே விடையாகும்!
-o-
ஆதலால்...
நாயும் சலம் பெய்யும்,
பக்தனும் பால்வார்க்கும்
புளியடிப் பிள்ளையாராய்
வாழ்தலே மேல் போலும்!
வாழ்தலின் போக்கில்;
தெரிவேதுமில்லாமல்....
வாழ்தலே மேல் போலும்!
-o-
பாலபேராதரன்.

## தேன் கிண்ணம்

## நம்பிக்கை

வாழ்க்கை என்பதே
நம்பிக்கை தான்!
*
நாளை மலரும்
பொழுதை எண்ணி
இன்றைய உறக்கம்!
*
நாளைய உடலின்
உழைப்பிற்காய்
இன்றைய உணவு!
*
விடியும் வாழ்வே
என்றெண்ணி
சிந்தும் இளைஞர்கள்
இரத்தம்!
*
வாழ்க்கை என்பதே
நம்பிக்கை தான்:
*
கண்ணீரால் சலவையான
கண்களில் கூட
நாளையக் கனவு
மிச்சமிருக்கும்!
*
சுவாசிக்கும்
காற்றில் கூட
நாளைய சுவாசித்தலின்
நம்பிக்கையிருக்கும்!
*
வாழ்க்கை என்பதே
நம்பிக்கை தான்:
*
நாளை இருப்பேன் என்ற
நம்பிக்கை தான்
வாழ்க்கை வண்டியை
ஓடச் செய்யும்!
*
என்றும் இருப்பேன் என்ற
நம்பிக்கை தான்
அக்கிரமத்தை
அரங்கேறச் செய்யும்!
*
'மட்டுநகர் நர்மி'



## என் பிரியமான எதிரிக்கு!

லேசாக கன்னத்தில்
குழிவிழும் சிரிப்பு.....!
***
காற்றுக் கோதுகின்ற
உன் முடி...!
***
முழுக்கைச் சட்டையுடன்
உன் தோற்றம்......!
***
பாதணியை முத்தமிடும்
உன் பாதம்.......!
***
எப்போதும் நிமிர்ந்த
உன் நடை....!
***
எல்லோருடனும் சிரிக்கும்
உன் சுபாவம்....!
***
வரிசை தப்பியதால்
முகத்திற்கு மெருகூட்டும்
உன் பற்கள்...!
***
எல்லாம் எனக்கு
உன்னில் பிடித்தது!
***
"இருபது இலட்சத்திற்கு
ஐந்து குறைந்தாலும்
நீ வேண்டாம்!"
என்ற
உன்பேச்சு எனக்கு
பிடிக்காமல் போனது!
***
சுபா வரன்- கண்டி.



## இரத்த வீரம் எங்கே?

சிவிகை, வாள் அரியாசனம், அந்தாணி
மண்டபம், தெரு ஆராய்ச்சி மணி, முடி,
கவிதை பொங்கிய சங்கப் பலகைகள்,
களப்பரணியை யாத்த எழுதுகோல்,
சவடி, யுத்தப் பேரிகை, யாவுமே...
சுருண்டு காட்சி அறையிற் கிடக்குது!
செவிவழிக் கதை போற்றும் நம வல்லமை
செவிவழிக் கதையாகத் தொடருது!
• •
ரஜ, கஜ, துர பதாதை அணிநடை
மறைந்ததேனடா? காற்றிலெம் செங்கொடி
அசைந்ததை விழி இன்று மறந்ததா?
அன்று புரவியில் வாளைச் சுழற்றியே
புஜமுயர்த்துதல் போற் கனா செத்ததா?
புறமெழுத ஆளில்லையா? பாட்டனின்
ரதத்தின் சில்லுக்கு நெய்யிடு: "அச்சாணி
மாற்று: பாபம்"! உன் இரத்தம் அடங்குமா?
அருணன்- யாழ்ப்பாணம்.

## ரணமான இராத்திரிகள்.....!

இந்த பூமியில்
இருள் பூக்கும் வேளையில்
இதயத்திற்குள்
புகுந்து கொள்ளும்
'பய' அரக்கனின்
அதிகாரம்
பரவலாக்கப்படும்...!
***
சருகுகளின்
ஓசையில் சவங்களின்
நிழல்கள் பதியப்
படும்...!
***
அறுபட்ட
கோழியின் அவஸ்தையுடன்
நெளியும் உள்ளங்கள்
அக்கினி பெருமூச்சுகளை
கக்கும்...!
***
சுகமான கனவுகள்
கண்ட இரவுகளை
கனவிலும் காணாத
கவலையில்
விறைத்துப் போகும்
விழிகள்....!
***
ஒவ்வொரு நிமிஷமும்
நிசப்தமாய் கரைகையில்
நெஞ்சில் அச்சம்
அச்சடிக்கும்
புதுப்புது
அர்த்தங்களை...!
***
பலரின் விதியை
விலை பேசப்படும்
அந்த இராத்திரிகளில்
விழிகள் மூடாமலே
விடியலுக்காய்
தவமிருக்கும்...!
***
'குறிஞ்சி நிலா'
எஸ்.கல்யாணி- இரத்தினபுரி.

## யார் இவர்கள்?



1 ↑நேற்றுச் சிறுவன். இன்று 'ஜீன்ஸ்' போட்ட பையன். இளம் கதாநாயகன்.



2 → நேற்று சுட்டிப் பையனானாலும் நடிப்பில் கெட்டித்தனம். இன்று நடிப்பில் பல சாதனைகள் கண்ட 'நாயகன்'.



4 ← ஊ... ஊ... என்று கூச்சலும், கும்மாளமுமாக அறிமுகமானவர். தமிழிலும் ஒரு படத்தில் நடித்துள்ளார்.



3 → நடிகராக 'அவதாரம்' எடுக்கும் கனவு நிறைவேற முன்னர் எடுக்கப்பட்ட படம். இன்று நடிக்கிறார்; நடிக்கவும் வைக்கிறார்.



5 → 'புதுமைப் பெண்'ணாக திகழ ஆசை. அதனால் சமூக சேவைகளில் நாட்டம் கொண்டுள்ள பிரபல நடிகையாக இருக்கிறார்.

அந்த நடிகையின் குழந்தைக்காலப் படம்தான் இது.

இன்று சாவித்திரி அளவுக்கு நடிக்கக் கூடியவர். நடனமும் ஆடுவார். இவரது கணவரும் ஒரு நடிகர். படங்களும் தயாரித்துள்ளார்கள்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(17.08.1997 தொடக்கம் 23.08.1997 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| சிம்மம் | - சூரியன், இராகு. |
| கன்னி | - வெள்ளி. |
| துலாம் | - செவ்வாய். |
| மகரம் | - வியாழன். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |
| கர்க்கடகம் | - புதன். |

★ சந்திரன்- மகரம், கும்பம், மீனம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- அந்நியர் பகை, மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| புதன்- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, கௌரவ மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | மு.ப. | 10 | மணி |
| சனி- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் நஷ்டம், மனச் சஞ்சலம். | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், புதிய முயற்சி. | பகல் | 11 | மணி |
| புதன்- வெளியிட வாசம், செலவு மிகுதி. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- வீண் துயர், அந்நியர் நட்பு. | மு.ப. | 9 | மணி |
| சனி- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, கௌரவ மிகுதி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| புதன்- பெரியோர் நட்பு, இனசன நன்மை. | பகல் | 11 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- பொருள் வரவு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| சனி- மனக்குறை நீங்கும், காரிய நன்மை. | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, மனக் கலக்கம். | பகல் | 12 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, கௌரவ மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- அந்நியர் பகை, மனச் சஞ்சலம். | மு.ப. | 10 | மணி |
| புதன்- வீண்குறை கேட்டல், உயர்ந்த நட்பு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | பி.ப. | 1 | மணி |
| சனி- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- வீண் கவலை, இனசன நன்மை. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | மு.ப. | 10 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, அந்நியர் நட்பு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, தொழில் சிறப்பு. | மு.ப. | 10 | மணி |
| சனி- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, மனக் கவலை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் மேன்மை, பண வரவு. | பகல் | 11 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, கௌரவ மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| சனி- பொருள் நஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் பேறு, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் நன்மை, பண வரவு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- காரியசித்தி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன் - வீண் முயற்சி, பணக் கஷ்டம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, உயர்ந்த நட்பு. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பெரியோர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| சனி- அந்நியர் சகவாசம், மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- ஆடம்பரச் செலவு, மனக் கிலேசம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, பொருள் பேறு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, கௌரவ மிகுதி. | பகல் | 12 | மணி |
| சனி- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண்குறை கேட்டல், அந்நியர் நட்பு. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- காரியானுகூலம், பொருள் வரவு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், பெரியோர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- இனசன நன்மை, முயற்சி பலிதம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் | 12 | மணி |
| சனி- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-6

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் நன்மை, காரியானுகூலம். | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, செலவு மிகுதி. | மு.ப. | 9 | மணி |
| புதன்- பொருள் வரவு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், மனக் கிலேசம். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, பொருள் வரவு. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வீண் மனஸ்தாபம், பொருள் இழப்பு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. | 3 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், செலவு அதிகம். | பகல் | 12 | மணி |
| திங்கள்- உயர்ந்த நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| புதன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| சனி- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7



படிப்பகம்





உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# புத்திசாலித் தவளை



ஒரு காகம் ஒரு தவளையைப் பிடித்துக் கொண்டது. அதை அலகில் கௌவிக் கொண்டு ஒரு வீட்டின் கூரையில் போய் உட்கார்ந்து கொத்தித் தின்ன நினைத்தது. காகம் கூரையில் உட்கார்ந்ததும் தவளை சிரித்தது.

"ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்டது காகம்.

"வேறு ஒன்றுமில்லை. இதே கூரையில் இன்னொரு மூலையில் என் பெரியப்பா இருக்கிறார். மகாபலசாலி. கோபக்காரர். நான் ஒரு குரல் கொடுத்தால் போதும் உன்னை ஒரே அடியில் கொன்று சாப்பிட்டு விடுவார்," என்றது தவளை.

இதைக் கேட்ட காகம் 'இந்த இடம் சரியில்லை' என்று நினைத்து, மறுபடியும் தவளையைத் தூக்கிக் கொண்டு பக்கத்தில் இருந்த மரத்திற்குப் பறந்து சென்று உட்கார்ந்தது.

அப்போதும் தவளை சிரித்தது.

"ஏன் மறுபடியும் சிரிக்கிறாய்?" என்று கேட்டது காகம்.

"வேறு ஒன்றுமில்லை. இந்த மரத்திற்குக் கீழே தான் என் மாமா இருக்கிறார். அவர் என் பெரியப்பாவை விடப் பெரும் பலசாலி. என்னுடைய குரலை அவர் கேட்டு மேலே வந்தால் உன் கதி அதோகதிதான்," என்று சொன்னது தவளை.

இந்த இடமும் பாதுகாப்பான இடமல்ல என்று நினைத்த காகம், தவளையைக் கௌவிக் கொண்டு ஒரு கிணற்றோரத்தில் போய் உட்கார்ந்தது.

அது தவளையைச் சாப்பிடப் போகும் தருணத்தில், "காகமே! உன் அலகு மழுங்கிப் போய் இருக்கிறது. அதனால் என்னைச் சாப்பிட உனக்குக் கஷ்டமாக இருக்கும். இதோ பக்கத்தில் இருக்கும் கல்லில் உன் அலகைத் தீட்டிக் கொண்டு, என்னைச் சாப்பிடு!" என்று சொன்னது தவளை.

'தவளை சொல்வது மிகவும் சரி' என நினைத்த காகம் தவளையை அப்படியே விட்டு விட்டுக் கல்லில் அலகைத் தீட்டத் தொடங்கியது.

இதுதான் சரியான சமயம் என நினைத்த தவளை 'குபுக்'கென கிணற்றில் குதித்து விட்டது.

அலகைக் கூராகத் தீட்டிக் கொண்டு வந்த காகம், தவளையைத் தேடியது. தவளை அங்கே இருக்கவில்லை.

தவளை தன்னை ஏமாற்றி விட்டுத் தப்பியோடிவிட்டது என்று காகத்திற்கு விளங்கியது.

மிகுந்த ஏமாற்றத்துடனும், பசியுடனும் வேறு உணவைத் தேடிப் பறந்து போனது காகம்.

## அதிசயம் - ஆனால் உண்மை!



**பெலிக்கன் ஈல்:**

பாம்பு போன்று நீளமாக இருக்கும் இந்த மீன், பேர்முடா கடலுக்கடியில் ஒரு மைல் ஆழத்தில் வாழ்கிறது. இதன் உடல் கறுப்பு நிறமாகவும், வால் சிவப்பாகவும் இருக்கும். இந்த வால் இதன் உடலை விட 3 மடங்கு நீளமானது.

**அலெக்ஸாண்ட்ரோ ஸிஞ்சிஜா:**



பெரு நாட்டைச் சேர்ந்த இவர் 1941ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஒரு குழந்தைக்குத் தந்தையானார். அப்போது இவருக்கு வயது 91.


**புஞ்சைக் காளான்:**



குண்டலம் போன்று காணப்படும் இந்த புஞ்சைக் காளான் புழு வகையைத் தின்று வளர்கிறது. இதன் வட்டவளைய உருவத்தினாலான துவாரம் வழியாகப் புழுக்கள் கடக்கும் போது காளான்கள் அப்படியே பிடித்து இறுக்கிக் கொன்று உண்ணும்.

**கிரேக்கப் பலிபீடம் 'பெர்கமம்':**

இது இடிந்து 2000ம் ஆண்டுகளுக்குப்பின் இதன் பழைய கற்களைக்



கொண்டு வந்து பெர்லினில் (ஜெர்மனி) மீண்டும் கட்டினர். இந்த பலிபீடத்தின் மீது யாவரும் கவனமாக ஏறவேண்டும். விபத்து ஏதும் நேரக்கூடாது என்ற நோக்கத்துடன், இதன் 28 படிகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாய் அமைக்கப்பட்டுள்ளன.

## வாரம் ஒரு நாடு

### ஹைதி

தலைநகர் - போர்ட் ஒஃப் பிரின்ஸ்.
பரப்பு - 27,750 சதுரகிலோமீட்டர்.
மக்கள் தொகை - 69 இலட்சம்.
மொழி - ஃபிரெஞ்ச் (ஆட்சிமொழி), கிரியோல்.
எழுத்தறிவு - 53%
சமயம் - கிறிஸ்தவம், வூடூ.
நாணயம் - கௌர்டே
தனிநபர் வருமானம் - 400 டொலர்.

**அமைவிடம்:**

கரீபியன் கடலில் அமைந்துள்ளது. ஹிஸ்பேனியோலா தீவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஹைதியின் கிழக்கே டொமினிக்கன் குடியரசும், மேற்கில் கியூபா மற்றும் ஜமெய்க்காவும் எல்லைகளாக அமைந்துள்ளன.

**வரலாறு:**

கொலம்பஸ் 1492ல் இதைக் கண்டுபிடித்தார். பின்னர் ஃபிரான்ஸ் மற்றும் பிரிட்டனின் காலனியாக மாறி மாறி வந்தது. அடிமைத் தொழில் செய்வதற்காக ஆபிரிக்கர்களை ஃபிரான்ஸ் இங்கு குடியேற்றியது. இவர்களின் சந்ததியினரே தற்போதைய குடிமக்கள். 1804ல் ஃபிரான்ஸிடம் இருந்து



சுதந்திரமடைந்தது. 1915-1934 வரை அமெரிக்காவின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது.

சுதந்திரமாக இருந்த இந்நாட்டில் 1994ல் அமெரிக்கா படையெடுத்தது. முன்னாள் அமெரிக்க அதிபர் ஜிம்மி காட்டரின் அமைதிப்பேச்சின் பின்னர் அரிஸ்டைட் என்பவர் அதிபர் ஆகியுள்ளார்.

**பொருளாதாரம்:**

கோப்பி முக்கிய ஏற்றுமதிப் பொருள். சீனி, பருத்தி போன்றவையும் உள்ளன. சுற்றுலா முக்கிய வருமான மூலம்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 23.08.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 206
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 204

**பரிசுக்குரியவர்:**
கிரிஸ்தோப்பர் கிரிஸ்டீனா ஏன்ஜல்,
சிங்கள மத்திய மகா வித்தியாலயம், கல்முனை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஸ்ரீகாந்தகுமார் மயூரன், மா/பாக்கிய மகாவித்தியாலயம், மாத்தளை. | ஜி. குகதீப், பாரதி மகா வித்தியாலயம், பதுளை. |
| எஸ். பாத்திமா, பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம், புத்தளம். | ரிம்ஸா முத்து முகமட், மின்ஹாத் கனிஷ்ட வித். யோனகபுர, திக்குவெல்லை. |
| எஸ். செந்தூரன், தமிழ் மகா வித்தியாலயம், வவுனியா. | மதிவதனி பரமசிவம், த.ம.வித்தியாலயம், டில்லரி.ப.கணக்கு, டிக்கோயா. |
| எப். பைரோசா பாயிஸ், அஜ்மீர் மத்திய கல்லூரி, உக்குவளை. | பாத்திமா ஜெஸ்லியா அல்துல்லாஹ், மஹ்முத் மகளிர் கல்லூரி, கல்முனை-04. |
| ஐ. நிரோஷன், ரணபிம றோயல் கல்லூரி, கண்டி. | பி. ஜெயபிரகாஷ், சென். யோன் பொஸ்கோ கல்லூரி, ஹட்டன். |

## நைல் நதி

நைல் நதிதான் உலகிலேயே மிக நீண்ட நதியாகும். கிட்டத்தட்ட 4000 மைல்கள் நீளம்- தெற்கு வடக்காக ஓடுகின்றது.

ஆபிரிக்காவின் வடகிழக்குப் பகுதியில் இருந்து சூடான், எகிப்து ஆகிய பகுதிகள் வரையுள்ள வறண்ட பாலைவனப் பகுதியை இந்த நைல் நதிதான் செழிப்பாக்கி வருகிறது.

பிரதான நைல் நதியில் வெள்ளை நைல் (WHITE NILE), நீல நைல் (BLUE NILE) ஆகிய இரண்டு நதிகளின் சேர்க்கை உள்ளது. இதில் முக்கிய நதி வெள்ளை நைல் நதி ஆகும். இது உகண்டா நாட்டில் உள்ள விக்டோரியா ஏரியில் இருந்து உற்பத்தியாகி வருகிறது.

ஆனால் நீல நைல் நதி எத்தியோப்பாவில்



உள்ள மலைப் பகுதிகளில் இருந்து உருவாகி வருகின்றது. இங்கு உருவாகும் கனமழைகளினாலும், மலை முகடுகளில் உள்ள பனிப் படலங்கள் உருகுவதாலும், வருடந்தோறும் ஜூலை மாதம் முதல் ஒக்டோபர் மாதம்வரை நீரின் அளவு உயர்ந்து கொண்டு போகும்.

## ஜேம்ஸ் குக்

கடல் பயணங்கள் மேற்கொண்டு பல சாதனைகளைப் புரிந்தவர் ஆங்கிலேய மாலுமியான ஜேம்ஸ் குக்.

இவர் இங்கிலாந்தில் உள்ள யோர்க்ஷயரில் 1728ம் ஆண்டு பிறந்தார். தனது 27வது வயதில் இவர் இங்கிலாந்து கப்பல் படையில் சேர்ந்தார்.



திறமையான மாலுமியாக விளங்கிய ஜேம்ஸ் குக் 1768ல் தெற்கு பசிபிக் பகுதிகளில் உள்ள நாடுகளைக் கண்டுபிடிப்பதற்காக பிரிட்டிஷ் அரசால் அனுப்பப்பட்டார்.

1768 முதல் 1779 வரை தெற்குக் கடல்களில் மூன்று கடற்பயணங்களை மேற்கொண்டார். சாலமன் தீவுகள், நியூஸிலாந்து, அவுஸ்திரேலியா ஆகியவை தனித்தனி நாடுகள் என்பதை குக்தான் முதன் முதலில் தெரிவித்தார்.

இந்தக் கப்பலில் குக் ஐந்து விஞ்ஞானிகளையும் அழைத்துச் சென்றார். அவர்கள் பிரிட்டனில் இல்லாத தாவரங்களைச் சேகரித்தனர். அத்துடன் அவுஸ்திரேலியாவில் இருந்த கங்காருகளை முதலில் பார்த்த ஐரோப்பியர்கள் இந்தக் கப்பலில் பயணம் செய்தவர்களேயாவர்.

1772 முதல் 1775 வரை இரண்டாவது கடற்பயணத்தை மேற்கொண்டு அண்டார்ட்டிக்கா வட்டத்தை இருமுறை கடந்தார். பனிக்கடல் தடுத்ததால் அண்டார்ட்டிக்கா கண்டத்திற்குள் அவரால் போக முடியவில்லை.

1776-முதல் 1779 வரையான மூன்றாவது கடல்பயணத்தின்போது ஹவாய் தீவுகளைக் கண்டுபிடித்தார். அத்தீவு மக்கள் ஜேம்ஸ் குக்கைக் கடவுள் என்றே நினைத்தார்கள்.

1779ல் கப்பலைப் பழுது பார்க்க நாடு திரும்பினார் குக். திடீரென நாட்டில் ஏற்பட்ட சண்டையில் ஜேம்ஸ் குக் குத்திக் கொல்லப்பட்டார்.

## உணவு உண்ணும் முறை



பாம்புத்தாரா என்ற ஒரு கடற்பறவை உணவுண்ணும் விடயத்தில் ஏனைய பறவைகளை விட வித்தியாசமானது.

இது தண்ணீரில் கழுத்தை மட்டும் வெளியே நீட்டிக்கொண்டு நீந்தும். ஏதேனும் மீன் வந்தால் கழுத்தை வளைத்து மீனைப் பிடித்து விடும். மீனைப் பிடித்தால் உடனே விழுங்கமாட்டா. மீனைத் தனது அலகினால் உயரத்தில் தூக்கிப் போட்டு, அலகைத் திறந்து அந்த மீனின் தலை முதலில் போகுமாறு கௌவிப் பிடித்து விழுங்கும்.

## எப்படி வந்தது



உலகின் முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் டொலர் நாணயமாற்றுப் பயன் பட்டு வருகிறது. அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, நியூஸிலாந்து சிங்கப்பூர், பஹாமஸ், தைவான் போன்ற பல நாடுகளின் கரன்ஸி டொலர் ஆகும்.

கி.பி. 16ம் நூற்றாண்டில் ஜெர்மனியில் புழக்கத்தில் இருந்த பெரிய வெள்ளி நாணயம் டேலர் (TALER) எனப்பட்டது. அது ஆங்கிலத்தில் டோலர் (DOLER) எனப்பட்டு பின்னர், அதுவும் மருவி, டொலர் (DOLLAR) என்று அழைக்கப்பட்டது.

## மின்னல் வெப்பம்



மின்னல் உற்பத்தி செய்யும் அதிகபட்ச வெப்ப நிலை என்ன தெரியுமா? 36,000 பாகை சென்டிகிரேட். இது சூரிய பரப்பின் வெப்பத்தை விட ஐந்து மடங்கு அதிகமுடையது.



படிப்பகம்

www.padippakam.com




பாஸ்கர் அந்த முன்னிரவில் மோட்டார் பைக்கை ஒரு மரத்துக்குக் கீழே வைத்துவிட்டு ஆள் சந்தடியற்ற தெருவில் நடந்து-பட்டாபியின் வீட்டுக்கு முன்பாய் வந்து நின்றான்.

படிகள் ஏறி சாத்தியிருந்த கதவை மெல்லத் தட்டினான்.

"டொக்... டொக்.."

சிறிது நேர நிசப்தத்திற்குப் பிறகு கதவு மெல்லத் திறந்தது. லுங்கியும் பனியனும் அணிந்து வந்த இளைஞன் மெல்லிய இருட்டில் தெரிந்தான். பாஸ்கர் கேட்டான்.

"பட்டாபி...!"

"ஆமா....!"

"உன்கிட்ட கொஞ்சம் பேசணும்..."

"நீங்க யார்? என்ன விஷயம்...?"

"உள்ளே போய் பேசலாமா...?"

சிலவிநாடி நிதானித்து பின் தயக்கமாய் பட்டாபி உள்ளே போக பாஸ்கர் அவனைத் தொடர்ந்தான்.

சிறிய வீடு.

இரண்டே அறைகள்

பட்டாபி நாற்காலியைக் காட்ட உட்கார்ந்தான். அவன் கேட்டான்,

"இப்ப சொல்லுங்க... நீங்க யாரு...?"

பாஸ்கர் மெல்லச் சிரித்தான்.

"என்ன சிரிக்கறீங்க...?"

"நான் யார்ன்னு நிஜமாவே உனக்குத் தெரியாதா?"

"தெரியலையே..."

"இந்த நடிப்புத்தானே வேண்டாங்கறது...?"

"நிஜமா எனக்குத் தெரியலை..."

"இதோ பார் பட்டாபி.... இனியும் நீ உன்னை மறைக்க முடியாது. மைத்ரேயிக்கு ஃபோன் பண்ணி பேசறது நீதானே?"

"மைத்ரேயி...?"

"புரியலை...? நீ வேலை பார்க்கிற கம்பனியோட முதலாளியம்மா..."

"ஓ... அவுங்களா...? அவங்களுக்கு நான் எதுக்காக ஃபோன் பண்ணிப் பேசணும்....?"

"பட்டாபி நடித்தது போதும். விஷயத்துக்கு வந்துடு. எல்லாமே வெட்ட வெளிச்சத்துக்கு வந்தாச்சு... கொஞ்ச நேரத்துக்கு முந்தி கூட நீ மைத்ரேயிக்கு ஃபோன் பண்ணி பேசியிருக்கே"

"நான் ஒரு சாதாரண வெல்டர். முதலாளியம்மாகிட்டே பேசற அளவுக்கு என்ன விஷயம் இருக்கு...?"

"ரொம்ப நேரத்துக்கு நீ இப்படி பாமரத்தனமா பேசிட்டிருக்க முடியாது. உன்னிட்ட இருக்கிற மிமிக்ரி திறமையை உபயோகப்படுத்தி லேடீஸ் வாய்ஸ்ல பேசறதை நான் ஸ்மெல் பண்ணிட்டேன்."

பட்டாபி புன்னகைத்தான்.

## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

"நீங்க பேசற விஷயமே எனக்குப் புரியலை... வேறு யார்கிட்டயோ போய் பேச வேண்டியதையெல்லாம் என்கிட்ட வந்து பேசிட்டிருக்கீங்க..."

"நிஜமா நான் யார்னு உனக்குத் தெரியாதா?"

"தெரியாது..."

"மைத்ரேயிக்கு ஃபோன் பண்ணிப் பேசறது நீயில்லை...?"

"இல்லை..."

"இப்படியெல்லாம் கேட்டா நீ உண்மையைச் சொல்லமாட்டேன்னு எனக்குத் தெரியும். அதனால்தான் இதையும் எடுத்துட்டு வந்தேன்..." சொன்ன பாஸ்கர் மார்புப் பகுதிக்குள் கையை நுழைத்து வெளியே எடுத்தான்.

கையில் பிஸ்டல்.

பட்டாபி கண்களில் பரவிய பயத்தோடு மெல்ல பின்வாங்கினான்.

"இப்ப சொல்லு... மைத்ரேயிக்கு ஃபோன் பண்ணி அவளை மிரட்டறது நீதானே...?"

"நா... நானில்லை.."

"பொய் சொல்லாதே.."

"இல்லை... நிஜம்...."

"இதோ பார்.... இப்ப கேக்கப் போறது தான் கடைசி தடவை. இதுக்கும் நீ பொய் சொன்னா... உன்னை சுட்டுத்தள்ளிவிட்டு நான் பாட்டுக்கு போயிட்டேயிருப்பேன். மைத்ரேயியை லேடீஸ் வாய்ஸ்ல பேசி மிரட்டறது நீதானே...?"

பட்டாபி பாஸ்கரின் கையிலிருந்த ரிவால்வரையே பயமாய்ப் பார்த்தான்.

"சொல்லு... நீதானே...?"

"வந்து... வந்து...."

"ம்.... சொல்லு.... ஃபோன் பண்ணி பேசினது நீதானே?"

பட்டாபியின் தலை தன்னிச்சையாய் ஆடியது.

"ஆ... ஆமா..."

"உனக்கு எதுக்காக இந்த வீண் வேலை...?"



"ஏ.... எனக்கு மனசு கேட்கலை. முதலாளியம்மாவுக்கும் உங்களுக்கும் இருக்கிற தொடர்பு வெளியே தெரிஞ்சா அது முதலாளியோட மனசையும் கௌரவத்தையும் பாதிக்கும்னு நினைச்சேன். முதலாளியம்மா மனம் திருந்தணும் என்கிற ஒரே ஒரு காரணத்துக்காகத்தான் அப்படி ஃபோன் பண்ணி பேசினேன்."

"நேத்து ராத்திரி மைத்ரேயி பங்களாவோட பின் பக்கம் வந்து என்னை தலையில அடிச்சு காயப் படுத்திட்டு போனது நீதானே....?"

"ஆமா..."

"எதுக்காக வந்தே....?"

"உங்க ரெண்டு பேரோட நடவடிக்கைகளை கவனிக்கிறதுக்காகத் தான்..."

பாஸ்கர் தன் கையில் இருந்த ரிவால்வரை அசைத்தான். "இது உனக்குத் தேவையானது தானா...? மத்தவங்க வாழ்க்கையில் எதுக்காக நீ மூக்கை நுழைக்கணும்...?"

பட்டாபிக்கு இப்போது பயம் கொஞ்சம் தெளிந்து போயிருக்க- பாஸ்கரின் முகத்தை துணிச்சலாய் நிமிர்ந்து பார்த்தபடி பேசினான்.

"கட்டின பொண்டாட்டி தன் புருஷனுக்கு விசுவாசமா இருக்கணும்னு நான் நினைக்கிறது தப்பா....?"

"உலகத்துல எத்தனையோ பொண்ணுக தாலி கட்டின புருஷனுக்கு துரோகம் பண்ணிட்டுத்தான் இருக்காங்க... அவங்க எல்லாத்தையும் உன்னால திருத்த முடியுமா...?"

"எனக்கு அவங்க யார்ன்னு தெரிஞ்சா... கண்டிப்பா திருத்த முயற்சிகளை எடுத்துக்குவேன்..."

"இந்த சமுதாயத்தை திருத்தற வேலையெல்லாம் இனிமே உனக்கு வேண்டாம்... மேலே போய்ச் சேர்ந்துடு...." பாஸ்கர் சொல்லிக்கொண்டே கையில் வைத்திருந்த பிஸ்டலை பட்டாபியின் மார்புக்கு நேராக குறிவைக்க, பட்டாபி அரண்டு போய்-பின்னுக்கு நகர்ந்து சுவரோடு முதுகைத் தேய்த்துக் கொண்டு நின்றான்.

பாஸ்கர் சிரித்தான்.

"இந்த பூலோகத்துல நீ செஞ்ச சமூகசேவை போதும். இனி மேலோகத்துல போய் அதை கண்டினியூ பண்ணு...."

"வே.... வேண்டாம்... என்னைச் சுட்டுடாதே...."

"இப்ப புலம்பி ஒரு பிரயோஜனமும் இல்லை பட்டாபி. மத்தவங்க வாழ்க்கையில மூக்கை நீட்டறதுக்கு முந்தி இதைப் பத்தி யோசிச்சு பார்த்து இருக்கணும்... காலைச் சுத்தின பாம்பு கடிக்காமே இருக்காதுன்னு சொல்லுவாங்க. நீ காலைச் சுத்தின பாம்பு. கடிக்கிறதுக்கு முந்தி உன்னைத் தீர்த்துக் கட்டினாத்தானே நானும் மைத்ரேயியும் சந்தோஷமா இருக்க முடியும்...!"

பாஸ்கர் சொல்லிக் கொண்டிருந்த வினாடி,

பட்டாபி பக்கத்தில் இருந்த ஸ்டீல் நாற்காலியை 'விருட்' டென்று தூக்கி வீச பாஸ்கர் முழங்காலில் அடிபட்டு சில விநாடிகள் கீழே சாய்ந்தான்.

அந்த அவகாசத்தைப் பயன்படுத்திக் கொண்ட பட்டாபி வீட்டின் பின்பக்கம் கதவைத் திறந்து கொண்டு வெளியே பாய்ந்தான்.

பாஸ்கரும் கையில் துப்பாக்கியோடு அவனை மூச்சிறைத்துக் கொண்டு துரத்த ஆரம்பித்தான்.

***

ஆவடியின் புறநகர் பகுதி அது.

பட்டாபி பொட்டல் வெளிப் பிரதேசத்தில் கொட்டியிருந்த இருட்டில் ஓடிக்கொண்டிருந்தான்.

பின்னால் நூறு மீட்டர் தொலைவில் பாஸ்கர் துரத்தி வருவது மசமசப்பாய் தெரிந்தது.

'இன்னும் ஒரு ஐந்து நிமிஷம் ஓடினால் போலிஸ் ஸ்டேஷன் வந்துவிடும். அதற்குப் பிறகு கவலையில்லை...?'

பட்டாபி யோசித்தபடி மூச்சை இழுத்துப் பிடித்தபடி ஓடிக்கொண்டிருந்தான். இவ்வளவு வேகமாய் ஓடி பழக்கமில்லாததால் கெண்டைக்கால்கள் 'ஜிவ் ஜிவ்' வென்று இழுத்துப் பிடித்தன. ஆனால் தப்பிக்க வேண்டுமே என்கிற உயிராசை ஓடுவதற்கு அசுர பலத்தைக் கொடுத்தது.

பொட்டல் வெளியில் இடுப்பு உயரத்துக்கு வளர்ந்திருந்த பார்த்தீனியம் செடிகளுக்கு மத்தியில் ஓடிக்கொண்டிருந்த பட்டாபிக்கு பெரிது பெரிதாய் மூச்சிரைத்து நுரையீரல்கள் வலித்தன. பொருட்படுத்தாமல் ஓடினான்.

தூரத்தில் மின்சார வெளிச்சங்கள் பனிப் புகையில் தீற்றல் தீற்றலாய் தெரிந்தன.

'இனி மூன்று' நிமிஷம் ஓடிவிட்டால் போதும் போலிஸ் ஸ்டேஷனைத் தொட்டு விடலாம்...!

பட்டாபி ஓடிக்கொண்டே பின்னால் திரும்பிப் பார்த்தான். சற்று தொலைவில் பாஸ்கர் செடிகளை துவம்சம் செய்தபடி ஓடி வருவது தெரிந்தது..

'இவ்வளவு வேகமாய் ஓடி வருகிறானே...? மாட்டிக் கொள்வோமோ...?'

யோசித்து பின்னால் திரும்பித் திரும்பிப் பார்த்து ஓடிக் கொண்டிருந்த பட்டாபியின் கால்களை-கல் ஒன்று இடறிவிட-

நிலை குலைந்து விழுந்தான்.

பின்னந்தலையிலும் அடி, முதுகிலும் மரண வலி. கண்களை இறுக மூடி பல் வரிசையைக் கடித்து வலியை மென்று கொண்டு எழ முயன்றான்.

எழ முடியவில்லை.

அப்படியே மல்லாந்தான்.

பாஸ்கரின் காலடி சத்தம் பெரிதாய்க் கேட்டது.

பட்டாபியை பயம் பிடித்துக் கொள்ள மெல்ல உருண்டு போய் பார்த்தீனிய புதருக்குள் ஒண்டிக்கொண்டான்.

இருட்டு அவனை வெளிக்காட்டாமல் அடைகாத்தது.

மூச்சை அடக்கிக் கொண்டு படுத்திருந்தான்.

காலடிச் சத்தம் சமீபித்தது.

பின் நின்றது.

பட்டாபி மெல்ல தலையை உயர்த்திப் பார்த்தான்.

சோகையான நட்சத்திர வெளிச்சத்தில் பாஸ்கர் வலது கையில் ஏந்திய துப்பாக்கியோடு தெரிந்தான்.

உடம்பு வியர்த்து ஊற்றிக் கொண்டிருந்தது.

"சர்ர்க்... சர்ர்க்..."

நடந்தான்.

பூட்ஸ் கால்களுக்கு கீழே - மணலும் கற்களும் அடைபட்டன. இருட்டில் பார்வை அலைந்தது.

'தேடுகிறான்!'

'அவனுடைய பார்வைக்கு சிக்கி விடக்கூடாது.'

பட்டாபி மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு ஒரு சின்ன சத்தம் கூட காட்டாமல் அப்படியே படுத்திருந்தான்.

'சர்ர்க்... சர்ர்க்...'

பூட்ஸ் கால்கள் நகர்ந்தன.

பார்த்தீனிய செடிகள் மிதிபட்டன.

பட்டாபி இருந்த திசை நோக்கி பூட்ஸ் கால்கள் வந்தன.

பத்தடி தொலைவு இருக்கும் போது நின்றன.

சில விநாடிகளுக்கு நிசப்தம்.

பின்.

அந்த சத்தம் கேட்டது.

'அதென்ன சத்தம்...?'

பட்டாபி உன்னிப்பாய்க் கேட்டான். முதுகுத்தண்டு ஐஸ் வாட்டரில் முக்கியெடுத்த மாதிரி ஜில்லிட்டுப் போயிற்று.

அந்த சத்தம்.

தீக்குச்சி உரசப்படும் சத்தம்.

**(தொடர்ந்து வரும்)**

**சென்றவாரம்**

பாஸ்கர் 'ஹெல்ப்பிங் ஹான்ட்' என்கின்ற டிடெக்டிவ் ஏஜென்ஸிக்குச் சென்று நண்பன் தாமுவை விசாரிக்கிறான். அவனிடம் யாருக்கும் தெரியாமல் 'பட்டாபி' பற்றிய விபரத்தைப் பெற்றுத் தருமாறு கேட்கிறான்.

மறுநாள் மைத்ரேயிக்குப் ஃபோன் செய்து, பெண் குரலில் மிரட்டுவது பட்டாபிதான் என்கிறான்.







மைத்ரேயியின் கேள்விக்குப் பதில் கூறி மறு நாள் தொடர்புகொள்வதாகவும் தெரிவித்து ரிசீவரை வைக்கிறான்.

மைத்ரேயிக்கு மறுபடியும் ஃபோன். ரிசீவரை எடுத்ததும் பதற்றமானாள். பெண்குரல் மிரட்டுகிறது.

**இனி...**

# உடைந்த இரவு

## பேனா நண்பர் அரங்கம்

பெயர்: கே.ரபீக்,
வயது: 21
முகவரி: இலவன் குளம், புத்தளம்.
பொழுதுபோக்கு: வானொலி, பேனாநட்பு.

பெயர்: கே.தயாளன்,
வயது: 28
முகவரி: கைதடி, வளர்மதி வீதி, கள்ளிக்காடு.
பொழுது போக்கு: பேனா நட்பு.

பெயர்: எஃப்.ஹமீட்,
வயது: 26
முகவரி: 17பி, சிறிபால வீதி, கல்கிசை.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம்.செல்லா,
வயது: 22
முகவரி: P.O.BOX-40426, DOHA, QATAR.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: வீ.ஜெயராணி,
வயது: 17
முகவரி: 89/9, பாடசாலை வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.
பொழுது போக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்.

பெயர்: அப்துல் ரசூல்,
வயது: 23
முகவரி: 442/ஏ, மேர்ஸா லேன், நிந்தவூர்-16.
பொழுது போக்கு: வானொலி, ரீ.வி.

பெயர்: எம். நிஸார்,
வயது: 25
முகவரி: P.O.BOX-41208, CODE-13158, SAFAT, KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை.

பெயர்: எம். நிபாஸ்,
வயது: 20
முகவரி: 330, மடலகம, பொல்கஹவெல.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்.

பெயர்: பி.பத்மகரன்,
வயது: 23
முகவரி: NEUWIEDER STR-1, 28325 BREMEN, GERMANY.
பொழுது போக்கு: உதைபந்து, பத்திரிகை.

பெயர்: என்.பிரதீஸ்,
வயது: 18
முகவரி: தம்பேத்தனை, அப்புத்தளை.
பொழுது போக்கு: பேனா நட்பு, புத்தகம்.

பெயர்: கே.முரளிந்திரன்.
வயது: 18
முகவரி: 189, பிரதான வீதி, இறக்குவானை.
பொழுது போக்கு: கிரிக்கெட், ரீ.வி.

பெயர்: ஜாபர் அஹமட்,
வயது: 23
முகவரி: P.O.BOX-32377, JEDDAH-21428, K.S.A.
பொழுது போக்கு: வழமையானவை.



படிப்பகம்

www.padippakam.com

# கனவும் மெய்ப்படவேண்டும்

## அத்தியாயம் 24

பிரபஞ்சன்

**இதுவரை**

சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பரிவாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்து வைத்தார். சுமதி ஓர் அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறை பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

ஓரிரவு சுமதியை நிர்வாணமாக அடித்து விரட்டுகிறான். பக்கத்து வீட்டு பங்கஜம் மாமியின் ஆடையணிந்து, பெரியவரின் உதவியால் ஸ்டேஷன் வந்துசேர்கிறாள்.

கணேஷனும் தேடிவருகிறான். கூட்ஸ் வேனுக்குள் நுழைந்து பதுங்கும் சுமதி அவன் சென்றதும், ரயிலில் ஏறிப்போகிறாள்.

உயிர்த்தோழி கல்பனாவிடம் வந்துசேர்கிறாள். பிரிட்டு அழுகிறாள். சுமதியை அமைதிப்படுத்துகிறாள் கல்பனா. கடைக்குச் சென்று புதிய ஆடைகள் வாங்கிக் கொடுக்கிறாள்.

சுமதி பழையதை நினைக்கிறாள்.

இனி...

"அது சரி, என்னதான் சொல்ல வருகிறாய்?"

"உடனடியாக கணேசனை விட்டுப் பிரிந்து நீ வெளியே வருவதுதான் சரி. உன் ஆத்மாவை, உன் உடம்பை, உன் மரியாதையைக் காத்துக்கொள்ள அது ஒன்றுதான் வழி."

"வெளியே வந்து?"

"வா! நாங்கள் சுவாசிக்கிற காற்று உன்னை மட்டும் விலக்கி விடுமா? உன் ஒருத்திக்கு உணவு கிடைக்காமல் போகுமா? சுயமரியாதையை இழந்த பெண்கள், இல்லற தர்மத்தைக் காப்பாற்ற முடியாதவர்கள் மட்டுமல்ல, எதிர்காலப் பெண்களுக்குத் தப்பான வழி காட்டியாகவும் ஆவார்கள்."

"முடியாது?"

"கணேசனை விட்டு வா. சுயமரியாதையோடு வாழ முயற்சிசெய்."

அவர்கள் ஓர் இடத்தில் பிரிந்தார்கள்.

கணேசன் மறுநாள் அவளிடம் கேட்டான்:

"பள்ளிக்கூட விழாவில் ஏதோ புரட்சிகரமாக எல்லாம் பேசினாயாமே?"

"புரட்சியா என்று தெரியவில்லை. உண்மையாகச் சிந்திக்கச் சொன்னேன்."

"பெண் விடுதலைக் கருத்தையெல்லாம் பேசினாயாமே!"

"ஆமாம்."

"என்னை விட்டுப் போய் விடுவாயா?"

"அதை நான் எப்படிச் சொல்வது? நான் போவதும், போகாததும் உங்கள் கையில் இருக்கிறது."

"என்னை விட்டு உன்னால் போய்விட முடியுமா?"

அவள் அமைதியாய் இருந்தாள்.

"எங்கு போவாய்? போக முடியும்? உன்னை அமைதியாய் வாழ நான் அனுமதித்து விடுவேன் என்று நினைக்கிறாயா? நீ எங்கிருந்தாலும், உன்னைச் சித்ரவதை செய்து, உன் மரியாதையைக் கெடுத்து, உன்னை அவமானப்படுத்தாமல் இருப்பேன் என்று நினைக்காதே..."

மனித வாழ்க்கை, ஏன் இப்படி களைகளை உற்பத்தி செய்கிறது என்று இருந்தது அவளுக்கு.

அன்று இரவுதான் கணேசன் அரக்கனாகி, துச்சாதனனாகி, அவளை அவமானப்படுத்தி அவள் வெளியேறும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி வைத்தான்.

பள்ளி ஆண்டு விழாவுக்குச் சென்றது, சுமதிக்கு மிகப் பெரும் நன்மை செய்வதாகவே அமைந்தது. குழந்தைகளுக்கு ஏதேனும் கதை சொல்லி, அவர்களுக்கு அறிவு கொடுத்துதவும் நோக்கமாகத்தான் அவள் அங்கு சென்றாள். விளைவோ, அந்தக் குழந்தைகள் சொன்ன கதைகளின் மூலம், தானே கற்றுக்கொண்டு வந்ததாக அவளுக்குத் தோன்றியது.

அந்த நிகழ்ச்சி அவள் வாழ்க்கைப் போக்கையே மாற்றுவதாக அமைந்து விட்டது. குழந்தைகளுக்காக காக்கை, நரிக் கதைகளை மாற்றப் போய், தன் வாழ்க்கைக் கதையையும் அவள் மாற்றிக் கொள்ளும் அவசியம் நேர்ந்தமைக்காக அவள் மகிழவே செய்தாள். அதுவே அவள் வாழ்க்கையின் புதிய அத்தியாயத்தை அமைப்பதாக இருந்தது.

அவளையும் சேர்த்துச் சுமந்து கொண்டு ஓடிய ரயில் ஓர் இரவு முழுக்கப் பயணம் செய்து கொண்டிருந்தது. அவளைச் சுற்றி எங்கணும் இருள் மயமாய் இருந்தது. எங்கேயாவது தூரத்தில் வெளிச்ச ரேகை தென்படுமா என்று கண்விழித்துக் கொண்டு, பார்த்தபடியே சென்று கொண்டிருந்தாள். 'செல்லும் வழி இருட்டு.....செல்லும் மனம் இருட்டு. சிந்தை அறிவினிலும் தனி இருட்டு' என்கிற புதுமைப்பித்தனின் வரிகள் அவள் நினைவுக்கு வந்தன. தன் வாழ்க்கைப் பயணம் எதை நோக்கி, எந்த நம்பிக்கையின் ஆதாரத்தில் நடைபோடப் போகிறது என்பது அவள் சிந்தனையாய் இருந்தது. அதே சமயம், இருளோ ஒளியோ பயணம் மட்டும் இடையறாது நடந்து கொண்டேயிருக்கும் என்றபடி தனக்குத்தானே ஆறுதலும் சொல்லிக்கொண்டாள் அவள்.

வெள்ளை அடித்துப் பலகாலமான சுவர் மாதிரி பொலபொலவென்று விடிந்து கொண்டிருந்தது காலை. சுமதியின் பிறந்த மண் அது: அவளது இரத்தமும் சதையுமாக இருக்கும் அவளது இரு குழந்தைகளும், தந்தையும் தாயும் ஜீவித்துக் கொண்டிருக்கிற பூமி அது. பிளாட்பாரத்தில் அடி வைத்ததுமே, அவள் தேகம் பரவசமடைந்தது. அவளது குழந்தைகளும், தந்தையும் தாயும் விட்ட மூச்சுகாற்றை அவள் சுவாசித்துக் கொண்டிருக்கிறாள் என்கிற எண்ணமே, அவளைக் கிளர்த்தியது. குதிரை வண்டி ஒன்றை அமர்த்திக் கொண்டு வீட்டை நோக்கி விரைந்தாள் அவள்.

ஊர் அப்படியேதான் இருந்து. தெருக்களில் நிறமும், தூசும் அந்தப் புழுதியின் மணமும்கூட அப்படியேதான் இருந்தது. வீடுகளின், கடைகளின் முகங்கள் சற்றே மாறியிருந்தன. இடித்து, மாற்றிக் கட்டியிருந்தார்கள். கால வளர்ச்சியை, அந்த சின்னஞ் சிறிய ஊரிலும் பல்கிப் போன சினிமாத் தியேட்டர்களைக் கொண்டு அனுமானிக்க முடிந்தது. பெண்கள் நிறையவே, வீட்டுக்கு வீடு கல்லூரிக்குச் சென்று கொண்டிருந்தார்கள். வீடியோ கடைகள் சில அந்த ஊருக்கும் படையெடுத்து, நச்சுக் கலாசாரத்தைப் பரப்பிக் கொண்டிருந்தன. வேலை கிடைக்காத, வேலையை ஏற்படுத்திக்கொள்ள விரும்பாத இளைஞர்கள், மாலை நேரங்களில் தெரு முனையில் நின்று பெண்களைக் கேலி பேசினார்கள். பெண்கள் அதை அனுமதித்தார்கள் என்று கூற முடியாவிடினும், மறுத்துக் கலகம் செய்ததாய் இல்லை. ஊரில் முன்னை விடவும் அதிகமாக ஹோட்டல்கள் ஏற்பட்டுவிட்டன. மனிதர்கள் அசந்தர்ப்பமாக ஹோட்டல்களில் சாப்பிடத் தொடங்கிவிட்டார்கள். ஆகவே, ஊர் முன்னேறி இருக்கிறது என்பதை யார்தான் மறுக்க முடியும்?

சுமதி தனக்கு சில முடிவுகளை எடுத்துக்கொண்டாள். முதலில் அப்பாவிடமோ, அம்மாவிடமோ நடந்த விஷயங்கள் எதைப் பற்றியும், தான் முடிவாக அந்த வீட்டைவிட்டு வெளியேறி விட்ட விஷயத்தைச் சொல்லக் கூடாது என்று உத்தேசித்தாள். ஒற்றைக்கு ஒரு பெண்ணுக்கு நேர்ந்த துன்பங்களை அந்த வயோதிக நெஞ்சம் தாங்காது என்பதை அவள் அறிவாள். முதலில் அப்பாவிடம் பேசி, இனி தன் வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக்கொள்வது என்பதை முடிவு செய்ய வேண்டும். அம்மா அதைக் கேட்டு, மனம் ஒடிந்து போகாமல் இருக்கும் வகையில் பக்குவமாக அதை எடுத்துச் சொல்ல வேண்டும்.

அம்மாதான் வீட்டில் இருந்தாள். அம்மாவின் சொர்க்கம் வீடுதான். கணவன் வெளியே பணி செய்து பணம் கொண்டு வருவான். மனைவி வீட்டில் இருந்து அறம் வளர்ப்பாள் என்னும் பழைய பண்பாட்டுக்கு. அவளே எடுத்துக்காட்டாக இருந்தாள்.

"என்ன திடீர்னு? லீவு விட்டாங்களாக்கும், தனியா வந்திருக்கேயே, வீட்டுக்காரர் வரல்லையா?" என்றாள் அம்மா.

"லீவில்தான் வந்திருக்கிறேன். எத்தனை நாள் என்று சொல்ல முடியாது. உங்களையெல்லாம் பார்க்க வேண்டும் போல் இருந்தது. குழந்தைகள் எங்கே அம்மா?"

"பெரியவன், தாத்தாவோடு வெளியே போயிருக்கிறான். குழந்தை, அவள் சித்தி வீட்டுக்குப் போயிருக்கிறாள். சொல்லி அனுப்பி, குழந்தையை வரப் பண்ணுவோம். பல்லை விளக்கிட்டு வாயேன், ஒரு வாய் காபி குடிக்கலாம்."

அவள் கிணற்றடிக்குச் சென்று, முகத்தைக் கழுவிக்கொண்டு மீண்டாள்....

"எப்படி இருக்கிறார் உன் வீட்டுக்காரர்?"

"உம். இருக்கார்."

"ஏதாவது அவர் குணத்தில் மாறுதல் இருக்கிறதா?"

"இல்லை. ரொம்பவும் மோசமாகிவிட்டார் அம்மா."

அம்மா அதற்குமேல் பேசவில்லை. அவள் மனம் இரத்தக் கண்ணீரை இரகசியமாக வடிக்கும். வாய் வார்த்தைகளை இழந்து போகும். தன் சோகத்தைக் கண்டு, மகள் மேலும் நொந்துவிடக் கூடாது என்றுதான், கணவனைப் பற்றிய பேச்சு வரும் போதெல்லாம் சமாளிக்கிறாள்.

"அப்பா எப்போதம்மா வருவார்?"

"இன்னும் அரை மணியிலே வந்துடுவார்."

அப்பா வந்து விட்டார்.

"என்னம்மா, வருவதாகக் கடிதமே போடலையே...?"

"தோணிச்சுப்பா.... புறப்பட்டு வந்துட்டேன்....."

குழந்தைகள் இருவரும் வந்து விட்டார்கள். இப்போதுதான், குழந்தைகள் அம்மாவை அடையாளம் காணத் தொடங்கியிருந்தன. குழந்தைகளைப் பார்க்கும் போதெல்லாம் அவளுக்கு நெஞ்சை அடைத்துக்கொண்டு வந்தது.

பொறுப்பற்ற ஒருவனுக்கு மனைவியாக வாய்த்தவளின் குழந்தைகள் தான், அந்தக் கெட்டுப்போன இல்லறத்தின் பாவச் சின்னங்களாகி விடுகின்றன என்று தோன்றியது அவளுக்கு. சிரமப்பட்டுக் கண்ணீரை அடக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று, அவளுக்கு.

"அப்பா.... உங்களுடன் நிறையப் பேசவேண்டும். அதற்காக வந்திருக்கிறேன்...."

அன்று மாலை நாலு மணிக்கெல்லாம் அவர்கள் புறப்பட்டார்கள். வால்மீகி மண்டபத்தின் மேற்குச் சுற்றில் அமர்ந்தார்கள். மாலை மங்கிக் கொண்டு வந்தது. வெயில் சற்று தணிந்து, குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது.



"என்னம்மா, எப்படி இருக்கு உங்கள் குடும்ப வாழ்க்கை?"

"அதைத் தாம்பா சொல்ல வந்தேன். ஒரு வகையாக அதை முறித்துக் கொண்டேன் அப்பா."

"அப்படியென்றால்?"

"ஒரேயடியாக வீட்டை விட்டு வெளியேறி விட்டேன்."

அப்பாவின் முகத்தில் கவலையும், ஆழ்ந்த யோசனையும் வெளிப்பட்டது.

"அப்படி ஒரு நிலமை ஏற்பட்டு விட்டதா, அம்மா?"

"ஆமாம் அப்பா. அக்னி வளர்த்து, மந்திரங்கள் சொல்லி அவரைக் கைப்பிடித்ததற்கு, நான் எவ்வளவு நாணயமாக இருக்க வேண்டுமோ, அதற்கு மேலேயும் நான் இருந்திருக்கிறேன். மனிதன் எந்த அளவுக்குக் கீழே போனாலும், அவனைத் திருத்தி மேலே கொண்டுவர முயற்சிக்கலாம். மனிதன் மிருகமாகிவிட்டால் என்ன செய்ய முடியும்? குறைந்த பட்சம் என் உயிரையாவது காப்பாற்றிக் கொள்ளலாம் என்றுதான் இங்கு வந்தேன். இனிமேல், நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள் அப்பா."

அப்பா தரையைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார்; பிறகு சொன்னார்,

"ஒருவனுடன் வாழ்வதா, வேண்டாமா என்பதை நீதான் தீர்மானிக்க வேண்டும். எனக்குத் தெரியும். இது நீடிக்காது என்பதை நான் அறிவேன். இந்த முடிவைச் சற்று முன்னாலேயே நீ எடுத்திருக்கலாம். குறைந்த பட்சம் அடியும் உதையுமாவது மிச்சப்பட்டிருக்கும்."

**(தொடர்ந்து வரும்)**

---

# நெஞ்சுக்கு நிம்மதி

## "என்னைத் திரும்பவும் வவுனியாவில் கொண்டுபோய் விடுராசா; உனக்கு கோடி புண்ணியம்"

**சிலாபம்- பொ.புஷ்பராஜ்**

காமாட்சி கண்களில் வடியும் கண்ணீரை தன் சேலையின் முந்தானையில் துடைத்துக் கொண்டாள்.

தள்ளாத இந்த எழுபது வயதிலும்- கோப்பாயில் இருந்து வவுனியா வந்து பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் அகதியாக ஆறுமாதம் தங்கி எவர், எவரோவை கால்களைப் பிடித்து கெஞ்சி கூத்தாடி கொடுக்க வேண்டியதை கொடுத்து, எப்படியோ, தவளைப் பாய்ச்சலாக நிம்மதி தேடி கொழும்பில் உள்ள மகன் சிவா வீட்டுக்கு வந்த தனக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்! மனதிற்குள் தன்னைத் தானே திட்டிக் கொண்டாள் காமாட்சி.

அப்போது காமாட்சியின் நெஞ்சுக்குள் மகன் சிவா கருகிப் போய் இருந்தான். இன்றுடன் காமாட்சி சிவா வீட்டுக்கு வந்து ஒரு வாரம் ஆகிவிட்டது.

இன்று திங்கட்கிழமை. வாரத்தின் முதல் வேலை நாள்.

காலை மணி 9.

"மாமி அந்த உடுப்புக்களை கொஞ்சம் கழுவிப் போடுங்கோ. நான் மார்க்கட்டுக்கு போய் விட்டு வருகிறேன்." சிவாவின் மனைவி பார்வதி தன் மாமியார் காமாட்சியிடம் சொல்ல. "பிள்ள எனக்கு பல மாதமாய் பங்கருக்குள்ள இருந்ததால கண்பார்வை கொஞ்சம் குறைவு. நீ உடுப்புக்களை கழுவிப் போடுபிள்ள. இன்று நான் விரதமும் கூட."

"என்ன கண் பார்வைக் குறைவே? எனக்கும் காது செவிடு தெரியும் தானே. (பொய்) விரதமாம் விரதம். என்னது அகதி முகாமுக்குள்ளேயும் விரதம் இருந்தீங்களோ? விரதச் சோத்தை எந்த ஆமிக்காரனுக்கு தானம் தந்தீங்க?"

மருமகள் பார்வதியின் இப்பேச்சு, மாமியாரின் நெஞ்சத்தை யாரோ ஓங்கி அறைவது போல இருந்தது. இப்போது காமாட்சியின் நெஞ்சு நைந்துபோய்விட்டது.

உடைகளை கழுவினாள்.

முற்பகல் மணி 2.

"மாமி நீங்கள் சாப்பிட்டுவிட்டு, பிள்ளைகளின் சாப்பாட்டு தட்டை சுத்தம் செய்து வைத்துவிட்டு சமையல் பாத்திரங்களையும் கழுவி வைத்து விட்டு வீட்டையும் சுத்தம் செய்யுங்கோ. டி.வி.யில பொண்டாட்டி சொன்னா கேட்கணும் படம் போடப் போறங்க- நான் படம் பார்க்க போகிறேன்."

காமாட்சிக்கு மருமகள் பார்வதியின் வார்த்தைகள் எரிச்சலை தந்தன. கஷ்டப்பட்டு வீட்டு வேலைக்காரியைப் போல மருமகள் பார்வதி சொல்லிய சகல வேலைகளையும் செய்து முடித்தாள் காமாட்சி.

இப்போது காமாட்சியின் நெஞ்சு சுருங்கிப் போய்விட்டது.

மாலை மணி 4.


"மாமி நாளைக்கு பைப்பில் தண்ணீர் வராதாம். பரணில் கிடக்கும் வெண்கல குடங்களை எடுத்து தண்ணீரை நிரப்பி வையுங்கோ. இன்றைக்கு எனக்கு குளிக்கவும் நேரம் இல்லை. நாளைக்குத்தான் குளிக்கவும் வேண்டும்!" காமாட்சியின் கைகள் இயந்திரம் ஆகியது. குடங்களில் தண்ணீரை நிரப்பி வைத்தாள். இப்போது அவளுக்கு நெஞ்சு வலி எடுத்தது.

மாலை மணி 6.

"மாமி அவருக்கு இரா சாப்பாட்டுக்கு இடியப்பம் செய்ய வேண்டும். கோதுமை மாவை அவித்து வையுங்கோ." பம்பரமானாள் காமாட்சி. மா அவித்து வைத்தாள். இப்போது காமாட்சியின் நெஞ்சுக்குள் ஒரு வித ஆதங்கமும், ஆவேசமும் மண்டிக் கிடந்தது.

இரவு மணி 8.

மகன் சிவா வேலை முடிந்து வீட்டுக்கு வந்தான். பார்வதி. டி.வி.யில் இரண்டாவது படமாக 'சம்சாரம் அது மின்சாரம்' படம் பார்த்துக் கொண்டு இருந்தாள். சமையல் அறையில் தாய் காமாட்சி இரவு சாப்பாட்டை- புலம்பிக் கொண்டே- சமைத்துக் கொண்டு இருந்தாள். இதைக் கண்டும் காணாதது



போல மனைவிக்குப் பயந்து சிவா ஹாலில் உட்கார்ந்து கொண்டு பார்வதியுடன் படம் பார்த்துக் கொண்டு இருந்தான். ஹாலுக்குள் நுழைந்தாள் காமாட்சி.

"தம்பி!"

"என்னம்மா?"

"என்னை திரும்பவும் வவுனியாவில் கொண்டு போய் விட்டு விடு ராசா. உனக்குக் கோடிப் புண்ணியம் கிடைக்கும்." காமாட்சி சிவாவிடம் பரிதாபமாக கெஞ்சிக் கேட்டாள்.

"போ. போ- வயது போன இந்தக் காலத்துல நாங்க போடுவதை- சாப்பிட்டு படுத்து தூங்குவதைவிட்டு சின்னப் பிள்ளைத்தனமா நடந்துக கொள்கிறாயே. பார்ப்பவர்கள் என்னை என்ன நினைப்பார்கள்? என்னை நிம்மதியாக இருக்கவிடு. ஒஃபீசில தான் நிம்மதி இல்லை என்றால் வீட்டிலேயுமா? ச்சே... என்ன வாழ்க்கை இது?" தாய் மீது எரிந்து விழுந்தான் சிவா. மருமகள் பார்வதி முணுமுணுத்துக் கொண்டே முறைத்துப் பார்த்தாள். காமாட்சியின் உடல் சிலிர்த்தது. இப்போது நெஞ்சுக்குள் ஏதோ அடைப்பது போல அவளுக்குத் தோன்றியது. அந்த நிலையிலும் இரவு சாப்பாட்டை சமைத்து விட்டாள்.

இரவு மணி 10.

காமாட்சியின் மனம் சோகத்தில் ஊஞ்சலாடியது. மீண்டும் அழ ஆரம்பித்தாள். இப்போது கண்களில் ஈரம் இல்லை. கண்கள் வதங்கி வாடிப்போய் விட்டன. துக்கம் நெஞ்சை அடைத்தது. அவமானம் ஒருபுறம். வேலைப் பளு மறுபுறம். இப்போது நெஞ்சு வேகமாக வலிக்கத் தொடங்கியது. முணு முணுத்துக் கொண்டே நெஞ்சை இறுகப் பொத்திக் கொண்டு படுத்துக்கொண்டாள்.

மறுநாள் விடிந்தது. செவ்வாய்க் கிழமை. காலை மணி 6.

எப்போதும் ஐந்து மணிக்கே தூக்கத்திலிருந்து எழும்பி விடும் காமாட்சியை காணாது பதற்றம் அடைந்தாள் பார்வதி. காமாட்சியின் அறைக்கு ஓடிப் போய் பார்த்தாள். காமாட்சி நிம்மதியாக உறங்கிக் கொண்டு இருந்தாள்.

"மாமி!" அழைத்துப் பார்த்தாள் பார்வதி. பதில் காணாமல் போய் இருந்தன. தன் கணவன் சிவாவை அழைத்தாள். பதற்றத்துடன் ஓடிவந்தான் சிவா. தன் கைகளால் காமாட்சியின் உடலை தட்டிப்பார்த்தான். மார்கழி மாதப் பனியைப் போல உடல் சில்லென இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# கோலங்கள்

சந்திரஹரி

டோக்கியோவிலிருந்து புறப்பட்ட இருவர் பயணிக்கும் அந்தச் சிறிய விமானம் ஜப்பான் கடல்மீது கொரியாவை நோக்கி பறந்து கொண்டிருந்தது.

ஜான்சன் அதை ஓட்டிக்கொண்டிருக்க அருகில் அவரது எட்டுவயது மகன் டேவிட். பள்ளி விடுமுறைக்கு ஹாஸ்டலிலிருந்து மகனை சொந்த ஊரான சியோலுக்கு அழைத்துச் சென்று கொண்டிருந்தார்.

பையன் நிறைய சந்தேகங்களைக் கேட்டுக் கொண்டே வந்தான். "வானம் ஏன் நீலமாக இருக்கிறது?"

"மழை எப்படி பெய்கிறது?"

"விமானம் எப்படி பறக்கிறது"- இப்படி.. பதில் கூறிக்கொண்டே வந்தார் ஜான்சன்.



கொஞ்சம் கொஞ்சமாக பருவநிலை மாறிக் கொண்டே வந்து கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டது. திடீரென வீசிய சூறாவளிக் காற்றில் விமானம் நிலை தடுமாறியது. திரும்பி விட நினைக்கையில் தகவல் தொடர்பு அறுந்தது. இயந்திரம் கோளாறு செய்தது, கட்டுப்பாட்டை மீறி கடல் மட்டத்திற்கு சற்று உயர தாழ்வாகப் பறக்க ஆரம்பித்தது விமானம்.

உடனே இரப்பர் மிதவைகளை எடுத்து மகனுக்கு மாட்டிவிட்டு தானும் அணிந்து கொண்டார் ஜான்சன். முடிவு தெரிந்து போனது அவருக்கு. இன்னும் சிறிது நேரமே வாழ்க்கை, பீதியடைந்த மகனை அணைத்துக் கொண்டார்.

"கண்ணா..... அப்பாவுக்கு முத்தம் கொடு."

தந்தையின் கன்னங்களில் முத்தமிட்டான் சிறுவன்.

"மகனே, தைரியமாக இரு. நம் வாழ்க்கை முடிந்தது. நாம் போகிறோம்."

"எங்கே?"

"தெரியாது மகனே!"

"எப்போது மீண்டும் சந்திப்போம்?"

"தெரியாது மகனே! நாம் ஏன் இணைந்தோம்? ஏன் பிரிகிறோம்....? இந்த உலகம்... வாழ்க்கை... எதுவுமே தெரியவில்லை மகனே."

'தெரியும்...' 'தெரியும்' என்று எல்லா சந்தேகங்களையும் தீர்த்து வந்த தந்தை 'தெரியாது... தெரியாது' என்று கூறுவதைக் கேட்டு திகைத்தான் டேவிட்.

விமானம் கடலை முத்தமிட சிறிதே நேரம். கடலில் சுறாக்கள் மேல் எழும்பிக் குதிப்பதைப் பார்த்தார் ஜான்சன். அந்த ஆழ்கடல் சுறாக்களுக்கும், திமிங்கலங்களுக்கும் மிகவும் பிரசித்தம் என்பது சட்டென்று அவருக்கு நினைவுக்கு வந்தது.

உடனே மகனுக்கு அணிவித்திருந்த மிதவையையும், தான் அணிந்திருந்ததையும் கழற்றி வீசி எறிந்தார்.

"ஏன்?". கேட்ட மகனை இறுகத் தழுவிக் கொண்டார். தப்பிக்க இயலாத சூழ்நிலையில் மரணம் சீக்கிரம் சம்பவிக்க வேண்டும். மிதவையால்- அது தாமதமாகக் கூடும். ஒரு வேளை மகன் கடலில் அலைக்கழிக்கப்பட்டு, கதறக் கதற உயிரோடு சுறாக்களுக்கு இரையாக நேர்ந்தால்- கண்ணெதிரிலேயே கூட அது நிகழ்ந்தால்- கூடாது.... மனம் தாங்காது. சீக்கிரம் மடிந்துவிட வேண்டும். இதை எப்படிச் சொல்வார்? மகனை ஆவேசமாக அணைத்துக்கொண்டு முத்தமழை பொழிந்தார்.

'மரணத்தை மென்மையாக வழங்கு ஆண்டவனே!' பிரார்த்தனை செய்தார். அவரது கண்களில் நீர் கோர்த்து நின்றது. ■

# காரணம்

"என்னங்க யோசனை?"- சரிதா பரணியின் கழுத்தை கட்டிக் கொண்டாள். அவன் முதுகில் இளமைகள் இரண்டும் மெத்தென்று அமர்ந்தன.

"ஏன் சரிதா இப்படி?"

"எது?.." அவள் எதுவும் தெரியாதது மாதிரி கேட்கிறாள். பரணியால் சுள்ளென்று கோபப்பட முடியவில்லை. வறட்சியாய் சிரித்தான். அவள் வயிற்றை தடவினான். கிள்ளினான். நெளிந்தாள்.

"இதுக்குள்ள இருக்கிற சிசுவை வேணாமுன்னு சொல்றியே.." என அவள் வயிற்றை காட்டி கேட்கிறான்.

"இதே யோசனையா? சாப்பிட எழுந்து வாங்க"

விலகினாள். பரணி மனசு ஒடிந்தான். கட்டிலில் சரிந்தான். கண்மூடிக் கிடந்தான்.

கண்ணுக்குள் ஒரு குழந்தை கத்தி ஓலமிடுகிறது. 'அப்பா... அப்பா...' என கைநீட்டி அழைக்கிறது. தூங்க முடியவில்லை. தூக்கி அணைக்க முடியவில்லை. இரத்தத்தோடு இரத்தமாக கரைகிறது. கண்ணை திறந்தான்: குழந்தை காணவில்லை. கண் மூடினான். மீண்டும் குழந்தை அழுகிறது. கரைகிறது. திறந்தான். இல்லை. எங்கே...? மனம் அலைபாய்கிறது. ஏங்குகிறது. தவிக்கிறது!

"என்ன படுத்துட்டிங்க?" சரிதா பரணியை தட்டி உசுப்பினாள்.

"இப்படி வா. உட்கார்"

"பசிக்கலையா?"

"அப்புறம் சாப்பிடலாம். கிட்ட வா..."

"வேணாம். பேச்சு வேணாம். என்னை விடுங்க...."

"ப்ளீஸ் சரிதா. ஒரு நிமிஷம்."

அருகே வந்தாள். உட்கார்ந்தாள். தன் மடிமீது இழுத்துக் கொண்டான்.

இந்தக் குடும்பத்தில் சரிதா, பரணி, அவன் அம்மா என மூன்று பேர் மட்டுமே. பரணிக்கு கல்யாணமாகி ஆறுமாதம் ஆகிவிட்டது. சரிதா கர்ப்பமாக போகும் நாளுக்காக ஆவலுடன் காத்திருந்தான். இனிய செய்தியை சொன்னாள். கூடவே இடியும். எதனால் குழந்தை வேண்டாம் என்கிறாள்? தலைப்பிரசவம் என்பதால் உயிருக்கு ஆபத்து வருமோ எனப் பயப்படுகிறாளா? தெரியவில்லை. அதட்டி கேட்கவும் அவனுக்கு மனமில்லை. அதிகாரம் செய்யவும் விருப்பம் இல்லை. ஆனால் தெரிந்து கொள்ளாமல் எப்படி இருப்பது?..

"என்னாங்க சாப்பிடப் போறிங்களா... இல்லையா?"

"அம்மா சாப்பிட்டாங்களா?"

"சாப்டுட்டு மாத்திரையும் போட்டுக்கிட்டு தூங்கி ரொம்ப நேரமாச்சு..."

"நீ?"

"நீங்க வராம....?"

"எனக்கு வேணாம். நீ போய் சாப்பிடு."

"எதுக்கு வேணாம்?"

"மனசு சரியில்லை சரிதா."

"என்னங்க சின்ன புள்ள மாதிரி? குழந்தை எப்பவுமே வேணாமுன்னா சொல்றேன்? இப்ப வேணாம். கொஞ்ச நாள் போகட்டும்."

"எதனால இப்ப வேணாமுன்னு சொல்ற?"

சரிதா தலை குனிந்தாள். அவனை ஆழமாய்ப் பார்த்தாள்.



"ஏன் சரிதா... ஏன்?" கெஞ்சலாய் கேட்டான்.

அவள் என்ன சொல்வாள்? எப்படி சொல்வாள்? பரணி தோளில் சாய்ந்தாள். முகம் புதைத்தாள். மெல்ல அணைத்தான்.

"ப்ளீஸ் சரிதா."

"சொல்றேன். ஆனா கண்டிப்பா அபார்ஷனுக்கு ஒத்துக்கணும்."

"பார்ப்போம்."

"ப்ராமிஸ் பண்ணுங்க. அப்பதான் சொல்வேன்."

"பிராமிஸ். இப்ப சொல்."

"உங்க அம்மாவுக்கு ரெண்டு மாசமா உடம்பு சரியில்லதானே?"

"ஆமா. அதுக்கு என்ன இப்ப?" சட்டென்று வார்த்தை உடைக்கிறான் பரணி.

"நான் தலைப் பிரசவத்துக்கு அம்மா வீட்டுக்கு தான் பேவணும். அப்படி நான் போயிட்டா அத்தையை யார் கவனிச்சிக்கிறது? உங்களுக்கு ஆபீஸ் வேலையே சரியா இருக்கும். அப்படியே நான் அம்மா வீட்டுக்கு போவாம இருந்தா கூட நிறை மாசமா இருக்கிற சமயத்துலேயும்... குழந்தை பிறந்தப்புறம் என்னால எப்படி அவங்களை ஒழுங்கா கவனிச்சிக்க முடியும்? அவங்களை விட எனக்கு குழந்தையா முக்கியம்? குழந்தை இப்ப இல்லேன்னா அடுத்த வருஷம் கூட பெத்துக்கலாம். ஆனா அத்தையை இப்ப கவனிக்காம விட்டுட்டா இன்னொரு அம்மா உங்களுக்கு கிடைப்பாங்களா?"

பரணி சரிதாவை அதிசயமாய்ப் பார்க்கிறான். 'இந்தக் காலத்தில் கூட இப்படி ஒரு பெண்ணா?... இந்த அற்புதமான

எஸ்.எஸ். பூங்கதிர்

பெண்ணை எனக்கு மனைவியா படைச்ச ஆண்டவனுக்கு எப்படி நன்றி சொல்வது?...' என நெகிழ்ந்த பரணி, சரிதாவை தழுவிக் கொண்டான். நெற்றியில் முத்தமிட்டான்.

"சரிதா! உன்னை மனைவியா அடைஞ்சதுக்கு ரொம்ப... ரொம்ப... பெருமைப் படறேன்," என்றான் சந்தோஷமாக.

ஆனந்தத்தில் அவன் கண்கள் கலங்கின. ஆனந்தக் கண்ணீர், சரிதாவுக்கும் கூட கண்ணீர் பெருகியது.

கல்யாணத்திற்கு அவள் அப்பா, வாங்கின கடனையே இன்னும் அடைக்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார். இந்த நிலையில் இவள் கர்ப்பமானால் பிரசவ செலவு... குழந்தைக்கு நகை செலவு என பாவம்! அவர் என்ன செய்வார்?

நல்ல வேளை அப்பா தப்பித்தாரே என்று ஆனந்தக் கண்ணீர்! ■

# ஏன் அழுதாள்?

இடுப்பில் ஏதோ ஊர்வது போல் உணர்ந்தாள் மீனாட்சி. அனிச்சை செயலாய் கைவைத்து தட்ட முயன்றபோது விரல்கள் தட்டுப்பட்டன. சட்டென்று கண் விழித்தாள். கணவர் மகேந்திரன் உருவம் அவளருகே அந்த இருட்டிலும் தெரிந்தது.

புரிந்துபோனது. படுத்திருந்தவாறே தலையைத் திருப்ப தனக்கு வலப்புறம் தேவிகா படுத்திருப்பது தெரிந்தது. அவளையடுத்து அவள் தங்கைகள் இருவர் படுத்திருந்தனர்.

கணவன் அழைப்பது இவளுக்கும் சரியென்றே பட்டது. முப்பத்தொன்பது வயதாகியும் தன் மனம் இன்னும் இளமையாயிருப்பதை உணர்ந்தாள்.

உடம்பு சுகம் கண்டு நெடுநாள் ஆனது போல் ஞாபகம் வந்தது.

பொய்யான சலிப்புடன் எழுந்தாள். எழுந்து போன கணவன் பின்னால் பூனை நடையாய் நடந்தாள். படுத்திருந்த உள்வீட்டை விட்டு வராந்தாவுக்கு வந்தாள். ஓசைப்படாமல் கதவைச் சாத்தினாள்.

"கொஞ்சம்கூட விவஸ்தை கிடையாது உங்களுக்கு. கல்யாண வயசுல தேவிகா இருக்கிறாள். இருவத்தொரு வயசாச்சி. அவளுக்கு ஒரு மாப்பிள்ளை பார்த்து கல்யாணம் பண்ணி வைக்கிறதைவுட்டுப்பிட்டு இன்னும் உங்களுக்கு பொண்டாட்டி கேக்குது....”- என்று கோபித்துக்கொண்டே பாயில் படுத்தாள்.

"எனக்கு நாப்பத்திநாலு வயசாகுது. இப்பவே சன்யாசியாயிட முடியுமா?" என்றார், மகேந்திரன் அடிக்குரலில்.

அவள் ஜாக்கெட் ஹுக் கழற்றும் வரை பொறுமையாயிருந்தார்.

"ஆசையில்லாமப் போறதுக்கு உனக்கும் எனக்கும் இன்னும் வயசாகல்ல. சின்ன வயசிலேயே கல்யாணம் பண்ணிக்கிட்டோம். மறு வருஷமே தேவிகா பொறந்துட்டா!"

"சரி! பேசிக்கிட்டேயிருக்காதீங்க..."

• • •

கணவன் விலகிப் படுத்ததும் நீண்ட பெருமூச்சு வந்தது. இனம் புரியாத நிம்மதி நெஞ்சு முழுக்க நிறைந்தது போல் உணர்ந்தாள். உடனே எழுந்திருக்க மனமில்லாமல் அப்படியே படுத்திருந்தாள்.



கொஞ்ச நாளாய் உடம்பிலிருந்த திமிர்த்தனம் குறைந்துபோய் உடம்பே லேசானதைப் போல் உணர்ந்தாள். சந்தோஷமாகக் கூட. ஜாக்கெட் ஹுக்கை மாட்டிக்கொண்டிருக்கையில் உள் வீட்டிற்குள் லைட் எரிவது தெரிந்தது. தொடர்ந்து அடுக்களை கதவை திறக்கும் ஓசை! தண்ணீர் பானை மேல் இருந்து மூடியை எடுப்பது- தண்ணீர் மொள்ளுவது- செம்பு பானையில் இடிப்பது எல்லாமே கேட்டது.- சின்ன சின்ன பூகம்பங்களாய்! 'அய்யய்யோ...! தேவிகா முழிச்சுட்டாப் போலிருக்கே...!'- என்று அதிர்ந்தவளுக்கு சட்டென்று மனசுக்குள் அவமான உணர்வு அப்பியது.

தி. நடராஜன்

கணவனுடன் படுத்த சுகம் மாறி விபசாரம் பண்ணியது போன்ற அவமானம். இதுவரை உணர்ந்த சொர்க்கமே நரகமாய் மாறி உடம்பு முழுக்க புழுவாய் நெளிவது போல் உணர்ந்தாள்.

மனசுக்குள்- இந்த அவமானத்தால் ஏற்பட்ட துக்கம் தொண்டையை அடைக்க விம்மல் வெடித்து அழுகை பீறிட்டுக் கிளம்பியது.

ஏன் அழுகிறாள் என்று புரிந்து கொள்ளாத மகேந்திரன், "என்னாச்சி உனக்கு....?" என்றவாறு அவள் தோளைத் தொட்டபோது. "போங்க தூர...!"- அருவருப்புடன் அவர் கையைத்தட்டி விட்டவள் முழங்காலுக்குள் முகம் புதைத்து அழுதாள். அழுது கொண்டிருந்தாள். 'உடம்பின் திமிரை நினைத்து அழுதாளா...? நடந்ததை மகள் காண நேரிட்டதற்கு அழுதாளா?' மகளுக்கு திருமணமாகாத சூழலை நினைத்தா? மொத்தமாக அனைத்துக்கும் சேர்த்தே அழுதிருக்க வேண்டும். ஏனென்றால் நெடு நேரம் அழுதாளே! ■

## எழுத்தாளர் கவனத்துக்கு...!

முரசுக்கு ஆக்கங்களை அனுப்புவோர் அவர்களுடைய முழுப்பெயர், முகவரி முதலியவற்றைத் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும். சொந்தப் பெயர் இடம்பெறுவதை விரும்பாத எழுத்தாளர்களும் தங்கள் ஆக்கங்களில் புனை பெயரைக் குறிப்பிடலாம். இருப்பினும் சொந்தப் பெயர் முகவரி தனியாக எழுதி அனுப்பப்படவேண்டும்.

தட்டச்சு முறையில் ஆக்கங்களை அனுப்புவோர் மூலப்பிரதியை அனுப்பி வைக்கவேண்டும்.

கவிதைப் போட்டி, வர்ணம் தீட்டும்போட்டி மற்றும் வாரம் ஒரு பட்டுச்சேலைப் பரிசுத்திட்டம் ஆகியவற்றுக்கு அனுப்பும்போது பெயரையும் முகவரியையும் தமிழுடன் ஆங்கிலத்திலும் தெளிவாக எழுதி அனுப்புவது விரும்பத்தக்கது.

-ஆசிரியர்-

**ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல.1772, கொழும்பு.**

# நிஜம்

பாலு ஆஃபீஸுக்கு போய் விட்டாலும், அவன் பேச்சின் காரம் இன்னமும் வினிதாவின் கண்களில் வழிந்து கொண்டிருந்தது.

வினிதாவிற்கு தற்கொலை செய்து கொண்டு விடலாம் போலிருந்தது.

வீட்டாரின் பேச்சையெல்லாம் கேட்காமல், எவ்வளவு பெரிய தப்பு செய்து விட்டோம். கவிதை எழுதுகிறார் என்பதை வைத்து, அவன் மனமும், அவன் கவிதை போலவே இருக்கும் என்று நினைத்தது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்.

நம் கணவர் பெண்களின் உணர்ச்சிகளை புரட்சியோடு எவ்வளவு அற்புதமாய் கவிதை



இரா.தனசேகர்

களில் கூறியுள்ளார் என்று ஆரம்பத்தில் பெருமையாயிருந்தாலும், பிறகு பாலுவின் நிஜ முகம் அறிய, அத்தனையும் கசப்பாயிற்று.

எழுத்துக்களுக்கும், யதார்த்தங்களுக்கும் உள்ள வேறுபாட்டை வினிதாவால் சகித்துக் கொள்ள முடியவில்லை. 'என் வேலைக்கும், பெருமைக்கும், எவ்வளவு வரதட்சணை வாங்கலாம் தெரியுமா? ஒன்றுமில்லாம வந்துட்டு உனக்கு இவ்வளவு திமிரா?' காதலித்து திருமணம் செய்து கொண்ட கணவன் பேசுகிற பேச்சா இது?

இன்று ஆஃபீஸ்விட்டு வரட்டும். இரண்டில் ஒன்று முடிவு கட்டிவிட வேண்டும். கௌரவ நரகத்தில் நசிவதை விட தனிமை மேலானது. வினிதா ஒரு முடிவுக்கு வந்து எழுந்து நின்றபோது, வீட்டின் முன் கறுப்பு வேன் ஒன்று ஓசையுடன் வந்து நின்றது. என்ன ஏதென்று கேட்பதற்குள் வேன் உள்ளிருந்து உருத்தெரியா சடலமொன்றை தூக்கி வந்து நடு முற்றத்தில் கிடத்தினார்கள். காலையில் ஆஃபீஸ் செல்லும்போது ஏற்பட்ட விபத்தில் பாலு அகால மரணமடைந்து விட்டானாம்.

வினிதா அமைதியாக அமர்ந்திருந்தாள். அழுகையும் வரவில்லை. அழ முயற்சியும் செய்யவில்லை. இப்போதுதான் நிஜமாகியுள்ளவனுக்காக எதற்காக துக்கப்பட வேண்டும். எப்படியோ தகவல் தெரிந்து இரு வீட்டினரும், வீராப்பெல்லாம் மறந்து துக்கம் விசாரிக்க கும்பல் கும்பலாக வந்து கொண்டிருந்தனர். வினிதா சலனமில்லா முகத்தோடு அனைத்து சடங்குகளையும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

எல்லாம் முடிந்து தாலி அறுப்பு சடங்கின்போது வினிதா பேசத் தொடங்கினாள்.

"எல்லாத்துக்கும் வணக்கம். இப்ப எதுக்காக என் தாலியை அறுக்கப் போறீங்கன்னு எனக்குத் தெரியணும்!" உறவுக் கூட்டம் வாயைப் பிளந்தது. வினிதா தொடர்ந்தாள்: "இவ விதவை, அதனாலே இவளை யாரும் பார்க்காதீங்க எனும் நோக்கத்திலா? இல்ல, இவ வாழ்ந்து கெட்டவ! இவளைப் பார்த்து எல்லோரும் பரிதாபப்படுங்க, அப்படீங்கற எண்ணத்திலா? நான் சாகற வரைக்கும் தாலியை கழற்றப் போறதில்ல. தயவு செய்து கேள்வி கேட்காம எல்லோரும் கிளம்புங்க. என் வாழ்வு என்னோடு. யார் உதவியையும் நான் கேட்கப் போறதில்லே.... போதுமா?" பலவாறாய் பேசியபடி வெளியேறினர். வீடு அமைதியானது. வினிதா மெல்ல பாலுவின் படத்திற்கு அருகே வந்து, "உன்னால உன் எழுத்துப்படி வாழ முடியல. ஆனா உன் இறப்பால் ஒரு புரட்சிப் பெண்ணாக உன் எழுத்துப்படி நான் வாழ்ந்து காட்டப் போறேன்!" வினிதாவின் கண்களில் இப்போது பனித் திரையிட்டது. இது ஆனந்தக் கண்ணீரா, சோகக் கண்ணீரா என்பதை அவளாலேயே சொல்ல முடியாது. ■



படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய நயம்

# பூவும் பூவையும்

தருவது ரசிகன்

வானம் இடிந்து கொட்டிய மழையாய்
பாணம் தொடுத்து மோதிய மனிதர்
கொட்டிய குருதி களத்தில் பெருகிட
எட்டிய திசையெங்கும் பிணங்கள் பிணங்கள்!

வீசிய வேல்கள் மார்பை பிளக்க
ஏவிய அம்புகள் உயிரைக் குடிக்க
வீரிய வேழங்கள் தமக்குள் மோத-போர்
பூசிய சிவப்பில் நிறம் மாறியது பூமி!

வீழ்ந்த பிணங்களை விழுங்கிச் சுவைக்க
எழுந்தன கழுகுகள் வானின் பரப்பில்.
முட்டிக்கொண்டு மடிந்தனர் மனிதர்
வெட்டிக்கொண்டு வீழ்ந்தனர் மண்ணில்.

வென்றவர் கொடிமரம் நட்டு முழங்க
மாண்டவர் போக மீண்டவர் தப்பி
'வந்தவர் மறுபடி ஓடச் செய்வோம்'
என்றனர், தப்பி மறைந்தனர் எங்கோ!

முரசம் அதிர, வேழங்கள் பிளிற
உரசிய வாள்கள் தீப்பொறி கிளப்ப
வெற்றிச் சங்கு வென்றவர் ஊத
சிரசம் குனிந்து மனிதம் அழுதது!

பூமிப்பெண்ணாள் புன்னகை இழந்தாள்
பொங்கிய குருதியால் மூக்கைச் சுளித்தாள்.
பூமியை அசுத்தம் செய்யும் போரால்
பூமிப் பெண்ணாள் புன்னகை தொலைத்தாள்.

வென்றவர் துள்ளி குதிரைமீதேறி
வெற்றி உலா நடத்தி முடித்தனர்.

வேட்டைதான், வேட்டைதான்
கோட்டைதான், கோட்டைதான்.
பல்லவர் படைகள் துள்ளி
பாண்டியர் மண்ணில் ஆடின!

முத்துக்கள் குவிந்த சந்தையும்
சுக்குநூறானது சூறையால்!
சொத்துக்கள் யாவும் மக்கள்
திக்கெங்கும் இழந்தனர் கொள்ளையால்!

பல்லவர் மன்னன் நந்திவர்மன்
பாரெங்கும் ஆள முந்திய ஆசையால்
போரெங்கும் தொடுத்து நின்றான்
"பல்லவர் பிறந்தார் ஆள!" என்றான்!

மன்னனுக்கு வெற்றிப் போதை
மன்னன் படைகளுக்கோ வேறு போதை.
பொன் கொள்ளை, பொருட் கொள்ளை
போகத்துக்காய் பெண் கொள்ளை!

வாருங்கள் என்பார் பெண்களை
வருடுங்கள் என்பார் தங்களை!
"தேனெனப் புகுந்தார் தீயார்
தீயிடை விழுந்த புழுவாய்
ஆயினோம்" என்றழுதார் பெண்களெல்லாம்!

பூங்கொடியினர் என்று நினைத்ததனால்
புயலென மாறார் என நினைத்தார்.
மெல்லியர் என்று நினைத்ததனால்
வல்லவராகார் என நினைத்தார்.

"மண்ணை ஆள வந்தீரோ?
பெண்ணை ஆள வந்தீரோ?"
சோழ மக்கள் முணுமுணுத்தார்.

பல்லவ மன்னன் சபை முன்னால்
சோழப் புலவர் துயர் சொன்னார்.

"மன்னா உனக்கு யுத்த வெறி
மண்ணில் பரவுது கெட்ட நெறி
தட்டிக் கேட்டு நிறுத்திவிடு
வெட்டிப் போட்டு அடக்கிவிடு!"

பல்லவன் நெற்றி சுருங்கியது.
"வயதப்படி புலவரே!
வாலிப வயது!
கட்டிளம் பாவையரை
தொட்டிழுக்கும் வயது!
முத்தத்தில் நனைந்து, மோகத்தில் கலந்து
பித்தத்தில் புலம்பித் திரியும் வயது!"

புலவர் புருவம் நெரித்தார்.
"நன்றாக இருக்கிறது நியாயம்
வண்டாக அலையும் படைக்கு
நன்றாக கற்பிக்கிறாய் நியாயம்!
பூக்கள் புயலாகும்
பூங்கொடிகள் பொல்லாத பாம்பாகும்."

சாபமிட்டதுபோல சொல்லிவிட்டு
சபையை விட்டு சென்றுவிட்டார்.

பல்லவ படைத் தலைவன்-அந்த
பல்லழகியை பருகினான் பார்வையால்!

பூங்கொத்து கையில் ஏந்தி
பூஞ்சிரிப்பு உதட்டில் ஏந்தி
போர்க் கணைகள் போல் இரண்டு
பூங்கணைகள் நெஞ்சில் ஏந்தி
போர் விழியால் போதை சிந்தி
பூந் தேகத்தை அசைத்து வந்தாள்!

"அம்பினும் கொடிய விழியாளே!
பாம்பிலும் கொடிய படையாளே!
குலைந்த சடைதான் கார் முகிலே
கலைந்த உடைக்குள் பார் எழிலோ
விளைந்த கனிகள் இரு பெரிதோ!
வளைந்த புருவம் போர் வில்லோ!"

பல்லவ படைத் தலைவன்
பசப்பு மொழிகள் வீசினான்.

பாவை நகைத்தாள்
பால் குடமென அசைந்தாள்.

'குலுங்கி ஒரு நடை நடந்தாயே
உலுக்கி என் உயிர் கடைந்தாயே!
வழுக்கி விழுந்தேன் மோகத்தில்
தளுக்கி மயக்கி சாய்த்தாயே!
விழுங்கிக் கொண்டாய் விழியாலே
விழுந்து போனேன் உன் மேலே!"

"பல்லவ தளபதி-எப்போது
பாடல் இயற்றக் கற்றார்?"



பாவை தொடுத்தாள்
ஒரு வினா!

"பூவைக் கண்டால்
வண்டு தேனெடுக்கிறது.
யார் கற்றுக் கொடுத்தார்கள்?
ஜோடிக் குயில்கள்
கூடிக் களிக்கின்றனவே!
யார் சொல்லிக் கொடுத்தார்கள்?
பெண்ணைக் கண்டால்
கண்கள் வியக்கின்றனவே
யார் கற்றுத் தந்தார்கள்!

கலா ரசிகன் நான்.
நிலாவை வெல்லும் அழகி நீ
பாடலும் வரும். ஆடலும் வரும்
சம்மதித்தாய் என்றால்
மதி மயக்கும் சரசமும் வரும்!"

"சரசத்தில் மன்னரோ
பல்லவன் தளபதி?"

"கற்றுக் கொடுப்பதும் உண்டு
கற்றுக் கொள்வதும் உண்டு.
கற்றுக் கொடுக்க காரணம்
பெற்றுக் கொண்ட அனுபவம்.
கற்றுக் கொள்ள காரணம்
தினம் கிடைக்கின்ற புது முகம்!"

"சபாஷ்!
நன்றாகப் பேசுகிறீர்கள்!"

"கண் பார்த்ததை
வாய் பேசும்.
வாய் பேச கைசெய்யும்
கண்பார்க்க கை தாவும்"

"பார்க்கலாம், பேசலாம், பருகலாம்
பள்ளி கொண்டு தழுவலாம்
துய்க்கலாம், தொடரலாம் துயிலலாம்"
நெருங்கினாள். நீட்டினாள் பூங்கொத்தை!

பூங்கொத்தை கொடுத்தாள் பூவை.
வாங்கித்தான் முகர்ந்தான் தளபதி
பாய்ந்து கொத்தித்தான் விட்டது பூநாகம்
மாய்ந்து போகும் முன் தவித்தான் தளபதி.

"ஏன் பெண்ணே? ஏன் பெண்ணே.
நான் உன்னை என் செய்தேன்?"

பாவை சிரித்தாள்;
"பெண்களை பேதை என நினைத்தாய்
பூக்கள் என அலட்சியமாய் மிதித்தாய்
தண்டனையை தந்தேன் நீ பெற்றாய்!"

தளபதி கதறினான்;
"என் காவல் எங்கே?
சேனை எங்கே?
யாரங்கே பிடியுங்கள் இவளை!"

பாவை சிரித்தாள்
"பின்னால் கேடுவரும் என்று
முன்னால் அறிந்து நடக்காதவன்
தன்னைத் தற்காத்தலும்
முடியாது போகும் பின்னால்!"

பல்லவ தளபதி
மரணத்தை தழுவினான்.
மங்கையர் பலரை தழுவிய உடலில்
எங்கும் நிறைந்தது நீலமாய் விஷம்.

தளபதிக்கு
பாவை சொன்ன கடைசி விளக்கத்தை
பதினென் கீழ்க்கணக்கு நூலில்
முதுமொழிக் காஞ்சி
என்னும் புலவரும் கூறுகிறார்.
"மேல்வரவு அறியாதோன்
தற்காத்தல் பொய்"

---

## ஸ்போர்ட்ஸ்

## இன்னிங்ஸ் 1 —விக்கெட் 9

உலக டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றிலேயே ஒரு இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களுக்கு மேல் வீழ்த்தியவர்கள் 14 பேர். அவர்களின் விபரப் பட்டியல் இதோ:

| வீரர் | நாடு | விக்கெட்டுக்கள் | கொடுத்த ஓட்டங்கள் | எதிரணி |
|---|---|---|---|---|
| 1. ஜே.சி.லேகர் | இங்கிலாந்து | 10 | 53 | அவுஸ்திரேலியா |
| 2. ஏ.லோமான் | இங்கிலாந்து | 9 | 28 | தென் ஆபிரிக்கா |
| 3. ஜே.சி.லேகர் | இங்கிலாந்து | 9 | 37 | அவுஸ்திரேலியா |
| 4. றிச்சர்ட் ஹாட்லி | நியூஸிலாந்து | 9 | 52 | அவுஸ்திரேலியா |
| 5. அப்துல் காதர் | பாகிஸ்தான் | 9 | 56 | இங்கிலாந்து |
| 6. டெவன் மல்கம் | இங்கிலாந்து | 9 | 57 | தென் ஆபிரிக்கா |
| 7. ஜே.எம்.பட்டெல் | இந்தியா | 9 | 69 | அவுஸ்திரேலியா |
| 8. கபில் தேவ் | இந்தியா | 9 | 83 | மே.இ.தீவுகள் |
| 9. சர்ஃபிராஸ் நவாஸ் | பாகிஸ்தான் | 9 | 86 | அவுஸ்திரேலியா |
| 10. எம்.நொறிகா | மே.இ.தீவுகள் | 9 | 95 | இந்தியா |
| 11. எஸ்.பி.குப்தா | இந்தியா | 9 | 102 | மே.இ.தீவுகள் |
| 12. எஃப்.பார்னேஸ் | இங்கிலாந்து | 9 | 103 | தென் ஆபிரிக்கா |
| 13. எஃப்.டேஃபீல்ட் | தென் ஆபிரிக்கா | 9 | 113 | இங்கிலாந்து |
| 14. ஏ.மெய்லி | அவுஸ்திரேலியா | 9 | 121 | இங்கிலாந்து |

* உலகிலேயே ஜே.சி.லேகர் மட்டும் தான் டெஸ்ட் போட்டி ஒன்றில் அதிகமான விக்கெட்டுக்களை வீழ்த்தியவர். முதலாவது இன்னிங்சில் 9 விக்கெட்டுக்கள் இரண்டாவது இன்னிங்ஸில் 10 விக்கெட்டுக்கள் என அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 19 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

## முதலிடத்தில் மார்ட்டினா

உலக டென்னிஸ் அரங்கில் சுவிற்ஸர்லாந்து வீராங்கனை மார்ட்டினா ஹின்ஜிஸ் 6426 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

இரண்டாவது இடத்தில் 3559 புள்ளிகளுடன் செக் நாட்டு வீராங்கனை ஜனா நொவட்னாவும், 3வது இடத்தில் மோனிக்கா செலஸ் 3448 புள்ளிகளுடனும் உள்ளனர்.

முன்னாள் உலக நம்பர் வன் வீராங்கனையான ஸ்டேபி கிராஃப் பல போட்டிகளில் விளையாடாததால் 6வது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார்.

## டைசனின் வாரிசு

உலகப் புகழ்பெற்ற குத்துச் சண்டை வீரரான மைக் டைசன் சிறைத்தண்டனை அனுபவித்த போது, அவருக்கும் மோனிக்கா டர்னர் என்ற டாக்டருக்கும் இடையே காதல் மலர்ந்தது.

டைசன் சிறையில் இருந்து விடுதலையானதும் மோனிக்காவை முறைப்படி திருமணம் செய்து கொண்டார்.

இவர்களுக்கு அண்மையில் ஆண் குழந்தை ஒன்று பிறந்துள்ளது. குழந்தை பிறந்த மகிழ்ச்சியை டைசன் உறவினர்களுடன் கொண்டாடினார். மோனிக்கா தற்போது டைசனுடன் சிறு மனஸ்தாபம் கொண்டு தனியாக இருக்கிறார். குழந்தை பிறந்துவிட்டதால் மனஸ்தாபத்தை மறந்து ஒன்று சேரக்கூடும்.

## இவர்கள் தான் அவர்கள்



1 பிரசாந்த்



2 கமல்



3 நாசர்



4 ஊர்மிளா



5 ரேவதி

---

## சிந்தியா பதில்கள்

* இலங்கை கிரிக்கெட் அணியின் உலக சாதனை பற்றி என்ன சொல்கிறீர்கள்?

கே. தவசீலன், கண்டி.

"அந்தக் குட்டித் தீவில் இத்தனை கெட்டிக்காரர்களா?" என்று உலகம் வியப்போடு எட்டிப்பார்க்கிறது. நம் அரசியல் கிரிக்கெட் காரர்களோ 'அந்தக் குட்டித்தீவில் இத்தனை இடியப்ப சிக்கலா?' என்று உலகம் கசப்போடு கவனிக்க வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

■ ■

* இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் சச்சின் டெண்டுல்கரின் பதவி மாற்றப்படுமா?

வி. றொபேர்ட், நீர்கொழும்பு.

தோல்விகளுக்கு காரணம் டெண்டுல்கர் என்றால் அதைவிட அபத்தம் வேறென்ன இருக்கிறது? இப்போதுள்ள சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் இரண்டாவது இடத்தில் இருக்கிறார் சச்சின். சமீபத்தில் டெஸ்ட் போட்டிகளில் அடுத்தடுத்து போட்ட சதங்கள் மூலம் வெற்றி நாயகனாக நடைபோடுகிறார். ஆகவே பதவிக்கு ஆபத்து வரும் என்று நான் நினைக்கவில்லை.

■ ■

* "புலிகளோடு பேசத் தயார்" என்று நீதியமைச்சர் பீரிஸ் மறுபடி கூறியிருக்கிறாரே?

எச். காசிம், கொழும்பு-15.

"பேசமாட்டோம்!" என்று சொன்னால் தானே கெட்டபெயர்? நீதியமைச்சர் புத்திசாலி.

■ ■

* திருமலை மாவட்ட பா.உ.விடயத்தில் தமிழர் கூட்டணியினர் இன்னமும் ஏன் முடிவு செய்யவில்லை?

ஜெ. வினோதன், திருக்கோணமலை.

கூட்டணியின் செயலாளர் நாயகம் சம்பந்தன்தான் அடுத்த இடத்தில் இருக்கிறார். பதவியை ஏற்க அவர் விரும்பாவிட்டால் அடுத்தவர் பதவி ஏற்க கையொப்பம் போட வேண்டிய பொறுப்பிலும் அவரே உள்ளார். பதவி ஏற்க விருப்பம் இல்லையென்றால் இத்தனை தாமதம் ஏன்? 'ஆழம் பார்க்கிறார்' என்று சில செய்திகள் தெரிவிப்பது உண்மை தான். ஆழம் பயங்கரம் என்று தெரிந்தால் மட்டும் அடுத்தவருக்கு விட்டுக் கொடுப்பார் என்று நினைக்கிறேன்.

■ ■

* சந்தனக் கடத்தல் வீரப்பனையும் கருணாநிதி கைவிட்டுவிடுவார் போல இருக்கிறதே?

ஆர். மதிவாணன், புத்தளம்.

வீரப்பன் கிடந்தான் விடுங்கள்! முன்னாள் தமிழ்நாடு ஆளுநர் பர்னாலா. இவர் முன்பு தி.மு.க. ஆட்சியை கலைக்க மறுத்தவர். அதனால் ஆளுநர் பதவி போனாலும் போகட்டும் என்று மத்திய அரசுடன் மல்லுக்கட்டிய நேர்மையாளர். இந்தியத் துணை ஜனாதிபதித் தேர்தலில் இம்முறை பர்னாலா போட்டியிடுகிறார். 'உங்களுக்கே ஆதரவு என்றாராம்' கருணாநிதி. இப்போது திடீரென்று கைவிட்டுள்ளார். பர்னாலா புலம்புகிறார்: அரசியலில் நன்றியாவது மண்ணாங்கட்டியாவது. போங்கள்!

■ ■

* வீரமும் வேண்டும் விவேகமும் வேண்டும் என்றால், அந்தக் காலத்தில் வீரத்துக்கு மட்டும் ஏன் போட்டி வைத்தார்கள்?

இ. சாந்தகுமார், மட்டக்களப்பு.

விவேகத்துக்கும் போட்டி வைத்திருக்கிறார்களே! கேளுங்கள் கதையை:

சீனநாட்டு அரசகுமாரி ஒருத்திக்கு தனக்குவரும் கணவர் அறிவுத்திறன் மிக்கவனாக இருக்கவேண்டும் என்று ஆசை. அதற்காக ஒரு போட்டி வைத்தாள்.

"ஒரு கிண்ணத்திலே எண்ணெயை முழுமையாக நிரப்பி ஒரு தட்டில் வைக்கப் படும். அதைக் கவிழ்க்காமல், சாய்க்காமல், கிண்ணத்தில் ஓட்டை போடாமல் அந்த எண்ணெயைக் காலி செய்ய வேண்டும்," என்று அறிவித்தாள்.

பலர் முயன்று தோற்றுப் போனார்கள். ஆனால் ஒருத்தர் மட்டும் புத்தியைக் கத்தியாக பாவித்து வெற்றி பெற்றுவிட்டார். எப்படி வெற்றிபெற்றார் தெரியுமா?

அந்தக் கிண்ணத்தின் மேல் குறுக்காக ஒரு மெல்லிய கம்பியை வைத்து, அதிலே திரியைப்போட்டு எண்ணையில் மூழ்கவைத்து மறுமுனையில் தீமேற்றினார். திரி எரிந்து எண்ணெயை உறிஞ்சிவிட்டது.

■ ■

* முத்தம் கசப்பது எப்போது?

ஜி.எம்.பசீர், மட்டக்களப்பு.

சித்தம் விரும்பாதபோது!

■ ■

* 'சூரியவம்சம்' படத்தின் வெற்றிக்கு காரணம் என்ன?

அ. காந்தன், கொழும்பு-09.

சலிப்பில்லாத காட்சியமைப்பு.

■ ■



கீர்த்தி ரெட்டி

* 'தேவதை' படநாயகி கீர்த்தி ரெட்டி எப்படி சிந்தியா? முன்னேறுவாரா?

பி. சைலஜா, மோதர.

'நந்தினி' யில் உரித்துவிட்டார்கள். முன்னேறலாம். உச்சிக்குச் செல்வாரா என்பது தான் சந்தேகம்.

■ ■

* நம்நாட்டுக்கு இன்று உடனடித் தேவை யானது என்ன?

தி. பாலச்சந்திரன், காரைதீவு.

தையல் ஊசி! என்ன முழிக்கிறீர்கள்?

கதையைக் கேளுங்கள்: இது சுவாமி சுகபோதானந்தா சொன்ன கதை.

அவர் ஒரு பெரிய துறவி. அவரை அரசர் சந்தித்தார். அந்தத் துறவி துணிகள் தைத்துக் கொடுக்கும் தொழில் செய்பவர். அதனால் வைரங்கள் பதித்து அழகுபடுத்தப் பட்ட தங்கக் கத்தரிக்கோல் ஒன்றை துறவிக்கு பரிசாக கொடுத்தார் அரசர்.

துறவியோ அதனை வாங்க மறுத்து விட்டார். அரசருக்கு ஆச்சரியம் ஒரு பக்கம்; துறவிக்கு பரிசுகொடுக்க முடியவில்லையே என்று வருத்தம் மறுபக்கம்.

"உங்களுக்கு நான் என்ன கொடுத்தால் அது தங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்?" என்று கேட்டார் அரசர்.

"ஒரே ஒரு ஊசி இருந்தால் கொடுத்து விட்டுப்போ!" என்றார் துறவி.

உடனடியாக ஒரு ஊசியை தருவித்துக் கொடுத்தார் அரசர். தான் ஊசி கேட்டதற்கு துறவியே விளக்கம் சொன்னார்:

"நான் கத்தரிக்கோல் வேண்டாம் என்று சொன்னதற்கு காரணம், அது வெட்டும், பிரிக்கும். ஆனால் ஊசியோ தைக்கும். அதாவது இணைக்கும்." இன்று நமக்குத் தேவை கத்தரிக்கோல் அல்ல!

■ ■

* இந்தக்கால பிள்ளைகளின் அறிவு வளர்ச்சி பாராட்டும்படியாக இருக்கிறதா? இல்லையா?

பி. பரமநாயகம், திருக்கோவில்.

இந்தக் கதையைக் கேட்டு ஒரு முடிவு பண்ணுங்க!

தந்தையிடம் மகன் கேட்டானாம்:

"ஏம்பா? அப்பா சொல்வதைத்தான் பிள்ளைகள் கேக்கணுமா? பிள்ளைகள் சொல்வதை அப்பாக்கள் கேட்கப்படாதா?"

அதற்கு தந்தை சொன்னார்,

"அப்படி இல்லேப்பா. பிள்ளைகளை விட அப்பாக்களுக்குத்தான் அறிவும், அனுபவமும் அதிகம்."

"அப்படியா?" என்றான் மகன்.

"ஆமாம்" என்றார் தந்தை.

"சரி, ரேடியோவைக் கண்டுபிடித்தது யார்?" என்றான் மகன்.

"மார்க்கோனி" என்றார் தந்தை.

உடனே மகன் கேட்டான்;

"அதை ஏன் அவங்க அப்பா கண்டு பிடிக்கவில்லை?"

■ ■

* டியர் சிந்தியா! என் மனைவி என்மீது சந்தேகப்படுகிறாள்: என்ன காரணம்? (நான் சபலக்காரனல்ல)

கே. அருந்தவன், கொழும்பு-06.

மனைவிக்கு கணவனைப் பிடிக்காவிட்டால் சண்டைவரும். மனைவிக்கு கணவனைப் பிடித்திருந்தால் சந்தேகம் வரும். இது யாரோ ஒரு அனுபவப்பட்டவர் உதிர்த்து விட்ட தத்துவமுத்து. நீங்களும் எடுத்துக் கொள்ளலாம்.

■ ■

* தமிழ்ப் படவுலக சச்சரவுகள் ஓய்ந்து விட்டதா?

ஜி. ராகவன், பண்டாரவளை.

மூன்றுமுறை பேச்சு நடத்திய கருணாநிதியாலேயே முடியவில்லை. ரஜினியும் முயன்று தோற்று ஒதுங்கிவிட்டார். குருவை எதிர்த்து நிற்கிறார் கமல். "நானும் ஒரு தொழிலாளி; அதுதான் தொழிலாளர் பக்கம் நிற்கிறேன்!" என்கிறார் கமல்.

■ ■

* சமீபத்திய படங்களில் அசத்தல் எது?

ஆர். கருணாகரன், கொழும்பு-08.

மிக சமீபத்தில் வெளியானதில் 'பகைவன்'. சத்யராஜ் 'வில்லன்' பாணியில் வெளுத்துக்கட்டியிருக்கிறார்.



படிப்பகம்

# இராமாயணம் அங்கம் 96

# இராமதூதனும் இலங்கை வேந்தனும்

இராமபிரான் தனது பர்ண சாலை அமைக்கப் பட்டிருந்த குன்றின் மீது நின்ற வண்ணம் இலங்கை மாநகர்க் கோட்டையின் வட வாயிலை ஒட்டிய பிரதேசத்தில் நடைபெறும் யுத்தக் காட்சிகளை உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இளைய பெருமாளாகிய இலக்குமணன் இராவணனுடன் போரிடும்போது காட்டிய வீரதீர பராக்கிரமச் செயல்களைப் பார்த்துப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தார். இலக்குவனின் கணைகளால் பல்லாயிரக்கணக்கில் அரக்கர் படையினர் மாண்டு மடிந்ததையும், யானை, குதிரைப் படைகள் அடியோடு நாசமடைந்ததையும் தேர்கள் சுக்கு நூறாகச் சிதறித் தெறித்ததையும் கூட அவர் கண்டார். இலக்குவனின் அம்பறாத்தூணியிலிருந்து மேற்கொண்டு அம்புகளை எடுக்க முடியாதவாறு இராவணன் தன் பாணத்தினால் அம்பறாத்தூணியை அறுத்தெறிந்தமையினால் இலக்குமணன் செயலிழந்து நின்றதையும் பார்த்துக் கொண்டேதானிருந்தார்.

இலக்குவனின் நிலைகுலைந்த தன்மையினைக் கண்மூடி விழிப்பதற்குள் ஆஞ்சநேயர் இராவணன் முன் பாய்ந்து சென்று நின்றதையும் இராமபிரான் காணவே செய்தார்.

★★★

## ஆஞ்சநேயரின் நிபந்தனை

இராவணனும் ஆஞ்சநேயரும் நேருக்கு நேர் நிற்பதைக் கண்ட அரக்கர் படையும் வானரப்படையும் தாங்கள் அதுவரை புரிந்த போரை நிறுத்தியவர்களாக, அடுத்து என்னதான் நடக்கப்போகிறது என்று ஆங்காங்கே நின்றவண்ணம் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"இராவணா! நீ நிகரில்லாத வீரன்; மூன்று உலகங்களையும் வென்றவன்; தேவர்களையே அடிமை செய்தவன்; உன் புகழ் ஈரேழு பதினான்கு உலகங்களுக்கும் பரந்தது. சிவபிரான் உறையும் கைலையங்கிரியையே உன் தோள்களால் பெயர்த்தவன்; அப்பேற்பட்ட உன்னுடன் சாதாரண குரங்காகிய நான் நேராகப் போரிடக் காத்திருக்கிறேன். உன் தோள் வலிமை எனக்கு நன்கு தெரியும். என் வலிமையையும் உன்னிடம் காட்ட நாட்டம் கொண்டுள்ளேன். வேறு எந்த ஆயுதமும் ஏந்தாமல் இருவரும் போர் புரிவோம். உன்னுடைய மாமேருபோன்ற மார்பிலே எனது கையால் ஒரே ஒரு குத்துக் கொடுக்கிறேன். அதனை நீ தாங்கி மீள்வாயானால் என் மார்பிலே நீ ஒரு குத்துக் கொடுக்கலாம். அக்குத்தை நான் தாங்கிப் பிழைத்துக் கொள்வேன்! அதற்குமேல் உன்னுடன் நான் போர் புரிய வரமாட்டேன்! இதுதான் என் நிபந்தனை!"

இவ்வாறு ஆஞ்சநேயர் கூறியமையால் இலங்காதிபன் சிந்தனை வயப்பட்டான். ஆஞ்சநேயர் தன்னை மிகக் கேவலமாக மதித்து ஏளனம் செய்கிறாரா? என்று கூட எண்ணலானான். எத்தனையோ போர் முனைகளைக் கண்ட தனது பராக்கிரமத்தை இந்த வானரம் எடை போடத் துணிந்து விட்டதே என்ற எண்ணம் ஒரு புறம் மன வேதனையை அளித்தது. அதே வேளையில் தனது பேராற்றலும் பெருமையும் தெரிந்திருந்தும் துணிவுடன் பொருத வந்திருக்கும் ஆஞ்சநேயரின் வீரத்தையும் குறைகூற முடியவில்லை.

ஆஞ்சநேயர் இராவணனைப் பார்த்துக் கூறியதாக கம்பர் பெருமான் காட்டும் காட்சி இது:

**என் தோள் வலி அதனால்**
**எடுத்து யான் ஏற்றவும் இறவா**
**நின்றாய் எனின் நீ பின் எனை**
**நின் கைத்தல நிரையால்**
**குன்றே புரை தோளாய் மிடல் கொடு**
**குத்துதி குத்தப்**
**பொன்றேன் எனின் நின்னோடு எதிர்**
**பொருகின்றிலென் என்றான்.**


*(யுத்த காண்டம்-1123)*

**பொருள்:**

*"என்னுடைய தோளின் வலிமையினால் உன்னுடைய மலையைப்போன்ற மார்பிலே நான் குத்தியபின் நீ சாகாதிருப்பாயானால் நீ என்னுடைய மார்பிலே குத்தவேண்டும். உன்னுடைய குத்திலே நான் சாக மாட்டேன். எனினும் மீண்டும் உன்னை எதிர்த்துப் போரிடமாட்டேன்," என்று அனுமன் கூறினார்.*

## அனுமனைப் பாராட்டிய இலங்காதிபன்

ஆஞ்சநேயர் இவ்வாறு கூறியதைக் கேட்ட இராவணன் உண்மையில் அதிர்ந்து போனான். இவ்வாறான- தெளிவான வீர உரையை இதுகாலவரை எவருமே இராவணன் முன்னின்று கூறியதில்லை. இந்த உரைகேட்டு மகிழ்ந்த இராவணன் மனதார அனுமனைப் பாராட்டினான்.




"உண்மையில் நீ ஒரு வீரன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஒரு சுத்த வீரனுக்குரிய வார்த்தைகளையே நீ புகன்றாய். இவ்வுலகம் உள்ளளவும் உனது புகழ் நீடித்திருக்கும்! நால்வகைப் படைகளுடன் வந்திருக்கும் என் முன், எந்த வகை ஆயுதமுமின்றி வந்த உன் துணிச்சலைப் பாராட்டுகிறேன். இதோ என் மார்பிலே உன் கையால் ஓங்கிக் குத்துவாயாக!" என்று தன் மார்பிலே அணியப் பெற்றிருந்த கவசத்தை விலக்கி திறந்த மார்புடன் இராவணன் நின்றான்.

ஆஞ்சநேயர் காலம் தாழ்த்தாமல், இராமநாமத்தை தியானித்த வண்ணம், தனது இரு கைகளுக்கும் போதிய வலுவைத் திரட்டி ஓங்கி இராவணனின் மலைபோன்ற மார்பிலே ஒரு குத்துக் கொடுத்தான்.

ஆஞ்சநேயர் இராவணனின் மார்பிலே தான் குத்தினார். ஆனால் அந்தக்குத்தின் அதிர்ச்சியால் அண்டசராசரமே அதிர்ந்தது. பல மலைகள் இடிந்து விழுந்தன. அரக்கர் படையிலும் வானரப் படையிலுமுள்ள பலவீரர்கள் அதிர்ச்சி தாங்காது தரையில் விழுந்தனர். பல யானைகள் மற்றும் வனவிலங்குகள் ஆகியவையும் நிதானமிழந்து தடுமாறின.

இராவணனின் மார்பில் மாபெரும் தீப்பிழம்பு மோதியது போன்ற உணர்வு ஏற்பட்டது. அவனுடைய ஆபரணங்களில் ஒளி வீசிக் கொண்டிருந்த நவமணிகள் எல்லாமே கழன்று விழுந்தன. பத்துத் தலைகளும் ஒருதடவை தடுமாறிச் சுற்றிச் சுழன்றன. மாமேரு மலையானது இடம்பெயர்ந்து அதிர்ந்தது போன்று அவனுடைய உடல் ஆட்டம் கண்டது. ஒரு கணநேரம் அவன் மயங்கவே செய்தான். இருப்பினும் உடனடியாகத் தெளிவடைந்தான். தன்னைக் குத்திய ஆஞ்சநேயர் ஆடாமல் அசையாமல் நிற்பதைக் கண்டான். "வீரனே! என்முன்னே பிரம்மதேவனே வந்து நின்று, 'நீ தளர்ச்சியடையக் கடவது!' என்று சாபமிட்டாலும் அதற்காகத் தயங்க மாட்டேன். இதோ நீ கொடுத்த ஒரே குத்திலே நான் நிலை குலைந்தவனாகி விட்டேன். நீ கூறியதுபோல் நீ என்னைக் குத்திவிட்டாய். அடுத்து நான் உன்னைக் குத்தப் போகிறேன். என்னுடைய ஒரே குத்தினைத் தாங்கி நீ தொடர்ந்தும் உயிர் வாழ முடியாது. அவ்வாறு நீ உயிர் தப்பிப் பிழைத்துக்கொண்டால் உனக்கு உலகில் எவருமே எதிரியாக முடியாது. என்றென்றும் அழியாப் புகழுடன் வாழ்வாய்!"

இவ்வாறு ஆஞ்சநேயரைப் பார்த்துக் கூறினான். ஆஞ்சநேயர் தன் மனத்தால் இராமபிரானைத் தொழுது நன்றி கூறியவராக, "என்னுடைய குத்தினால் நீ சாகவில்லை. என்னுடன் உரையாடிக் கொண்டிருக்கிறாய். இதோ இப்போதே உன் கடனைப் பெற்றுக்கொள்!" என்று கூறி தன்னுடைய பெருங்கடல் போன்று பரந்து விரிந்த மார்பைக் காட்டினார்.

## நிலை தளர்ந்த ஆஞ்சநேயர்

இராவணன் தனது முழுப்பலத்தையும் தனது வலக்கரம் ஒன்றில் திரட்டி ஆஞ்சநேயரின் மார்பில் குத்தினான். இந்தக் குத்தினால்- அஞ்சா நெஞ்சங்கொண்ட மாவீரரான அனுமன் தள்ளாடினார். கைலையங்கிரியே ஆட்டங்கண்டது போலிருந்தது. பூவுலகில் இராவணன் நகரான இலங்காபுரியில் நடைபெறும் யுத்தத்தைக் காண வான வீதியில் தேவர்கள் சூழ்ந்திருந்தனர். தங்களையே முறியடித்த இராவணனின் தாக்குதலை அனுமனால் தாங்க முடியாதெனவே முடிவெடுத்தனர். இராவணனின் குத்தை ஏற்றதும் ஆஞ்சநேயர் சற்றுத் தடுமாறியபோது, தாங்கள் கருதியபடியே அவர் வீழ்ந்து விடுவாரோ என்று மனம் பேதலித்தனர். அவர்கள், அனைவரும் 'இனி என்னதான் நடக்குமோ?' என்று துயருற்றனர். அரக்கர் படையினர், தங்களை வருத்திய வானரம் இத்தோடு ஒழிந்து விட்டது, என்று மகிழ்ச்சி ஆரவாரமிட்டனர். வானர சைனியமும்பெரும் பதைபதைப்புடன் அடுத்து நடைபெறப்போகும் சம்பவத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

ஆஞ்சநேயர் இராமநாமத்தை ஜெபித்த வண்ணம் கண்களை மூடி நின்றார். அவருடைய அங்கமெல்லாம் ஒரு தரம் நடுங்கி ஓய்ந்தது.

இதற்கிடையில் தங்கள் தலைவர்களுள் ஒருவரான ஆஞ்சநேயருக்கு நேர்ந்த கதி கண்டு கலங்கிய வானர வீரர்கள் ஓடோடிச் சென்று அயலிலுள்ள மலைகளைப் பெயர்த்துக் கொண்டு வேகமாக ஓடிவந்தனர். இந்தக் காட்சி ஊழிக்காலத்தில் பிரபஞ்சத்தையே அழிக்கும் மேகங்களால் இருள் சூழ்ந்து வருவதுபோல் இருந்தது. எண்ணற்ற மலைகள் ஒன்றோடொன்று தொடுத்தாற்போல் நெருக்கமாகக் கொண்டுவரப்பட்டு, அத்தனையும் ஒரேவேளையில் இராவணன் பால் வீசப்பட்டன. இம்மலைகள் வீசப்பட்டபோது ஒன்றோடொன்று மோதியது. இதனால் பெரும் தீப்பிழம்புகள் தோன்றின. அப்போதெழுந்த ஒலி பெரும் இடி ஓசைபோல் கேட்டது.

"உலகம் அழியப்போகிறது!" என்று கூச்சலிட்டவண்ணம் அரக்கர் படை நிலை குலைந்து பரந்து ஓடியது.

இந்தப் பேரொலிகள் எழுந்தபோது தான் இராவணனும் தன் நிலை உணர்ந்தான். ஆஞ்சநேயரைக் குத்தியபோது, குத்தினை ஏற்ற ஆஞ்சநேயருக்கு எத்தகைய அதிர்ச்சி தோன்றியதோ அதே அளவு அதிர்ச்சியினை குத்தியவனான இராவணனும் பெற்றான். அதே அதிர்ச்சியான நிலையில் அவன் நிலை தளர்ந்து ஒருவகை மயக்க நிலையிலிருக்கும்போது, திடீரென எழுந்த பெரும் ஆரவாரத்தினால் துணுக்குற்று கண் திறந்தான். எங்கும் இருள் சூழ்ந்து காணப்பட்டது. ஆனால் அவ்விருளானது கதிரவனின் மறைவினால் ஏற்பட்டதல்ல என்பதை கணப்பொழுதில் கண்டு கொண்டான். வானமே இடிந்து தன்மீது விழுவதைப் போன்றிருந்தது. பெருமலைகள் தன்னை நோக்கி இறங்கி வருவதைக் கண்டான். மின் வேகத்தில் தன் பத்துக் கைகளிலும் பத்து வில்களை ஏந்தி பலநூற்றுக்கணக்கான அம்புகளை அம்மலைகளை நோக்கி எய்தான்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 94**

**சரியானவிடை:-** யாழ், தவில், சமனிக்கை, முழவு, உடுக்கை.

1. தி. ஜனனி, வ.இ.ம.ம.வி, வவுனியா.
2. செல்வன் கே. அரவிந்தன், ஸ்ரீ கல்யாணி கங்காராம மாவத்தை, மட்டக்குளி.
3. செல்வன் சி. அமீன், பாண்டியன் குளம், நாச்சியாதீவு, அனுராதபுரம்.
4. பா. அம்பிகா, மே/பா. ச. துரைராஜ், டிரேட்டன் எஸ்டேட், (அலுவலகம்) கொட்டகல.
5. பி. விவேகானந்தன், சேர் ராசிக் பரீட் மாவத்தை, பெரியமுல்லை, நீர்கொழும்பு.

**போட்டி இல. 96** கேள்வி:- ஆஞ்சநேயரும் இராவணனும் ஒருவரை ஒருவர் எவ்வாறு தாக்கினார்கள்?

ஆகஸ்ட் 23 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி – இல.96, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

---

காதிலை பூ கந்தசாமி

காந்தியவாதி என்று தம்மை அழைத்துக் கொள்ளும் நம்நாட்டு அரசியல்வாதி ஒருவரை மகாத்மா காந்தி சந்தித்தால் எப்படி இருக்கும்?

# காந்தியும் ஒரு காந்தியவாதியும்

**காந்தி:** அன்பரே! என்னை யார் என்று தெரிகிறதா?

**காந்தியவாதி:** யாருக்குத் தெரியும்? தீய சக்திகள், விஷமிகள், அவதூறு பரப்புவோர், கூட இருந்தே குழிபறித்து நம் பொதுக்குழுக் கூட்ட செய்திகளை யார் யார் காதிலோ போடும் ஒற்றர்கள்.... இப்படிப் பலர் இருக்கிறார்கள். இதில் நீர் எந்த ரகம். முதலில் அதைச் சொல்லும்?

**காந்தி:** (சிரிக்கிறார்) மடியிலே கனம் இருந்தால்தானே மனதிலே பயம்? நீங்கள் காந்தியக் கட்சிதானே?

**கா.வா:** ஓ.ஹோ நீர் அவதூறு பரப்பும் ஆளாகத்தான் இருக்கவேண்டும்!

**காந்தி:** ஏன் அன்பரே! வார்த்தையால் சுடுகிறீர்? துப்பாக்கிக் குழாயால் சுடுவதைவிட தொண்டைக் குழாயால் சுடுவது கொடிது. கல்லால் அடித்தால் காயம் வரும். குண்டால் அடித்தால் மரணம் வரும். சொல்லால் அடித்தால் மனக் காயம்வரும். அது ஆறாதது. மாறாதது.

**கா.வா:** காந்தியவாதியான எனக்கே கற்றுத் தருகிறீரா? யாரப்பா நீர்? வெளியே காவலுக்கு நிற்கும் பொலிசாரை அழைக்க முன் போய்விடும் இங்கிருந்து!

**காந்தி:** காந்தியவாதிகளுக்கே காவல் தேவையா?

**கா.வா:** ம்....ம்.... காலம் கெட்டுப்போச்சு. அந்தக் கூட்டத்தை மார்ஜினலைஸ் பண்ணும்வரைக்கும் காவலும் தேவை. கவனமும் தேவை. ஓரம் கட்டிவிட்டால் நாங்கள் ஓடியாடித் திரியலாம். இதெல்லாம் உமக்கெதற்கு?

**காந்தி:** அன்பரே! என்னை நன்றாகப் பாரும். யார் என்று இன்னுமா தெரியவில்லை?

**கா.வா:** (உற்றுப்பார்க்கிறார்) இடுப்பிலே ஒரு துண்டு, கையிலே ஒரு தண்டு. எங்கேயோ பார்த்த ஞாபகம். கண்ணாலே கண்ட ஓவியம். சிலையாகப் பார்த்த ஞாபகம்.... அடடே... யூ..யூ... மிஸ்டர் காந்தி?

**காந்தி:** அடியேனேதான் அந்த அபாக்கியவான்.

**கா.வா:** நந்தவனத்து ஆண்டிபோல நொந்த மனத்தோடு நீர் பேசக் காரணம் யாதோ?

**காந்தி:** என் பெயரை யார் யாரெல்லாம் உச்சரிப்பது என்று விவஸ்தையே இல்லாமல் போய்விட்டது. காந்தி காந்தி என்று சொல்கிறீர்கள். காந்தியத்தைக் கொல்கிறீர்கள்.

**கா.வா:** உம்மைத்தான் கோட்சே கொன்று விட்டானே!

**காந்தி:** கோட்சே கொன்றது என் உயிரைத்தான். நீங்களோ என் கொள்கைகளையே கொன்றுவிட்டீர்களே!

**கா.வா:** யாரைச் சொல்கிறீர்?

**காந்தி:** என் பெயரைச் சொல்லிக் கொண்டே என் கொள்கைகளை தங்கள் தங்கள் வசதிக்கேற்ப வளைத்தும், உடைத்தும் உருத் தெரியாமல் தொலைத்தும் கொண்டிருக்கும் அனைவரையும் சொல்கிறேன்.

**கா.வா:** யாரை வேண்டுமானாலும் சொல்லி விட்டுப்போம். எம்மைமட்டும் சொல்ல வேண்டாம். நாங்கள் பழம்பெரும் காந்தியவாதிகள். ஆயுதத்தை நாம் தொட்டதுமில்லை. தூக்கிச் சுட்டதுமில்லை.

**காந்தி:** தொட்டதில்லை, தொடுமாறு சொல்லாமல் சொன்னதுண்டு. சுட்டதில்லை, சுடுமாறு சொல்லாமல் சொன்னதுண்டு.

**கா.வா:** தீயசக்திகள்போல பேசவேண்டாம். நாம் பொதுக்குழுவைக் கூட்டி உம்மையும் தீயசக்தி என்று தீர்மானம் நிறைவேற்ற வேண்டியிருக்கும்.

**காந்தி:** இருப்பதோ சிறு குழு. நாலு பிரமுகர் குழு. அதிலே என்ன பொதுக் குழு! (சிரிக்கிறார்)

**கா.வா:** உமது நல்லநேரம் 97ல் என் முன்தோன்றினீர். இதுவே 77ல் என்றால், எம் விரலசைந்தால் கடல் அலையாய் ஆர்ப்பரிக்க காத்திருந்த இளைஞர் கூட்டத்திடம் சொல்லி உம்மை கடலிலே தூக்கிப் போட்டிருப்போம்.

**காந்தி:** காந்தியவாதிகள் இப்படிக் கனல் கக்கப் பேசலாமா?

**கா.வா:** நாலு எலக்ஷன் கூட்டத்தில் பேசிப் பழகியிருந்தால் நீரும் இப்படித்தான் பேசியிருப்பீர்.

**காந்தி:** வன்முறை தூண்டப்படாதா?

**கா.வா:** நீர் இருந்தபோதுமட்டும் வன்முறை தலைகாட்டாமல் வாலைச் சுருட்டிக் கொண்டோ இருந்தது?

**காந்தி:** அன்பரே! காந்தியம் தெரியாத ஆட்களிடம் கூறும் இந்தக் கதையை! வன்முறை எப்போதெல்லாம் தலை தூக்கியதோ அப்போதெல்லாம் சாத்வீகப் போராட்டத்தையே நிறுத்தி கண்டனம் தெரிவித்தவன் நான்! நீங்களோ உங்கள் விரோதிகளை துரோகிகள் என்கிறீர்கள்! ஒவ்வொருவராய் அவர்கள் சுடப்பட்டபோதும் மீதியிருந்தவர்களையும் துரோகிகள் என்று சுட்டிக்காட்டிப் பேசிக் கொண்டே இருந்தீர்கள்.

**கா.வா:** நாங்கள் சுடச் சொல்லவில்லை?

**காந்தி:** சுடவேண்டாம் என்றும் சொன்னதில்லை. வெறிநாய்களை கட்டி வையுங்கள் இன்றேல் சுட்டு வீழ்த்துவோம் என்று சொன்னீர்கள்.

**கா.வா:** காலி முகத்திடலிலே காடையரால் தாக்கப்பட்ட கோபத்திலே ஏதோ வாய் தவறிச் சொன்ன வார்த்தை அது!

**காந்தி:** அன்பரே! யாம் தென்னாபிரிக்கா சென்றபோது வெள்ளையின நிறவெறியால் என்னை இழுத்துப்போட்டு மிதித்தார்கள். என் முன்வாய்ப் பற்கள் உடைந்தன. அப்படியிருந்தும் வெறிநாய்கள் என்றோ, விட்டால் சுட்டுத் தள்ளிவிடுவேன் என்றோ ஒருநாளேனும் நான் சொன்னதுண்டா? உப்புச் சத்தியாக்கிரகத்திலும், உண்ணாவிரதப் போராட்டங்களிலும் நாங்கள் படாத அடியா? தாங்காத உதையா? அன்பரே! காந்தியம் என்பது எம்மை நாமே வதைத்துக்கொண்டு போராடுதல். நீங்களோ உங்கள் அரசியல் எதிரிகளைக்கூட வார்த்தைகள் மூலம் துரோகிகள் என்றும், எட்டப்பர்கள் என்றும் வதைத்தீர்கள். அவர்கள் உதைப்பட்டதையும், வதைப்பட்டதையும் ரசித்தீர்கள்? இதுதான் காந்தியமா அன்பரே?

**கா.வா:** அன்று பகவத்சிங் குண்டுவீசவில்லையா?

**காந்தி:** அதனை நான் பாராட்டவில்லையே! சிவகுமாரனை தியாகி என்று சிலை திறந்து வைத்தீர்கள். சிவகுமாரன் பாதை வேறு, எங்கள் பாதை வேறு என்று சொன்னீர்களே தவிர, அப்பாதை தப்பான பாதை என்று சொன்னதே இல்லையே!

**கா.வா:** சுபாஸ் சந்திரபோஸ் தனியான படை அமைத்து போராடவில்லையா?

**காந்தி:** அதற்கு ஆதரவாக நாம் வாதாடவில்லையே.

**கா.வா:** நாமும் எப்படைக்காகவும் வாதாடவில்லையே!

**காந்தி:** வெறிகொள் தமிழர் புலிப்படை அவர் வெல்வார் என்பது வெளிப்படை என்றீர்களே!

**கா.வா:** அது....வந்து....கவிதை.

**காந்தி:** புலிப்படை என்ற ஒன்று தோன்றியது தெரியாமலா நீங்கள் தலைவர்களாக இருந்தீர்கள். தெரிந்தும்தானே மேடைகளில் பாட அனுமதித்தீர்கள். 77 தேர்தலின் பின்னர் ஆவரங்காலில் மாநாடு நடத்தினீர்களே ஞாபகம் இருக்கிறதா?

**கா.வா:** எப்படி மறக்கும். கூட்டமேடையில்



கொலுவிருந்தவர்களில் நானும் ஒருவன் தானே.

**காந்தி:** அதே மேடையிலே செல்வி திலகவதி என்ற பெண்மணி என்ன பாடினார் ஞாபகமிருக்கிறதா?

"துவக்கு போரை துவக்குபோரை
என்று சொன்னவனை
சிவக்குமாரை சிவக்குமாரை
மறக்குமா நெஞ்சம்"

என்றல்லவோ பாடினார்.

**கா.வா:** ஏன் பாடலில் என்ன பொருள் குற்றம் கண்டீர்?

**காந்தி:** காந்தியக் கட்சி மேடையிலே துவக்குப் போர் வீரனுக்கு துதி பாடலாமா? மென்முறைக் கட்சி மேடையிலே வன்முறையாம் போர்ப் பாடல் ஒலிக்கலாமா?

**கா.வா:** ஏதோ இளமைத்துடிப்பிலே கேட்டுக் கொண்டிருந்துவிட்டோம். அதனை தயவு செய்து மறந்துவிடுங்கள் மிஸ்டர் காந்தி.

**காந்தி:** தீயை மூட்டுவது சுலபம். அணைப்பது கடினம்! அக்கினிக் குஞ்சென்று தெரிந்தும் காட்டினிடை பொந்தில் வைத்துவிட்டு இன்று காந்தியவாதிகள் என்றும், மென்முறையாளர் என்றும் மேதினிக்கு சொல்லல் முறையோ? சத்தியம் தவறுதல் காந்திய முறையோ? பொய்யினைக் கூறுதல் காந்தியமாகத் தகுமோ?

**கா.வா:** ஐயா! வேண்டுமானால் உங்கள் கைத்தடியால் இரகசியமாக நாலு அடி அடித்துவிட்டுப் போங்கள். நாலுபேர் அறியச் சொல்லிவிடாதீர்கள். எங்கள் பிழைப்பே காந்தியம் என்ற பெயர் பலகையின்கீழ்தான் ஓடிக்கொண்டிருக்கிறது.

**காந்தி:** அன்பரே! கோட்சேயை மன்னிக்கலாம். கோட்சேக்களை மன்னிக்க முடியாது. கோட்சே சுட்டது துப்பாக்கிக் குண்டுகளால்! நீங்களோ காந்தீயவாதிகள் என்று கூறிக் கூறியே பொய் குண்டுகளால் என்னைத் தினமும் கொன்று கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் நவீன கோட்சேக்கள். என் பொறுமைக்கும் எல்லையுண்டு.

*(காந்தி கைத்தடியை உயர்த்துகிறார், காந்தியவாதி அலறியடித்தபடி தூக்கத்தில் இருந்து பதறியெழுகிறார்.)* ■



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/43/NEWS/97)

www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகின் இரகசியம் அதை

எங்களது வண்ண நகைகள் ...

கிளை:

105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

436331




# நழுவிய கனவு

அந்த அற்புதமான கனவு கையருகே வந்து நழுவிப்போனது. சொல்வது சுலபம். அதனை அனுபவித்தால்தான் சோகம் புரியும். ஜெயசூரியாவின் கண்களில் இருந்து பொல பொலவென்று கொட்டிய கண்ணீரில் நழுவிய கனவும் ஈரமாகிப்போனது.

மேற்கிந்திய வீரர் லாராவின் ரன் குவிப்பான 375ஐ தாண்ட மேலும் 36 ரன்கள் மட்டுமே தேவையாக இருந்தன. அப்படியொன்றும் கஷ்டமான பந்துவீச்சை எதிர்கொண்டு ஆட்டமிழக்கவும் இல்லை. அதுதான் பெரிய துரதிஷ்டம். ஜெயசூரியா சாதனை படைக்க முடியாமல் போனதற்கு ஒரு முக்கிய காரணத்தை யாரும் சுட்டிக்காட்டவில்லை.

கிரிக்கெட்டில் துடுப்பாட்டம் என்பது இத்தனை ஓட்டங்களை குவித்தே தீருவது என்று நினைத்தால் நினைத்தபடி முடியும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆடுகளம், பந்துவீச்சு, துடுப்பாட்ட வீரரின் மனோநிலை என்பவற்றைப் பொறுத்ததுதான் அது. அப்படியிருந்தும் நாளை லாராவின் சாதனையை ஜெயசூரியா முறியடிக்கப் போகிறார். அனுமதி இலவசம். என்றரீதியில் அறிவிப்புச் செய்யப்பட்டது. லாராவின் சாதனையை தொட முன்னர் மேலும் இரண்டு வீரர்களை ஜெயசூரியா தாண்டவேண்டியிருந்தது. அப்படியிருந்தும் லாராவின் சாதனையை முறியடிப்பது பற்றியே சொல்லிக் கொண்டிருந்தனர்.

இதெல்லாம் ஜெயசூரியாவின் தோள்களில் சுமையாகிவிட, எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய முடியுமா என்ற பதற்றத்தோடு களம் இறங்கினார். மஹாநாமாவும் ஆட்டமிழந்தபோது பதற்றம் அதிகமாக சுலபமான பந்துவீச்சில் ஆட்டமிழந்தார் ஜெயசூரியா. (340) முதல்நாள் இரண்டு நாட்கள் போல எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் இயல்பாக ஆடியிருந்தால் ஒருவேளை சாதனைச் சிகரத்தில் கால்வைத்திருக்கக்கூடும்.

எனினும் ஒரு இன்னிங்ஸில் அதிக ரன் குவிக்கப்பட்ட 59 வருட உலக சாதனையை, அதுவும் கிரிக்கெட்டின் தாய்வீடான இங்கிலாந்து படைத்த சாதனையை உடைத்துப் போட்டு புதிய உலக சாதனை படைக்கப்பட்டதின் நாயகன் ஜெயசூரியாதான். இரண்டாவது விக்கெட் இணைப்பாட்டத்திலும், தொடர்ந்து இரண்டுநாள் இணைபிரியாமல் ஆடியும் உலக சாதனை படைப்பதிலும் ஜெயசூரியாவின் பங்குதான் அபாரமானது. மஹாநாமவும் சிறப்பாகவே ஆடினார்.

இந்த எளிமையான வீரரை பார்த்தால் இவரால் எப்படியப்பா முடிகிறது? என்று ஆச்சரியப்படவே செய்வார்கள். அவர் கையில் சுழலும் மட்டையில் அது என்ன மாஜிக்?! உள்நாட்டு சாதனை முதல் உலக சாதனைவரை ஒவ்வொன்றாய் உடைத்துப் போடுகிறதே! தொடர்ந்து பல மாஜிக் வித்தைகளை ஜெயசூரியாவின் துடுப்பாட்டம் காட்டத்தான் போகிறது. எளிமையான நட்சத்திரம். ■




ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு

மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

323657


# பற்று

இந்தியாவில் பெரும்பாலும் காணப்படும் குரங்குகளில் இந்த வகையும் ஒன்று. டார்வினின் கோட்பாட்டின் படி குரங்குகளின் வழித்தோன்றல்தான் மனிதர்கள் என்று தெரிவிக்கப்பட்டிருந்த போதும், இக்குரங்குகள் மீது மனிதன் அக்கறை செலுத்துவதில்லை. ஆனால் சுபாவத்தில் இக்குரங்குகள் மனிதர்களுடன் ஓரளவு நட்புடன் பழகவே விரும்புகின்றன. மனிதனோ அவற்றைப் பிடித்து கூண்டிலடைத்து, சங்கிலியால் பிணைத்து வேடிக்கைக்காட்டி பணம் சம்பாதிக்கவும் முற்படுகிறான். இது ஒரு வகையான துன்புறுத்தலேயாகும்.

இந்தியாவிலிருந்து சில வருடங்களுக்கு முன்னர் ஏராளமான- படத்திலுள்ளவை போன்ற குரங்குகள் மேலை நாடுகளுக்கு-பலவகை ஆராய்ச்சிகளுக்காக- ஏற்றுமதி செய்யப்பட்டன. இப்பொழுது இதற்கு இந்திய அரசு தடைவிதித்தமையினால் இவ்வினம் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டது. தாய்-சேய் அணைப்பின் இறுக்கத்தை இப்படத்தில் காணலாம். நெஞ்சத்தில் உள்ள பற்றும் தெரிகிறது. அந்தப் பற்றோடு பற்றியும் இருக்கிறது. பற்றுடன் பற்று. ■





வாரமலர் தினமுரசு


# வதை ரசனை

வேட்டையாடு,விளையாடு.... அந்தக்கால மன்னர்களுக்கு வேறென்ன பொழுதுபோக்கு. காட்டில் மிருகங்களை வேட்டையாடுவது, கட்டிலறையில் பெண்களை வேட்டையாடுவது என்று அலைந்த மன்னர்கள் பற்பலர்.

படத்தில் இருப்பது இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள துங்கார்ப்பூர் மகாராஜாவின் மாளிகை. உள்ளே அமர்ந்திருப்பவர் மகாராஜாவின் மகன் ஹார்ஷவர்த்தன். பழம் பெருமைகளை அசைபோட்டுக் கொண்டிருப்பதைவிட வேறு புது மரியாதை எதுவும் இவருக்கு கிடையாது.

மாளிகையில் இருக்கும் வேங்கைகளின் தலைகள் எல்லாம் இன்று நேற்றல்ல நூறு வருடங்களுக்கு முன்னர் ராஜாக்களால் பொழுதுபோக்காக வேட்டையாடப்பட்டவை. தங்கள் வீரப்பராக்கிரமத்தைக் காட்ட அத் தலைகள் பழுதாகாமல் பாடம் பண்ணப்பட்டு வைக்கப்பட்டன. இன்றுவரை சுவர்களை அலங்கரிக்கின்றன. நேரில் பார்த்தால் உயிர்த் தலைகள் போலவே தெரியும். வேட்டையாடிய மிருகங்களின் தலைகளை வீட்டுச் சுவர்களில் மாட்டிவைத்துக்கொண்டு மீசையை முறுக்குதல் அந்தக் கால பெருமை. மிருகவதை, மனிதவதை இரண்டிலும் சுகம் கண்ட மன்னர்கள் காலம் அது.

சுதந்திர இந்தியாவுக்கு இப்போது 50 வயது. பிரிட்டிஷ்காரர் செல்லும்போது குறுநில மன்னர்களை விட்டுவைத்திருந்தார்கள். இப்போது மஹாராஜாக்களின் அதிகாரம் ஒழிக்கப்பட்டாலும், அவர்களின் வாரிசுகளுக்கு அவர்கள் வாழ்ந்த அரண்மனைகளும், உடமைகளும் விட்டு வைக்கப்பட்டுள்ளன. இதுவும் அப்படித்தான். ■



# ஒவ்வொன்றும் ஒருவிதம்

கார்மேகம் கண்டதும் கானமயில் தன் தோகை விரித்தாடும். அது மகிழ்ச்சியின் வெளிப்பாடு. மயில் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவது மட்டுமே பல கவிதைகளில் சொல்லப்படுகிறது. மயில் மட்டுமல்ல ஒவ்வொரு பறவையும் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த பல்வேறு ரகமான உத்திகளை வைத்திருக்கின்றன.

கடந்த வாரம் 'சில்டோனியான் நிகெர்' என்னும் கிளி இனப் பறவைகளின் காதல் லீலைகள் பற்றிச் சொல்லியிருந்தோம். இந்தவாரம் நாரைக் கொக்குகளின் பக்கம் செல்லுவோம்.

படத்தில் கண்ணுக்கு விருந்தாக காட்சி தருவன ஆபிரிக்க நாடுகளில் காணப்படும் கறுப்புக் கீரீட நாரைகள்.

இந்த கறுப்புக் கீரீட நாரைகள் மட்டுமல்ல, பொதுவாக நாரைக் கொக்குகளுக்கு ஒரு பழக்கம் இருக்கிறது. பொருத்தமான ஜோடி கிடைத்துவிட்டால் நடனமாடத் தொடங்கிவிடுகின்றன. ஜோடி சேரும்போதும் ஒரே நடனமாட்டம் தானாம். நடனமாடும்போது இரு நாரைகளின் அங்க அசைவுகள் ஒரே சீராக இருக்குமாம். (நடிகைகள் போல தாறு மாறான குலுக்கல் நடனமெல்லாம் கிடையாது) சிறு குஞ்சாக உள்ளபோதே நடனமாடப் பழகிவிடுகின்றன. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பது நடன விடயத்தில் நாரைக் கொக்குகளுக்கும் பொருத்தம்.

இன்னொரு விடயம், நம்நாட்டில் நடனமாடுவோர் மயில் நடனம் ஆடுவது போல, ஆபிரிக்க நாடுகளில் நடனமாடுவோர் பலர் நாரைக் கொக்கு நடனமாடுவார்களாம். அங்கு அது பிரசித்தம். ■

1 வது பிறந்தநாள் வாழ்த்து



05.08.97

## செல்வி சேஸனா மகாலிங்கம் (NORWAY)

மகாலிங்கம்-புஸ்பராணி (கலா) தம்பதியினரின் செல்வப் புதல்வி சேஸனா (SESHANA) தனது முதலாவது பிறந்த தினத்தை (05.08.97) NORWAY-OSLO இல் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, NORWAY மாமன் மார்களான ராசன் மாமா, மோகன் மாமா, லிங்கன் மாமா, மற்றும் தீவா அன்ரி, மோகனா அன்ரி, சுகன் சித்தப்பா, LONDON பெரியப்பா குடும்பத்தினர், சித்தப்பா குடும்பத்தினர், FRANCE மாமா, மாமி குடும்பத்தினர் மற்றும் இலங்கை அம்மப்பா, அம்மம்மா, பாமினி அன்ரி, லாமினி அன்ரி, கணேஸ் மாமா, கணேஸ் மாமி, அபிராமி மச்சாள், அருந்ததி மச்சாள், மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் மஹாமாரி அம்மன் அருளால் பேரும் புகழும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை ... பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்லவீதி, ... சமலை அச்சகத்தில் ஆகஸ்ட் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது

படிப்பகம்